வெளியீடு: 11-7-08 Issued: 11-7-08

1550
25-3-09

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 1, 2008—தொகுதி 44—எண் 1**

**Tuesday, the 1st April 2008 —Volume 44—No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

D
V211,31'p08
p08.44'1
228401.

[Price Rs. 3.00

**1–4–2008**

**உள்ளடக்கம்**

பக்கங்கள்


ஆளுநரும் அமைச்சரவையும் ... ... ... iii-viii

Governor and Council of Ministers .. .. .. ix-xiii

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் .. xv-xvii

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) .. .. xix-xxix

1. **வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. *1-39*

2. **தகவல் கோரல்—**

பண்ருட்டி தொகுதி, இடி விழுந்து இறந்தோர் குடும்பத்திற்கு நிதி உதவி .. .. *39-40*

திரு. தி. வேல்முருகன் .. .. *39-40*

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி .. *40*

3. **சிறப்புக் கவன ஈர்ப்பு—**

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குக் கர்நாடகத்தில் ஏற்பட்டுள்ள எதிர்ப்பு .. *40-66*

திரு. ஓ. பன்னீர்செல்வம் .. .. .. *41-43*

திரு. சி. ஞானசேகரன் .. .. .. *43-46*

திரு. ஜி.கே. மணி .. .. .. *46-51*

திரு. சி. கோவிந்தசாமி .. . .. *51-53*

திரு. வை. சிவபுண்ணியம் .. .. .. *53-56*

*திரு. நா. இராமகிருஷ்ணன் .. .. .. *56-58*

திரு. கு. செல்வம் .. .. .. *58-59*

*திரு. விஜயகாந்த் .. .. .. *59-60*

மாண்புமிகு திரு. துரைமுருகன் .. .. *60-66*

பக்கங்கள்

**4. அரசினர் தனித் தீர்மானம்—**

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குக் கர்நாடக வெறியர்களால் தமிழக மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைக் களைந்திடவும், தமிழக மக்களின் உரிமைகளைக் காத்திடவும் மத்திய அரசை வலியுறுத்துதல் .. .. 66-69

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி .. 66-69

**5. வரவு செலவுத் திட்டம், 2008–2009,** .. .. 70-132
**பொது விவாதம்**—தொடர்ச்சி

திரு. டி. ஜெயக்குமார் .. .. .. 70-79

திரு. அருள் அன்பரசு .. .. .. 79-85

திரு. டி. மூர்த்தி .. .. .. 86-91

திரு. சி. கோவிந்தசாமி .. .. .. 91-102

திரு. வை. சிவபுண்ணியம் .. .. .. 103-110

*திரு. வீர. இளவரசன் .. .. .. 110-115

திரு. கு. செல்வம் .. .. .. 115-120

*திரு. விஜயகாந்த் .. .. .. 121-132

**6. அரசினர் தீர்மானம்—**

விதி 32-ஐத் தளர்த்துதல் .. .. .. 132-133

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** .. .. .. 133



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228401
சென்னை-600 008



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**11. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**12. வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு

**13. சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

D
Y24,3,008
008·66·1·

**14. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**15. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**16. குடிசை மாற்று மற்றும் இட வசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

**17. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகை



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

26. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

29. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

30. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

31. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

2. **Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

3. **Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation, Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Health** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Health, Medical Education and Family Welfare

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Housing** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies, Housing, Rural Housing and Housing Development

13. **Minister for Tourism and Registration** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism, Tourism Development Corporation, Registration and Stamp Act

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

16. **Minister for Slum Clearance and Accommodation Control** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees

| | | |
|---|---|---|
| 18. Minister for Labour | .. | **The Hon. Thiru T.M. Anbarasan:** Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment |
| 19. Minister for Hindu Religious and Charitable Endowments | .. | **The Hon. Thiru K.R. Periakaruppan:** Hindu Religious and Charitable Endowments |
| 20. Minister for Handlooms | .. | **The Hon. Thiru NKK. P. Raaja:** Handlooms and Textiles |
| 21. Minister for School Education | .. | **The Hon. Thiru Thangam Thenarasu:** School Education and Archaeology |
| 22. Minister for Commercial Taxes | .. | **The Hon. Thiru S.N.M. Upayathulla:** Commercial Taxes |
| 23. Minister for Environment | .. | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:** Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| 24. Minister for Forests | .. | **The Hon. Thiru N. Selvaraj:** Forests and Cinchona |



| | | |
|---|---|---|
| 25. Minister for Highways | .. | **The Hon. Thiru M.P. Saminathan:** Highways and Ports |
| 26. Minister for Social Welfare | .. | **The Hon. Dr. (Tmt.) Poongothai:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes |
| 27. Minister for Animal Husbandry | .. | **The Hon. Tmt. P. Geetha Jeevan:** Animal Husbandry |
| 28. Minister for Adi Dravidar Welfare | .. | **The Hon. Tmt. A. Tamilarasi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 29. Minister for Fisheries | .. | **The Hon. Thiru K.P.P. Samy:** Fisheries and Fisheries Development Corporation |
| 30. Minister for Dairy Development | .. | **The Hon. Thiru U. Mathivanan:** Milk and Dairy Development |
| 31. Minister for Khadi | .. | **The Hon. Thiru K. Ramachandhiran:** Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி*

## மாற்றுத் தலைவர்கள்#

*திரு. கு. பிச்சாண்டி*

*திரு. குத்தாலம் க. அன்பழகன்*

*திருமதி டி. யசோதா*

*திரு. கி. ஆறுமுகம்*

*திரு. என். நன்மாறன்*

*திருமதி பி. பத்மாவதி*

## செயலாளர்

*திரு. மா. செல்வராஜ்*

# 26-3-2008 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. இணைச் செயலாளர்

திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். .. இணைச் செயலாளர்

திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி சீ. நிர்மலா, பி.காம். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. து. சீனிவாசன், பி.ஏ. .. குழு அலுவலர்

திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர்

திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்



திரு. ம. பன்னீர் செல்வம் .. தலைமை நிருபர்

திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. தலைமை நிருபர்

திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி. .. சார்புச் செயலாளர்

திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

செல்வி எஸ். பிலோமினா, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி–1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடனை |

21. இராமசாமி, திரு. தி. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. .. ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். .. தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. .. வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. .. பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. .. ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. .. நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. .. பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. .. திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். .. ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. .. சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. .. அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. .. தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. .. பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. .. கடலூர்
42. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
44. கண்ணப்பன், திரு. மு. .. தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. .. தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. .. செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. .. காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. .. தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. .. முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. .. அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. .. மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. .. எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். .. கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. .. குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. .. திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. .. அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. .. உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. .. திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. .. வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. .. ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். .. மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. .. திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. .. மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. .. தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. .. விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. .. பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். .. ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. .. பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. .. திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. .. குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். .. நாட்றாம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. .. கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. .. மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. .. கரூர்
105. செல்வம், திரு. கு. .. மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். .. முசிறி
107. செல்வராஜ், திரு. து. .. ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி–2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

| | | |
|---|---|---|
| 154. | பிரபாவதி, திருமதி பெ. | .. தாராபுரம் (செ.வ.) |
| 155. | பிரேமா, திருமதி ஆர். | .. அவினாசி (செ.வ.) |
| 156. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | .. கடையநல்லூர் |
| 157. | புஷ்பராஜ், திரு. செ. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 158. | பூங்கோதை, டாக்டர் (திருமதி) | .. ஆலங்குளம் |
| 159. | பெரியகருப்பன், திரு. கே.ஆர். | .. திருப்பத்தூர் |
| 160. | பெரியசாமி, திரு. இ. | .. ஆத்தூர் |
| 161. | பெரியசாமி, திரு. மு.க. | .. பூம்புகார் |
| 162. | பெரியண்ணன், திரு. பி.என். | .. பெண்ணாகரம் |
| 163. | பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | .. கோயம்புத்தூர் கிழக்கு |
| 164. | பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | .. பொள்ளாச்சி |
| 165. | பொன்முடி, டாக்டர் க. | .. விழுப்புரம் |
| 166. | பொன்னுசாமி, திரு. கே. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 167. | பொன்னுதுரை, திரு. செ. | .. பெருந்துறை |
| 168. | போளூர் ம. வரதன், திரு. | .. செங்கம் (செ.வ.) |
| 169. | போஸ், திரு. ஏ.கே. | .. திருப்பரங்குன்றம் |
| 170. | மகேந்திரன், திரு. இ. | .. உசிலம்பட்டி |
| 171. | மகேந்திரன், திரு. கே. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 172. | மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. | .. திருவோணம் |
| 173. | மணி, திரு. எஸ். | .. பொங்கலூர் |
| 174. | மணி, திரு. கோ.சி. | .. கும்பகோணம் |
| 175. | மணி, திரு. ஜி.கே. | .. மேட்டூர் |



| | | |
|---|---|---|
| 176. | மதிவாணன், திரு. உ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 177. | மலரவன், திரு. தா. | .. கோயம்புத்தூர் மேற்கு |
| 178. | மாணிக்கம், திரு. இரா. | .. குளித்தலை |
| 179. | மாரிமுத்து, திரு. வே. | .. நாகப்பட்டினம் |
| 180. | மாலைராஜா, திரு. என். | .. திருநெல்வேலி |
| 181. | முருகவேல், திரு. கே. | .. முதுகுளத்தூர் |
| 182. | முல்லைவேந்தன், திரு. வ. | .. மொரப்பூர் |
| 183. | மூர்த்தி, திரு. டி. | .. திருப்போரூர் (செ.வ.) |
| 184. | மூர்த்தி, திரு. பி. | .. சோழவந்தான் |
| 185. | மேகநாதன், திரு. த.அ. | .. காவேரிப்பட்டினம் |
| 186. | மோகன், திரு. பெ. | .. ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | .. பாளையங்கோட்டை |
| 188. | யசோதா, திருமதி டி. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. | ரங்கநாதன், திரு. ப. | .. வில்லிவாக்கம் |
| 190. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | .. பட்டுக்கோட்டை |
| 191. | ரவிக்குமார், திரு. து. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 192. | ரவிச்சந்திரன், திரு. எல். | .. சேலம்–1 |
| 193. | ராணி வெங்கடேசன், திருமதி | .. சாத்தான்குளம் |
| 194. | ராதாகிருஷ்ணன், திரு. ல. | .. கோவில்பட்டி |
| 195. | ராமச்சந்திரன், திரு. கா. | .. கூடலூர் |
| 196. | ராமநாதன், திரு. கே.வீ. | .. பவானி |
| 197. | ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். | .. இளையான்குடி |

198. ராஜகுமார், திரு. எஸ். .. மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. .. தொட்டியம்
200. ராஜன், திரு. அ. .. நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. .. ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. .. திருப்பத்தூர்
203. ராஜேந்திரன், திரு. க.சி.க. .. மதுரை மேற்கு
204. லட்சுமணன், திரு. ச. .. போடிநாயக்கனூர்
205. லதா, திருமதி ஜி. .. குடியாத்தம்
206. லீமா றோஸ், திருமதி ரா. .. திருவட்டாறு
207. வசந்தகுமார், திரு. எச். .. நாங்குநேரி
208. வரதராஜன், திரு. ரா. .. விருதுநகர்
209. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
210. விடியல் எஸ். சேகர், திரு. .. காங்கேயம்
211. விஜயகாந்த், திரு. .. விருத்தாசலம்
212. விஜயகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி
213. விஜயகுமார், திரு. பெ.சு. .. போளூர்
214. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. .. செய்யாறு
215. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். .. பேராவூரணி
216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. சேலம்–2
217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
218. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
219. வேலுசாமி, திரு. இல. .. தருமபுரி
220. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்



221. வேலுமணி, திரு. சு.ப. .. பேரூர்
222. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
223. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
225. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்
226. ஜாண் ஜோசப், திரு. ஞா. .. விளவங்கோடு
227. ஜெகன்மூர்த்தி, திரு. மு. .. அரக்கோணம் (செ.வ.)
228. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
229. ஜெயக்குமார், முனைவர் கு. .. நாமக்கல் (செ.வ.)
230. ஜெயபால், திரு. எஸ். .. குளச்சல்
231. ஜெயராமன், திரு. எஸ்.பி. .. வந்தவாசி (செ.வ.)
232. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
233. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
234. ஹசன் அலி, திரு. கு. .. இராமநாதபுரம்
235. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஜி. மாசிலாமணி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, பங்குனி 19

## 2008 ஏப்ரல் 1, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்*
*சொற்றெரிதல் வல்லார் அகத்து."*

மாசற்ற சொற்களைத் தேர்ந்தெடுத்து உரை நிகழ்த்துவோரிடமே அவர் கற்றுத் தேர்ந்த கல்வியின் பெருமை விளங்கும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 31, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**31—**

### துணை மின் நிலையம்

***33662—டாக்டர் க. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, ஜேடர்பாளையத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். கபிலர்மலை தொகுதி, ஜேடர்பாளையத்தில் ஒரு 110/11 கிலோ வோட் துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 1

மேற்படி துணை மின் நிலையம் அமைக்க ஜேடர்பாளையத்தில் இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலம் தேர்வு செய்யப்பட்டு அத்துறையின் அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், நிலம் கையகப்படுத்தப்பட்டு, துணை மின் நிலையம் நிறுவுவதற்கு, வாரிய ஒப்புதல் பெறப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்யப்படும் என்று அறிவித்ததற்கு நன்றி கூறிக்கொள்கிறேன். எனது கபிலர்மலை தொகுதி நீரேற்றுப் பாசனம் வாயிலாக வேளாண் தொழிலைத் தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்ட நிறைந்த விவசாயிகள் வாழும் தொகுதியாகும். விவசாய மின் இணைப்புகள் அதிகமாக இருப்பதால் குறைந்த மின் அழுத்தம் ஏற்படுவது இயல்பாக உள்ளது. குறைந்த மின் அழுத்தம் காரணமாக மின் மோட்டார்கள் பழுது ஏற்பட்டு விவசாயிகள் பெரும் துன்பத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, ஜேடர்பாளையத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க ஆவன செய்வதாக அறிவித்த மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். மேலும், கபிலர்மலையிலே இருக்கின்ற துணை மின் நிலையத்திற்கு திருச்சி மேற்பார்வைப் பொறியாளரின் கட்டுப்பாட்டில் உள்ள புகளூர் துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் செய்யப்படுகிறது. எப்போதெல்லாம் மின் தட்டுப்பாடு ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் திருச்சி மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள், தனது கட்டுப்பாட்டில் உள்ள ஒரே Rural Feeder–ஆன கபிலர்மலை துணை மின் நிலையத்தை load shedding செய்வதற்காக நிறுத்துகிறார்கள். அதனைத் தவிர்த்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தப் புகாரைத் தடுக்க வகை [illegible] நிலையில்தான் கபிலர்மலையிலேயே ஒரு துணை [illegible] மின் [illegible] அ[illegible]தற்கு முடிவு செய்திருக்கின்றோம்.



2008 ஏப்ரல் 1]

துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையில்கூட இந்தியாவிலே எங்கும் இல்லாத அளவுக்கு 90 துணை மின் நிலையங்களுக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். ஆனால் அதற்குத் தேவையான நிலங்கள் கிடைப்பதில்லை. அது சம்பந்தமாக அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சென்னை மாநகராட்சி, அறநிலையத் துறை, Revenue இலாகா போன்ற இலாகா அதிகாரிகளை எல்லாம் அழைத்துப் பேசியபோது, அனைவரும் நிலத்தைக் கொடுப்பதற்கு ஒப்புதல் தருகிறார்கள். ஆனால் market value தரவேண்டுமென்று கேட்கிறார்கள். சென்னை மாநகர ஆணையர் மட்டும்தான் அவரிடத்திலே இருக்கக்கூடிய உபரி நிலத்தை இலவசமாகத் துணை மின் நிலையங்களுக்குக் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கேட்ட அந்த இடத்தில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. அந்தத் துறையோடு பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். அவர்கள் guideline value கொடுத்தால் போதாது; market value கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் கொடுப்பதாக நாங்கள் ஒப்புதல் தந்து, அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நிலம் எங்கு உள்ளதோ அந்த இடத்திலே உடனடியாக துணை மின் நிலையம் அமைக்க ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். பரமத்தி ஒன்றியம், வில்லிபாளையத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்குப் பரிந்துரை செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த ஊர்ப் பகுதியிலே இருக்கிற மக்கள் வில்லிபாளையத்தில் இருக்கின்ற இடத்தைத் தரத் தயாராக உள்ளார்கள். எனவே, அந்த இடத்தை துணை மின் நிலையம் அமைக்க எடுத்துக்கொள்ள ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஏப்ரல் 1

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் அவர்களுடைய தொகுதிகளிலே துணை மின் நிலையங்கள் அமைக்க இடத்தைக் கொடுப்பார்களேயானால், அதற்கான market value கொடுத்து மின்சார வாரியம் நிலத்தை வாங்கி, துணை மின் நிலையம் அமைக்கத் தயாராக இருக்கிறது. எனவே, அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இடத்திலே, ஏப்ரல் மாதத்திற்குள்ளாக அந்த நிலத்தை வாங்குவதற்கு மின்சார வாரியம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரை சாலை, ஈஞ்சம்பாக்கம் ஊராட்சி மன்றத்தில் அடங்கியிருக்கின்ற பகுதிகளில் மின்னழுத்தம் அதிகமாக ஏற்படுகிறது. அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதுபோல, சிட்லபாக்கம் பகுதி வளர்ந்து வருகின்ற பேரூராட்சிப் பகுதியாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. அங்கே மின்னழுத்தம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன். மேற்கு தாம்பரத்திலே, தாம்பரம் நகராட்சிக்குச் சொந்தமான இடம் மின்சாரத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கே துணை மின் நிலையம் அமைக்கப்படுமா என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே அதிகமான துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்ற தொகுதி, தாம்பரம் தொகுதிதான். ஏனென்றால், அங்கே I.T. Park எல்லாம் வந்த காரணத்தினாலே, பழைய மாமல்லபுரம் சாலைக்கு ராஜீவ் காந்தி அவர்களின் பெயரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சூட்டியதற்குப் பிறகு, அங்கே துணை மின் நிலையங்கள் நிறைய வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்களை வைத்தே இதுவரையிலே 3 துணை மின் நிலையங்களைத் திறந்திருக்கின்றோம். புதிதாக 6 துணை மின் நிலையங்கள் அங்கே கொடுப்பதற்கு அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, அவர் மக்களுக்குத் தெரிய வேண்டுமென்பதற்காக ஒரு கேள்வியைக் கேட்கிறார். அவருக்கும், மக்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்; அவர் கேட்ட அத்தனை இடங்களிலேயும் துணை மின் நிலையங்கள் அமைத்துத் தரப்படும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**32—**

### குடிநீர்

***2216—திரு. து. அமரமூர்த்தி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, மேலவரப்பங்குறிச்சி, கீழவரப்பங்குறிச்சி கிராமங்களுக்குக் கொள்ளிடம் ஆற்றிலிருந்து ஆழ்துளைக் குழாய்மூலம் குடிநீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடை—

(அ) ஆம்.

(ஆ) கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, ரூ.2,25,84,000/- திட்ட மதிப்பீட்டில் திருமானூர் ஒன்றியத்தைச் சார்ந்த 29 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டத்தில் அரியலூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள மேலவரப்பங்குறிச்சி மற்றும் கீழவரப்பங்குறிச்சி கிராமங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

[2008 ஏப்ரல் 1

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எப்பொழுதெல்லாம் தமிழக முதல்வராக டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்கிறார்களோ, அப்பொழுதெல்லாம், கிராமப்புறத்திலே வாழ்கின்ற ஏழையெளிய மக்கள், குப்பனும், சுப்பனும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் குடிப்பதற்குப் பல நூறு கோடி ரூபாய் செலவிட்டுக், குடிநீர் வழங்கி உதவியிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு திருமழப்பாடியிலிருந்து அரியலூர் தொகுதிக்கும், செந்துறை, ஆண்டிமடம் தொகுதிக்கும் குடிநீர் வழங்கியிருக்கிறார்கள். அதேபோல, செங்கரையிலிருந்து ஆலத்தூருக்கும், வேப்பந்தட்டைக்கும் குடிநீர் வழங்கியிருக்கிறார்கள். ஒரு காலத்திலே நகர்ப்புற மக்களுக்கு மட்டும் கிடைக்கப்பெற்ற இந்தப் பாதுகாக்கப்பட்ட குடிநீர், இன்றைக்கு ஏழையெளிய மக்களுக்குக் கிடைக்கின்ற வகையிலே அரசு நல்ல திட்டங்களைத் தீட்டி வருகிறது. அதிலும் குறிப்பாக, அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில், கிட்டத்தட்ட 85 சதவிகித மக்களுக்கு இன்றைக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. ஜெயங்கொண்டத்திற்கு மட்டும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிவிட்டால், கிட்டத்தட்ட அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் 100 சதவிகித மக்களும் இந்தப் பாதுகாக்கப்பட்ட குடிநீரைக் குடிப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, வாரி வழங்குகின்ற வள்ளலாக இருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்தையும் இதிலே சேர்த்துக்கொள்வாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்து வைத்திருக்கக்கூடிய அந்தக் கோரிக்கையும் அரசின் சார்பில் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.



2008 ஏப்ரல் 1]

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நேரிலும், கடிதம்மூலமாகவும். . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர், உட்காருங்கள். திரு. து. அமரமூர்த்தி, என்ன? நீங்கள் முதலிலேயே கையைத் தூக்கியிருக்கவேண்டுமல்லவா?

முற்பகல் 9-40

**திரு. து. அமரமூர்த்தி:** கையைத் தூக்கிக் கொண்டுதான் இருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, கேளுங்கள்.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அந்தப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குகின்ற பொறுப்பை ஊராட்சி நிருவாகமே ஏற்று நடத்துமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். ஊராட்சிகளுக்குப் போதுமான நிதி ஆதாரம் இல்லை. ஆகவே, அவற்றிற்கு நிதி ஆதாரம் கொடுத்து, குடிநீர் வடிகால் வாரியத்தின் மேற்பார்வையில் இப்பணி மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகத்தான் இவையெல்லாம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. உறுப்பினர் அவர்கள் ஒரு புதிய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒரு பரிசீலனை அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைச்சர் அவர்களிடத்திலே நேரிலும், ஈரோட்டில் நடைபெற்ற கூட்டத்திலும் கேட்டபடி, வெள்ளக்கோவில் நகராட்சிக்கும், காங்கேயம் பேரூராட்சிக்கும் சேர்த்து, 33 கோடி ரூபாய் செலவிலே ஒரு புதிய திட்டம் தயாரிக்கப்பட்டு, அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாக அறிகிறேன். அது இந்த பட்ஜெட்

மானியத்திலே சிறப்பு அறிவிப்பாக வெளியிடப்பட்டுப் பெருமை சேர்க்கப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் தொகுதியினுடைய மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் எடுத்து வைத்திருக்கக்கூடிய இந்தக் கோரிக்கை, இந்தத் துறைக்கான மானியக் கோரிக்கையில் அதற்குரிய விளக்கம் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**33—**

## சிமெண்ட் தளம்

***27949—திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, கருப்பா நதி நீர்ப்பாசன சீவலன்கால், தேவர்கால், பாம்பன்கால் ஆகிய கால்வாய்களில் மணல் திட்டுக்களை அகற்றி, சிமெண்ட் தளம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கருப்பா நதி நீர்த்தேக்கத்தின்மூலம் பயன்பெறும் அனைத்துக் கால்வாய்களையும் தூர் வாரி lining செய்வதற்கு மதிப்பீடுகள் தயார் செய்யவும், அப்பணிகளை நபார்டு வங்கி நிதியுதவி பெற்று செயல்படுத்த, மதுரை மண்டல நீர்வள ஆதார அமைப்பு பொதுப் பணித் துறைத் தலைமைப் பொறியாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் lining செய்வதைப்பற்றிதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். மூலக் கேள்வியே அந்தக் கால்வாயின் அடிப்பாகத்தில் சிமெண்ட் தளம் அமைக்க வேண்டும் என்பது. ஏனென்றால், சேறும் சகதியுமாக இருக்கிறபோது, அதிலே நீரோட்டம் சரியாக இல்லாது போகிற காரணத்தினாலே, அடியில் அதை சிமெண்ட் தளமாக அமைத்துத் தர வேண்டும் என்கிற ஒரு கோரிக்கையைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கேள்வியாகத் தொடுத்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், அதற்கு சிமெண்ட் தளம் அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா? அதேபோல, வேலூரில் நிக்கல்சன் கால்வாய்க்கு ஒரு பகுதி நிதியைக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 3 கோடி ரூபாய் கொடுத்து, அங்கே சிமெண்ட் தளம் அமைப்பதற்கும், வேலூரில், சத்துவாச்சாரியில் ஓடிக்கொண்டிருக்கக்கூடிய கால்வாய்களுக்கு சிமெண்ட் தளம் அமைப்பதற்கும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் சொன்னது lining செய்கிறீர்களே, அடித்தளத்திற்கு சிமெண்ட் போடுவீர்களா என்று. அதற்கு, மேலும் கொஞ்சம் செலவாகும். வேலூர் நிக்கல்சன் கால்வாய்க்குக் கொஞ்சம் பணம் ஒதுக்கியிருக்கிறோம். அதை நான் இப்போது பீட்டர் அல்போன்ஸ் தொகுதிக்கு ஒதுக்கிவிட்டு, அடித்தளத்திற்கு சிமெண்ட் போட்டுவிடுகிறேன்! (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற கருப்பா நதி . . .

[2008 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Supplementary question-தான் கேட்க வேண்டும்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** Supplementary question-தான் கேட்கிறேன். அணை கட்டப்பட்டு ஏறக்குறைய 30, 35 ஆண்டுகள் ஆன பின்பும், அந்த அணையினுடைய பாசனப் பகுதியாக இருக்கின்ற நிலங்களுக்கு நீரை எடுத்துச்செல்கின்ற பாம்பன்கால், தேவர்கால், சீவலன்கால் போன்ற கால்வாய்கள் பழுதுபார்க்கப்படாமல் உள்ளன. அந்த அணைக்குச் செல்கின்ற சாலை போடப்பட்டு, ஏறக்குறைய 35 ஆண்டுகள் ஆகிவிட்டன. நான் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடமும், பொதுப் பணித் துறைச் செயலாளரிடமும் அந்த அணைக்குப் போகின்ற சாலையின் மற்றும் அந்த அணைக்குச் செல்கின்ற கால்வாய்களின் நிலையையும் எடுத்துச்சொல்லி, புகைப்படங்களையும் காண்பித்து, சாலைகளைப் போடுவதற்காகவாவது நீங்கள் நிதி தாருங்கள் என்று கேட்டேன். கடந்த 2 ஆண்டுகளிலே ஒரு கோடி ரூபாய்க்கு மணல் எடுத்திருக்கிறார்கள். அந்த மணல் எடுத்து விற்ற பணத்தையாவது அந்தக் கால்வாய்க்கும், அந்த அணைக்கும் பயன்படக்கூடிய வகையிலே செலவிட முடியுமா என்றுகூட நான் நம்முடைய பொதுப் பணித் துறைச் செயலாளர் அவர்களைக் கேட்டேன். வருவாய்க்கு, அரசு வேறு பணம் தர வேண்டிய அவசியம் இல்லை. அங்கு இன்னும் அள்ள வேண்டிய மணல் இருக்கிறது. அந்தப் பகுதி விவசாயிகள் அந்தக் கோரிக்கையைத்தான் வைக்கிறார்கள்; அந்த மணலை அள்ளியாவது, அணையிலிருந்து எடுக்கின்ற மணல்மூலம் வருகின்ற வருமானத்தையாவது வைத்து, அந்த அணைக்குப் போக வேண்டிய சாலையையோ அல்லது அந்தக் கால்வாயையோ பழுதுபார்க்கப் பயன்படுத்த கொடுத்தால் என்ன என்று. அந்தப் பகுதியிலிருந்து எடுக்கப்படுகின்ற மணலிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தை அந்தப் பாசன விவசாயிகளுடைய பராமரிப்புச் செலவிற்காவது கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று உங்கள்மூலம் அறிய ஆசைப்படுகின்றேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மணல்மூலம் வருவதில் ஒரு பகுதி அந்தப் பஞ்சாயத்திற்குப் போய்ச்



2008 ஏப்ரல் 1]

சேருகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு இணங்க, அந்தக் கால்வாய்க்குக் கீழே சிமெண்ட் தளம்—கான்கிரீட்—போடுவதற்கு எஸ்டிமேட் போடப்பட்டு அது அரசுக்கு வந்தது. அதிலே சில technical defects இருக்கிற காரணத்தால் மறுபடியும் அதை rectify செய்து அனுப்பும்படி திரும்ப அனுப்பியிருக்கிறோம். விரைவில் அது வரும். பாதை போடுவதைப்பற்றிச் சொன்னார்கள். பாதையிலே இரண்டு வகை உண்டு. பொதுப் பணித் துறைக்குச் சொந்தமாக இருந்தால், எங்கள் கால்வாய்ப் பாதையாக இருந்தால் நாங்கள் போடுவோம். இல்லாவிட்டால் Rural Development, மற்றபடி Highways Department–லே போடுவார்கள். "மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைக் கேட்டார்" என்று காலையிலேதான் எங்களுடைய தலைமைப் பொறியாளர் அவர்கள் என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். நான் அப்பொழுதே சொன்னேன். இதை மறுபடியும் 'maintenance'–லே போடுவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுங்கள் என்று, காலையிலே நான் அவருக்கு அறிவுறுத்திவிட்டு வந்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், வீராணம் ஏரி, பெருமாள் ஏரி என்ற இந்த ஏரிகளிலிருந்து வருகின்ற நீர் வெளியேறுகின்றபோது, கடற்கரையோர கிராமங்களான தியாகவல்லி, நடுத்திட்டு, நொச்சிக்காடு, பரங்கிப்பேட்டை, புவனகிரி, ஆலப்பாக்கம், பெரியகுப்பம், இவையெல்லாம் நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிந்த பகுதிகள்—ஓடைகளின்மூலமாக ஆறுகளின்மூலமாக இந்த நீர் கடலிலே சேருகின்றபோது, சில நேரங்களில் அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்களில் கடல்நீர் மேலே ஏறி கிராமங்களுக்குள்ளே அந்தப் பகுதிகளிலே செல்லுகின்றபோது—அந்தப் பகுதிகளிலுள்ள குடிநீர் முழுவதுமாகக் கடல்நீராக மாறிக்கொண்டிருக்கின்றது. அதனால், அந்தப் பகுதியில் ஒரு தடுப்பணை அல்லது ஒரு ஷட்டர், கடல்நீர் உள்ளே ஏறாத அளவுக்கு அந்த ஆற்றின் மேற்பகுதியில் சிமெண்ட் தளம் அமைக்க வேண்டும். ஆற்றுநீர் வடிவதற்கும், கடல்நீர் மேலே ஏறி உள்ளே வராமல் தடுப்பதற்குமான நடவடிக்கைகளை, தங்கள் துறை அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, மாண்புமிகு அமைச்ச அவர்கள் எதிர்காலத்தில் எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயி அறிய விரும்புகிறேன்.

[2008 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அணைக்குக் கால்வாய் தளம் அமைப்பது என்பது வேறு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது கால்வாயின்மூலம் கடல் நீர் உள்ளே வராமல் தடுத்து, அதற்கு ஒரு ஷட்டர் போட்டு மூடவேண்டும் என்பது, பாசிமுத்தான் ஓடையிலே அப்படி நாங்கள் அதைச் செய்திருக்கிறோம். இன்னும் சில ஓடைகளுக்கு வேண்டிய என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் அரசு பல இடங்களில் செய்து முடித்துவிட்டது. இன்னும் ஓரிரு இடங்களில் பாக்கி இருக்கும். அவர் குறிப்பிட்ட அதையும் கருதிப் பார்த்து, பிறகு அதற்கு வேண்டிய நடவடிக்கையும் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**34—**

### பணிமனை

***30853—திரு. த. தியோடர் ரெஜினால்டு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதி, மருந்துக்கோட்டையில் புதிய போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசாணை எண் 61, நாள் 9-9-1992-ன்படி, ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருக்கும் பணிமனைக்கும் புதிதாக அமையவிருக்கும் பணிமனைக்கும் இடையிலே குறைந்தது 40 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். பத்மநாபபுரம் தொகுதி, மருந்துக்கோட்டை பகுதிக்கு அருகில் 9 கி.மீ. தூரத்தில் மார்த்தாண்டம் பணிமனையும், 17 கி.மீ. தூரத்தில் திருவட்டாறு பணிமனையும் அமைந்திருப்பதால் மருந்துக்கோட்டை பகுதியில் புதிதாக ஒரு பணிமனை அமைக்கும் திட்டம் இல்லை.



2008 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டம் சின்ன மாவட்டம். பரப்பளவு குறைந்த மாவட்டம். ஆனால் அதிகமாக அரசுப் பேருந்துகள்தான் இயக்கப்படுகின்றன. என்னுடைய தொகுதி, மாவட்டத்தின் மத்திய பகுதியில் உள்ள ஒரு தொகுதி. அங்கு பல்வேறு சுற்றுவட்டார கிராமங்களிலிருந்து மக்கள் வந்து செல்ல நாகர்கோவில்-திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலை தக்கலை பகுதியில், ஒரு பஸ் நிலையம் இருக்கிறது. கிராமத்துப் பேருந்துகளெல்லாம் அந்தப் பகுதிக்கு வந்து செல்கின்றன. வளர்ந்து வருகின்ற இந்தப் பேருந்துகளுடைய எண்ணிக்கை அதிகரித்து வரும் சூழலில் பேருந்துகள் பழுதுபட்டால் பக்கத்துப் பணிமனையில்தான் அதைச் சரிசெய்து கொண்டிருக்கின்றார்கள். இந்தச் சூழலில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து அரசாணையைத் தளர்த்தி எங்களுக்கு விதிவிலக்காக எங்களுடைய தொகுதியில் ஒரு புதிய பணிமனை அமைப்பதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். மேலும், எங்கள் மாவட்டத்தினுடைய மீனாட்சிபுரம் பகுதியில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு ஒரு பணிமனை இருக்கிறது. அதில் பஸ்களை body கட்டுவதற்கான ஒரு பிரிவு இருக்கிறது. ஆனால், இப்பொழுது அரசு புதிதாக வாங்குகிற பேருந்துகளை அங்கு body கட்டுவதற்கு அனுமதி அளிக்குமா என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, அரசாணைப்படி 40 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு இடத்தில்தான் அந்தப் பணிமனை அமைக்க முடியும். இந்த 40 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்திருக்கின்ற பணிமனையில் 100 பேருந்துகளுக்கு மேல் இருக்குமானால் அருகில் வேறொரு இடம் பார்க்கலாம். அப்படிப் பேருந்துகள் அதிகப்படுத்தப்படுகின்றபோது இன்னொரு பணிமனை அமைப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் இருக்கும். அதைப்பற்றி அதிகாரிகளை வைத்து ஆராய்ந்து அப்படி வாய்ப்பு இருக்குமானால் அங்கு அந்தப் பணிமனை அமைக்க அரசு முயற்சி

[2008 ஏப்ரல் 1

எடுக்கும். மேலும், கூண்டு கட்டுகின்ற பணியைப்பற்றி இங்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, அரசு சார்பாக கிட்டத்தட்ட *10, 12* இடங்களிலே கூண்டு கட்டிக்கொண்டிருக்கிறோம். அதுவும் நமது நாகர்கோயிலிலே மிகச் சிறப்பாக அதைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். விரைவுப் போக்குவரத்துக் கழகத்திலிருந்து இப்போது வாங்கப்படுகின்ற பேருந்துகள் எல்லாம் மிக நவீனமான பேருந்துகளாக Ultra Deluxe-ஆக இருக்கின்ற காரணத்தால், அதைப்போல body கட்டுகின்ற தொழில்நுட்பப் பணியாளர்கள் நம்மிடம் இல்லை. நாமும் வெளியிலே contract எடுத்துதான் அதைச் செய்ய வேண்டியிருக்கிறது. எனவேதான், அந்தப் பணிகளைத் தனியாரிடமே—private—லே கொடுத்து கட்டிக்கொண்டிருக்கிறோம். ஆனால் தமிழ்நாட்டிலே வாங்கப்படுகின்ற பேருந்துகளுக்கு கிட்டத்தட்ட எழுபது சதவீத பேருந்துகளுக்கு நம்முடைய அரசுப் பணிமனையில்தான் body கட்டிக்கொண்டிருக்கிறோம். அந்தவகையிலே நாகர்கோயிலிலும் அதே பணிமனையில் body—கள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய செங்கல்பட்டு நகரிலே பணிமனைக்கு ஓரமாகவே, நம்முடைய பேருந்து நிறுத்தம் இருப்பதாலும், பணிமனைகளுக்கு அதிகமான பேருந்துகள் உள்ளேயும் வெளியேயும் வந்து செல்வதாலே மிகப் பெரிய போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, நாங்கள் தொடர்ந்து நம்முடைய அமைச்சர் அவர்களிடம் கூறி வருகின்றோம்; அந்தப் பணிமனையை, பக்கத்திலே இருக்கிற வேண்பாக்கம் பகுதிக்கு மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறோம். நம்முடைய உள்ளூர் அமைச்சர் அவர்களிடமும் சொல்லியிருக்கிறோம். எனவே, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், அந்தப் பணிமனையை மாற்றுவதற்கான முயற்சியை எடுத்துக்கொள்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.



2008 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரில் இருக்கின்ற பணிமனையை வேறு ஒரு இடத்திற்கு மாற்றுகின்றபோது, பேருந்து நிலையத்திலிருந்து அந்தப் பணிமனைக்குச் சென்று வருகின்றபோது பேருந்துகளின் டீசல் செலவு அதிகமாகும். அதனால்தான் அதை மாற்றுவதில்லை. மேலும் இப்போது செங்கல்பட்டு மாவட்டத்தில் அடிமனை விலை, என்ன விலை இருக்கும் என்பதும் உங்களுக்குத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகுந்த இடம் எங்களுக்குத் தருவார்களேயானால் பணிமனையை மாற்றித் தருவதுபற்றி அரசு யோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடியிலே கூண்டு பழுது நீக்கும் பிரிவு செயல்பட்டு, இப்போது மூடப்பட்டுவிட்டது. அந்த இடம் காலியாக இருக்கிறது. மன்னார்குடி பேருந்து நிலையத்திலேயே அரசு விரைவுப் பேருந்துகளை இயக்குவதாலே மிகப் பெரிய நெருக்கடி ஏற்படுகின்றது. அதனாலே, அந்த இடத்தை அரசு விரைவுப் பேருந்துகளை இயக்குவதற்குரிய பணிமனையாகச் செயல்படுத்துவதற்கான வாய்ப்பினை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூடப்படவேண்டுமென்று கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, அரசு அதிகாரிகளால், எழுதி முடிக்கப்பட்ட செய்தி ஒன்று இருந்தது. நம்முடைய முதலமைச்சர் வந்தபின், அரசினுடைய பணத்தில் ஒவ்வோர் ஆண்டும் *200* புதிய பேருந்துகள் வாங்கித் தந்திருக்கிற காரணத்தால் அதிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் வேலை போகாமல் இன்றைக்கும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, டீசல் விலை ஏறியபோதும், நாம் கட்டணத்தை ஏற்றாத

காரணத்தால் அது விரவுக்கும் செலவுக்குமே சரியாக இருக்கிறபோது மேற்கொண்டு விரிவுபடுத்துவது என்பது, இப்போது இயலாத காரியமாக இருக்கிறது. அரசு விரைவுப் போக்குவரத்துக்கழகம் சிறப்பாக இயங்கும் நிலை ஏற்படும்போது அதுபோல ஒரு நிலையை நாமே உருவாக்கலாம். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* பிறகு, தனியே நீங்கள் அமைச்சருடைய அறையிலே சென்று கேட்டுக்கொள்ளுங்கள். உட்காருங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள்.

வினா எண் *35,* மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**35—**

**தொழிற்சாலை**

***14562—திரு. கே. உலகநாதன்:**

*மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேதாரண்யத்தில் மல்லிகைப் பூக்களைக் கொண்டு வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* வேதாரண்யத்தில் மல்லிகைப் பூக்களைக் கொண்டு வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டத்தில் பல்வேறு சிறுதொழில்கள் தொடங்குவதற்கான மூலப்பொருள்கள் கிடைக்கக்கூடிய ஒரு தொகுதியாக வேதாரண்யம்



தொகுதி இருக்கிறது. இந்தத் தொகுதியில்தான் மல்லிகைப் பூக்கள் கிட்டத்தட்ட ஆயிரம் ஏக்கருக்கு மேல் பயிர் செய்கிறார்கள். அதைப்போல சிலிகாட் மணல், சவுக்கு, அதேபோன்று உப்பு போன்ற பொருள்கள் அங்கே கிடைக்கின்றன. அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற மல்லிகைப் பூக்களுக்குச் சரியான விலை கிடைக்காத சூழல் இருக்கிறது. ஆகவே அந்த வேதாரண்யம் பகுதியிலே உற்பத்தியாகும் மல்லிகைப் பூக்களைக் கொண்டு ஒரு வாசனைத் திரவியம், செண்ட் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கினால் வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் *9-55*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிகைப் பூக்களில் மூன்று வகைகள் உண்டு. ஊசி மல்லி, குண்டு மல்லி மற்றும் ஜாதி மல்லி ஆகியவற்றில், ஜாதி மல்லியில் மட்டுமே வணிக ரீதியிலான வாசனைத் திரவியம் எடுக்க முடியும். தமிழகத்தில் சுமார் *9,893* ஹெக்டேர் நிலப்பரப்பில் *76,671* மெட்ரிக் டன் அளவுக்கு மல்லிகை சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக, நாகப்பட்டினம் மாவட்டத்தில் *530* ஹெக்டேர் நிலப்பரப்பில் மல்லிகை பயிரிடப்பட்டாலும், ஜாதி மல்லி மிகச் சொற்ப அளவு நிலப்பரப்பில் மட்டும் பயிரிடப்படுகிறது. பெரும்பாலான சாகுபடிப் பரப்பில் ஊசி மல்லி மற்றும் குண்டு மல்லி ஆகியவை மட்டுமே பயிரிடப்பட்டு வருகின்றன. வேதாரண்யத்தில் *161* ஹெக்டேர் நிலப்பரப்பில் ஊசி மல்லி மற்றும் குண்டு மல்லி மட்டுமே பயிரிடப்பட்டு வருவதால், இவை, சுற்றியுள்ள நகர மற்றும் கிராமப்புறங்களில் வியாபார நோக்கில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இவ்வகைப் பூக்களைக் கொண்டு மாலைகள் மட்டுமே தொடுக்க இயலும். வாசனைத் திரவியங்கள் தயாரிக்க இயலாது. ஆகவே, இங்கே தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்முதல் செய்யக்கூடிய அந்தப் பூவின் விலை, கிலோ ஒன்றுக்கு 15 ரூபாயென தனியார் முன்பணம் கொடுத்து கொள்முதல் செய்கிறார்கள். ஆகவே நமது தமிழக அரசு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் நெல் கொள்முதல் செய்யப்படுவதைப்போல, உற்பத்தியாகும் பூக்களைக் கொள்முதல் நிலையம்மூலம் கொள்முதல் செய்ய, தனியாக மலர் கொள்முதல் நிலையம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே கூறியதுபோல, மல்லி வகைகளில், ஜாதி மல்லி மட்டுமே பயிர்செய்தால், அவற்றைக்கொண்டு, வாசனைத் திரவியங்கள் தயாரிக்க இயலும்; அதைக் கொள்முதல் செய்ய இயலும். அவ்வகை மலர்கள், வேதாரண்யம் பகுதியில் பயிரிடப்படாத காரணத்தால், மல்லிகையைக் கொண்டு வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், ஜாதி மல்லி சாகுபடியை அதிகப்படுத்தும் பட்சத்தில், அத்தகைய மல்லியைக் கொண்டு, வாசனைத் திரவியங்கள் உற்பத்தித் தொழிற்சாலையை அமைக்க தனியார் முன்வந்தால், அவர்களுக்கு அத்தொழில் ஆரம்பிக்கத் தேவையான வழிமுறைகள், திட்ட அறிக்கை தயாரித்தல், வங்கிக் கடனுதவி, துறை சார்ந்த ஒப்புதல் பெறுதல், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமீபத்திலே அறிவித்த மானிய உதவிகள் மற்றும் சந்தை உதவிகள் போன்ற தேவையான உதவிகள் அனைத்தும் நாகப்பட்டினம் மாவட்டத் தொழில் மையம்மூலம் பெற வழிவகைகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யத்தில் வாசனைத் திரவியம் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை அமையாது; வேறு தொழிற்சாலைகள் அமைவதற்கான வாய்ப்புகளைப் பற்றியெல்லாம் அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கமாகச் சொன்னார்கள். இன்றைய சூழ்நிலையிலே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சிறுதொழில்கள்



வளரவேண்டுமென்பது காலத்தினுடைய கட்டாயம். சிறு தொழிற்சாலைகள் வளரும்பொழுதுதான் உற்பத்தி பெருகும்; வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும்; வாங்கும் சக்தி கூடி, வறுமை ஒழியக்கூடிய சூழ்நிலை உருவாகும். அந்த அடிப்படையிலேதான் நம்முடைய அரசுகூட, சிறு குறு தொழிலுக்கான தொழிற்கொள்கையைக்கூட வெளியிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது. உதாரணத்திற்கு, இங்கே நம் தமிழ்நாட்டிலே உள்நாட்டு உற்பத்தியான காளிமார்க், வின்சென்ட், லிவோ போன்ற குளிர்பானங்களெல்லாம் போய், இப்பொழுது coca cola போன்ற குளிர்பானங்களெல்லாம் வந்து, சிறுதொழில்களை அழித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசு ஒவ்வொரு பகுதியிலும் உற்பத்தியாகிற மூலப்பொருட்களைக் கொண்டு, அல்லது, அருகிலே கிடைக்கிற மூலப்பொருட்களைக் கொண்டு, அந்தந்தப் பகுதிக்கேற்ற தொழிற்சாலைகளை அதிகமாக, அரசின்மூலமாகவும், தனியார் துறையின் மூலமாகவும் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேநேரத்தில், மேட்டூரிலேகூட சிறு தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் அறிவிப்பு செய்தார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற இந்தச் சூழ்நிலையில், அந்தத் தொழிற்பேட்டையைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இரண்டு தொழிற் கொள்கைகளை அறிவித்தார்கள். பெரிய தொழில்களுக்கான கொள்கைகள், சிறு தொழில்களுக்கான கொள்கைகள். இந்த இரண்டு கொள்கைகளும் இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மாநில அரசுகளாலும் பாராட்டப்பட்டு, அவற்றினுடைய நகல்களையெல்லாம் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஏராளமான சலுகைகள் அதிலே வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலே, கடந்த ஆட்சியிலே நிறுத்தப்பட்ட மானியத் திட்டத்தை மீண்டும் கொண்டுவந்து மூலதன மானியம் 15 சதவிகிதம், அதேபோல மின்சார மானியம் 20 சதவிகிதம் மூன்று ஆண்டுகளுக்கு, வாட் வரி 6 ஆண்டுகளுக்கு விலக்கு, ஒற்றைச் சாளர முறையிலே எளிதாக

[2008 ஏப்ரல் 1

தொழிற்சாலைகள் தொடங்குவதற்கான வசதிகள், பின்தங்கிய வட்டாரங்கள் கண்டறியப்பட்டு, தமிழகத்திலே 251 வட்டாரங்களிலே மானியம், வேளாண் தொழில்களை எங்கு ஆரம்பித்தாலும் தமிழகத்திலே மானியம், அதுபோல குறுந்தொழில்கள் தமிழகத்திலே எங்கு ஆரம்பித்தாலும் மானியம் என்று ஏராளமான சலுகைகளைத் தமிழக அரசு வழங்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கிணங்க, மேட்டூரிலே நிலங்கள் உபரியாக இருந்தால், நிச்சயமாக இந்த அரசு அங்கே தொழிற்பேட்டை ஆரம்பிக்கும்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியில் மல்லிகை, முல்லை போன்ற வாசனைப் பூக்கள் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. பொதுவாக, வாசனைப் பூக்களில் வாசனைத் திரவியம் தயார் செய்ய முடியாது என்று ஆய்வு அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, வேதாரண்யம் பகுதியிலே அதிகமாக உற்பத்தியாகும் வாசனை மலர்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு, விமான நிலையத்திற்கு எடுத்துச் செல்வதற்கு வசதியாக குளிர்சாதனம் பொருத்தப்பட்ட வாகனங்களை அரசு ஏற்பாடு செய்யுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** வேதாரண்யத்தில் ஜாதி மல்லிப் பூ சாகுபடி செய்யப்படாத நிலையில் வெளி மாவட்டங்களிலிருந்து ஜாதி மல்லிப் பூக்களைக் கொண்டு வந்து தொழில் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை. இங்கு அதிகமாக, நான் முன்பு சொன்ன அந்த ஜாதி மல்லி போன்ற பூக்களை உற்பத்தி செய்தால், அவற்றைக் கொண்டு அங்கு தனியார்மூலமாகத் தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு வாய்ப்புகள் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.



2008 ஏப்ரல் 1]

**36—**

## கிளைச் சிறைச்சாலை

***26230—திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சியில் கிளைச் சிறைச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொள்ளாச்சியில் புதியதாகக் கிளைச் சிறைச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியில் தற்பொழுது உள்ள கிளைச் சிறைச்சாலை மிகவும் பழமையானது. அதில் வசதிகள் மிகவும் குறைவாக உள்ளது. அந்தக் கிளைச் சிறையிலே சுமார் 100 ஆண் கைதிகளைத்தான் அடைத்து வைக்க முடியும். அதற்கு மேல் கைதிகள் வந்தால் கோவை மத்திய சிறைச்சாலைக்குத்தான் கொண்டு செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதுபோல, பெண் கைதிகளையும் அந்த சிறையிலே வைத்திருக்க முடியாது, கோவை மத்திய சிறைக்குத்தான் கொண்டு செல்ல வேண்டும். 18 வயதிற்குக் குறைவானவர்களைப் புதுக்கோட்டைக்குக் கொண்டு செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால் 15 நாட்களுக்குள் remand செய்த கைதிகளைத் திரும்ப அந்த நீதிமன்றத்திற்குக் கொண்டு வருவதில் பல சிரமங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் இருக்கின்ற Jailor மற்றும் காவலர்களுக்கு quarters வசதி எதுவுமே கிடையாது. அதனால், அந்தப் பகுதியிலேயே ஓர் இடத்தைத் தேர்வு செய்து, அங்கே, மாவட்டத் துணை சிறைச்சாலை ஒன்றை அமைத்து சுமார் 500-லிருந்து 1000 பேர் வரை அடைத்து வைக்கக்கூடிய வகையிலே அமைத்தால், பொள்ளாச்சி, வால்பாறை மற்றும் தாராபுரம் நீதிமன்றங்களிலே இருந்து remand செய்தவர்களை அங்கேயே அடைத்து வைப்பதற்கும், அங்கே கைதிகளைக் கொண்டு வருவதற்கும்

மிகவும் உதவிகரமாக இருக்கும். அதை இந்த அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல பொள்ளாச்சியிலே மொத்தம் 72 பேர்களை அடைப்பதற்குப் போதுமான வசதிகள் அங்கே இருக்கின்றன. ஆனால், தற்சமயம் இன்றைக்கு அளவிலே 27 அடைப்புகள்தான் அடைக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே, 2003-2004 ஆம் ஆண்டிலே சுமார் 7½ இலட்சம் ரூபாய் செலவிலே அங்கே புதிதாக ஒரு dormitory கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதிகமாக சிறைக் கைதிகள் வந்தால் dormitory–யிலும் அடைப்பதற்கு வசதி இருக்கிறது. ஏற்கெனவே இருக்கின்ற கிளைச் சிறையிலே போதுமான அளவிற்கு இட வசதி இருகின்றது. இதுபோக, கடந்த முறை 2006-2007 ஆம் ஆண்டு, தலைவர் கலைஞர் அவர்கள் சுற்றுப்புறச் சுவரை உயர்த்துவதற்கும், கிளைச் சிறைச்சாலையிலே வசதிகளை மேம்படுத்துவதற்குமாக ஏறத்தாழ 12¼ இலட்சம் ரூபாய் நிதி வழங்கி அந்தப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. ஆகவே, தற்சமயம் பொள்ளாச்சியிலே புதிய கிளைச் சிறைச்சாலை அமைப்பதற்கு அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஒருசில வேலைகள் அந்தச் சிறைச்சாலையில் நடைபெற்றுக்கொண்டுதான் வருகின்றன. இருந்தாலும்கூட, இன்னும் சில குறைபாடுகள் அந்தச் சிறைச்சாலையிலே இருந்து வருகின்றன. குறிப்பாக, தண்ணீர் வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. அதைச் சரி செய்துகொடுக்க வேண்டும். அதைப்போல, கைதிகளுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டால் அவசர உதவிக்காக மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல வேண்டியிருக்கிறது. அதற்கு எந்த வசதியும் கிடையாது. அதற்காக, அந்தச் சிறைச்சாலைக்கு ஒரு வாகன வசதியை நிரந்தரமாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால், மாலை ஆறு மணிக்கு



மேல் அங்கே கொண்டு வரப்படுகின்ற கைதிகளை மெழுகுவர்த்தியை வைத்துதான் பரிசோதனை செய்து, சிறையில் அடைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. அதற்காக, அந்தச் சிறைச்சாலைக்கு ஒரு genset motor வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அங்கே சிறைக்குள்ளே இருக்கின்ற கழிப்பறை மிகவும் மோசமாக இருப்பதாகச் சொல்கின்றார்கள். அது பழைய தரைதளத்திலேயே, இக்கட்டான ஓர் இடத்திற்குச் செல்லவேண்டிய சூழ்நிலை இருப்பதாகவும் சொல்கின்றார்கள். ஆகவே அந்தக் கழிப்பறையையும் சரிசெய்தால், அங்கே சுகாதாரத்தை ஓரளவிற்கு நல்ல முறையில் பராமரிக்க முடியும் என்று நினைக்கின்றேன். அதனால் இந்த கோரிக்கைகளையாவது இந்த அரசு நிறைவேற்றுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நம்முடைய உயர் நீதிமன்றத்தினுடைய குறிப்பாணையை ஏற்று, தமிழகத்திலே அத்துணைச் சிறைச்சாலைகளிலும் இருக்கின்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த, குறைபாடுகளை நீக்குவதற்கு, உயர் நீதிமன்றம், ஏறத்தாழ 79 பரிந்துரைகளைத் தமிழக அரசுக்கு அனுப்பியது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனே, அதிலே 55 குறைபாடுகளை நீக்குவதற்கும், அடிப்படை வசதிகளிலிருந்து அத்துணைக் குறைபாடுகளையும் நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லி அவை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவற்றில் சில குறைபாடுகள், அதாவது 10 குறைபாடுகளைப் போக்க, நீதிமன்றத்தினுடைய உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். மற்றவை அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. வெகுவிரைவில், உயர் நீதிமன்றம் 79 பரிந்துரைகளிலும் குறிப்பிட்டிருக்கின்ற அடிப்படை வசதிகளிலிருந்து அத்துணை வசதிகளையும் முழுமையாக மேம்படுத்துவதற்கு இந்த அரசு இந்த ஆண்டிலேயே அவற்றை நிறைவு செய்யும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

[2008 ஏப்ரல் 1

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே சேலம் மாவட்டத்தைத் தொட்டு, கடலூர் மாவட்டம் வரை, பெண்ணாடம், தொழுதூர், திட்டக்குடி, விருத்தாசலம் போன்ற பகுதிகளிலே கிளைச் சிறைச்சாலை இல்லை. அங்கே யாரையாவது கைது செய்தால், மத்திய சிறைச்சாலைக்கு ஏறத்தாழ இரண்டு அல்லது மூன்று மணி நேரப் பயண நேரத்தில் அழைத்துச் செல்கின்றார்கள். இதனால் அங்கே சில சங்கடங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் திட்டக்குடியிலோ, பெண்ணாடத்திலோ கிளைச் சிறைச்சாலையை அமைத்துத் தருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 109 கிளைச் சிறைச்சாலைகள் இருக்கின்றன. அவற்றில் 100 கிளைச் சிறைச்சாலைகள் ஆண்களுக்காகக் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த 100 கிளைச் சிறைச்சாலைகளில், கடந்த ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்த நடவடிக்கையால், கூடுதலாக வருகின்ற remand கைதிகளை வேறு சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லாமல் இருப்பதற்காக 30 கிளைச் சிறைச்சாலைகளை மேம்படுத்துகின்ற பணிகள் தமிழகம் முழுக்க நடைபெற்று வருகின்றன. ஆகவே புதிய கிளைச் சிறைச்சாலைகளைத் தோற்றுவிக்க வேண்டிய அவசியமில்லை. காரணம், பொதுவாக தமிழகத்திலே மத்திய சிறைச்சாலைகள், மாவட்டச் சிறைச்சாலைகள், கிளைச் சிறைச்சாலைகள் அனைத்திலும் 20 ஆயிரம் கைதிகளை அடைப்பதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன. ஆனால், இன்றைய நிலையில் 18 ஆயிரம் பேர்தான் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள். இன்னும் 2 ஆயிரம் இடங்கள் காலியாக இருக்கின்றன. எனவே புதிய கிளைச் சிறைச்சாலையை அமைக்க வேண்டிய அவசியமில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் தூரத்தைக் கணக்கில் கொண்டு, சிறைச்சாலை அமைக்கவேண்டுமென்றால், எதிர்காலத்தில் அரசு அதுபற்றிப் பரிசீலிக்கும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொள்ளாச்சி ஜெயராமன், எச்சரிக்கிறேன். நான் வாய்ப்புக் கொடுத்தால்தான் நீங்கள்



2008 ஏப்ரல் 1]

கேட்கவேண்டும். உட்காருங்கள், எச்சரிக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் கேட்டு, நான் கொடுக்க முடியாது, உட்காருங்கள். எச்சரிக்கிறேன், ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். Not allowed.

வினா எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**37—**

## கலைக் கூடம்

***38032—திரு. மு.க. பெரியசாமி:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்தில் மின் விளக்கு, பூங்கா, தங்கும் விடுதி ஆகியவை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பூம்புகார் ஒரு வளர்ந்து வரும் சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. அங்குள்ள சிலப்பதிகாரக் கலைக்கூடம், இலஞ்சி மன்றம், பாவை மன்றம், நெடுங்கல் மன்றம், கொற்றப் பந்தல் முதலியன கவின்மிகு நினைவுச் சின்னங்களாகும். இவற்றைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்கும் பணி, ரூ.35.11 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறையினர் மூலம் செய்து முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி. (குறுக்கீடு) பேச விரும்பும் உறுப்பினர்கள் எழுந்து நின்று பேசுங்கள்.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் கலைக்கூடம், 1973 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களாலே உருவாக்கப்பட்டது. அன்று தமிழகம் முழுவதும் இருக்கின்ற கலைஞர்கள், தமிழ் அறிஞர் பெருமக்கள் என்று தமிழகமே

ஒன்றுகூடி மிகப் பெரிய விழா எடுத்து, அங்கு பல்வேறு கலைக்கூடங்களை, பாவை மன்றம், நெடுங்கல் மன்றம், இலஞ்சி மன்றம் என்று கலைநயமிக்க பல்வேறு மன்றங்களை உருவாக்கினார்கள். அங்கு கிளிஞ்சல் குடில், சங்கு குடில் மற்றும் விடுதிகளை உருவாக்கி மிகப் பெரிய சிறப்புமிக்க சுற்றுலாத் தலமாக அன்றைய நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கி அன்று இந்திர விழாவையும் கண்டார்கள். ஆக, அப்படிப்பட்ட அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அந்தச் சுற்றுலாத் தலம், 2004 டிசம்பர் சுனாமியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு முற்றிலும் சேதம் அடைந்தது. அப்போது அதைச் சீர் செய்வதற்காக நமது சுனாமி நிவாரண நிதித் திட்டத்தின்கீழ் மத்திய கலாச்சார மற்றும் சுற்றுலாத் துறை நிதி ஒதுக்கியது. கன்னியாகுமரி, இராமேஸ்வரம், அதைப்போல வேளாங்கண்ணி, பூம்புகாருக்கும் ஒதுக்கியது. இராமேஸ்வரத்திற்கும், கன்னியாகுமரிக்கும் சுற்றுலாத் துறை செலவு செய்து பணிகளை முடித்துள்ளது. அதைப்போல, வேளாங்கண்ணிக்கு அந்தப் பேரூராட்சிக்கு நிதி ஒதுக்கப்பட்டு அங்கே செலவிடப்பட்டது. ஆனால், பூம்புகாருக்கு ஒதுக்கப்பட்ட சுமார் 69 இலட்சம் ரூபாய், செலவு செய்யப்படாமலேயே செலவு செய்யப்பட்டதாக நமது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கோரியுள்ளது. ஆக, அந்த 69 இலட்சம் அந்தப் பணம் எந்தப் பணியும் செய்யாமலேயே அது எங்கே இருக்கிறது என்று இதுவரை தெரியவில்லை. ஆகவே, அதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மேலும், 15-12-2006-இல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் சுனாமிப் பணிகளுக்காகக் கொடுக்கப்பட்ட பணிகள் அங்கு செயற்கை ஊற்றுகள் இன்னும் பல்வேறு வேலை திட்டங்கள் முடிக்கப்படாமல் 15 மாதம் ஆகிவிட்டது. அது பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் வேலை முடிக்கப்பட்டுவிட்டதாக அங்கே தகவல் அறிக்கை கொடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் பணிகள் இதுவரை முடிக்கப்படாமல் இருக்கின்றன. அவை எப்போது முடிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெரியசாமி, கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. மு.க. பெரியசாமி:** மேலும் அங்கு மின் விளக்குகள் அமைப்பதற்காக 30 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டு பணிகள் அங்கே கோரப்பட்டுள்ளன. அந்தப் பணிகள் கோரப்பட்டு





இதுவரையில் எந்த வேலையும் துவங்கப்படவில்லை. ஆக இப்படி மிகப் பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்க அந்தக் கலைக்கூடம் மிகவும் இருண்டு கிடக்கிறது. ஆகவே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சியில் இது நடைபெறவில்லையென்றால் வேறு எப்போது நடக்கும் என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் பகுதியைப் பொறுத்தமட்டில் தலைசிறந்த சுற்றுலாத் தலங்களில் அதுவும் ஒரு பகுதியாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு சுற்றுலாத் துறையின் சார்பாக 6 குடில்கள் இயக்கப்பட்டு வந்தன. அவை சுனாமிப் பேரலையின் காரணமாக முழுவதுமாகச் சேதம் அடைந்து, அதற்குப் பிறகு, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவின்பேரில், அதற்கான நிதி வழங்கி அந்தப் பணிகளை மேற்கொள்ளவேண்டுமென்று துறையின் சார்பாக முடிவுகள் எடுக்கப்பட்டு, பொதுப் பணித் துறையின் ஆய்வுக்காக அனுப்பப்பட்டது. பொதுப் பணித் துறையினுடைய அதிகாரிகள் அவற்றின் உறுதித் தன்மை கெட்டுவிட்ட காரணத்தால், அவை மேலும் சீர்செய்து அமைக்கப்பட்டால் ஆபத்துகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது என்று சான்றிதழ் அளித்ததன் காரணமாக அந்த நிதி அப்படியே இருக்கிறது. அதைக் கட்ட முடியாத ஒரு சூழ்நிலை; முழுவதுமாக இடித்துவிட்டுத்தான் புதிதாகக் கட்டக்கூடிய ஒரு நிலைமை. முழுவதுமாக இடித்துவிட்டுக் கட்டவேண்டுமென்று சொன்னால், Coastal Regulation Scheme என்ற அந்தத் திட்டத்தின்கீழ் கடற்கரை பகுதியிலிருந்து 500 மீட்டர் தள்ளிதான் புதிய கட்டடங்கள் கட்டக்கூடிய ஒரு நிலைமை இருக்கின்ற காரணத்தால், அதற்கான இடம் சுற்றுலாத் துறையின் கைவசம் இல்லாத காரணத்தால், இப்போது வேறு இடங்களைத் தேடிக் கொண்டு இருக்கிறோம். வேறு இடங்கள் கிடைத்தவுடன் அது நிறைவேற்றப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, சிலப்பதிகாரக் கலைக்கூடம், இலஞ்சி மன்றம், பாவை மன்றம், நெடுங்கல் மன்றத்தைப் பொறுத்தமட்டில் 35.11 இலட்சம் ரூபாய் செலவில் பொதுப் பணித் துறையினால் சீர் செய்யப்பட்டு, அவை பயன்பாட்டில் இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் கலைஞர்

[2008 ஏப்ரல் 1

அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான், கற்புக்கரசி கண்ணகி சிலைகூட கடற்கரையிலிருந்து இழுத்தடிக்கப்பட்டு, கடந்த ஆட்சியில் அது கண்டுகொள்ளாமல் பராமரிக்கப்படாமல் இருந்தது. கடந்த ஆட்சியில் கற்புக்கரசி கண்ணகி சிலைமீதுகூட அவர்கள் கோபப்பட்டு, அதைப் பராமரிக்காமல் விட்டுவிட்டார்கள். ஆனால், கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, கலைஞர் அவர்களுடைய உத்தரவை ஏற்று, அந்த கண்ணகி சிலைகூட கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் நிறுவப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

முற்பகல் *10-15*

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 69 இலட்சம் செலவிடப்படாமலேயே அங்கு செலவிடப்பட்டதாகக் கூறப்படுகிறதே, அந்த நிதி எங்கே இருக்கிறது எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செலவிடப்பட்டதாகக் கூறப்படவில்லை. அதற்காக ஒதுக்கிய நிதி அப்படியே இருக்கிறது. அவை உறுதித் தன்மை இழந்துவிட்டன என்று பொதுப் பணித் துறை சான்றிதழ் அளித்த காரணத்தால், கட்ட முடியாத ஒரு சூழ்நிலை இந்தத் துறைக்கு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. சையது கௌஸ் பாஷா, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**38—**

## விளையாட்டு மைதானம்

***22506—திரு. சை. சையது கௌஸ் பாஷா:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஏப்ரல் 1]

(அ) மதுரை அருகில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை அருகில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. சையது கௌஸ் பாஷா.

**திரு. சை. சையது கௌஸ் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்ற காலத்திலெல்லாம் மதுரையினுடைய பொற்காலமாகத் திகழ்கிறது. காரணம், மதுரையைப் பொறுத்தவரை தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலெல்லாம் பல்வேறு திட்டப் பணிகளைச் செயல்படுத்தி மதுரை சீர்மிகு மாநகரமாகத் திகழ்வதற்கு ஓர் எடுத்துக்காட்டாக அவர் அந்தப் பணியினைச் செய்து வருகிறார். அதற்காக எங்களுடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அந்த வகையிலே தமிழகத்தினுடைய இரண்டாவது பெரிய நகரமாகத் திகழக்கூடிய மதுரையிலே ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்கெனவே ஆட்சி செய்த காலத்திலே ரேஸ் கோர்ஸ் விளையாட்டு மைதானத்தை அமைத்து மதுரைக்குப் பெருமையைத் தேடித் தந்தார்.

தற்பொழுது பெருகிவரும் மக்கள் தொகையின் அடிப்படையிலே, தென் மாவட்ட மக்கள் அனைவரும் பயனடைகின்ற வகையிலே, ஆசியா மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடக்கின்ற வகையிலே, மதுரையிலே அனைத்து வசதிகளையும் கொண்ட, தரமான சர்வதேசத் தரத்தில் ஒரு விளையாட்டு மைதானத்தை மதுரையினுடைய அருகிலே அமைத்துத் தர வேண்டும் என்பதைக் கேட்டுக்கொண்டு, அதோடு தென் மாவட்டங்களிலே வசிக்கக்கூடிய மக்கள், விளையாட்டுப் போட்டிகளைக் காண சென்னைக்கு வரவேண்டிய சூழல் இருப்பதை மாற்றி அமைத்து, அந்த மக்கள் மதுரையிலேயே தேசிய மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளைக்

காணுகின்ற வகையிலே, அவர்களுக்குச் சர்வதேசத் தரம்வாய்ந்த விளையாட்டு மைதானத்தை மதுரையிலே அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மதுரையில் *400* மீட்டர் தடகள ஓடுபாதை செயற்கை இழை மற்றும் flood light அதாவது மின்னொளி வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

கால்பந்து ஆடுகளம் இயற்கைப் புல்வெளிகளின்மூலமாக அமைக்கப்பட்டுள்ளது. வளைகோல் பந்து ஆடுகளம் இரண்டு அமைக்கப்பட்டுள்ளது. கையுந்து பந்து ஆடுகளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. செயற்கை இழை கூடைப் பந்து ஆடுகளம் இரண்டு அமைக்கப்பட்டுள்ளது. கபடி மைதானம் இரண்டு அமைக்கப்பட்டுள்ளது. நவீன பல்நோக்கு உடற் பயிற்சிக் கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. செயற்கை இழை வளைகோல் பந்து பயிற்சி ஆடுகளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் இரண்டு அமைக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட் வலைப் பயிற்சி மைதானம் *6* அமைக்கப்பட்டுள்ளது. இன்னும் நான்கு Badminton ஆடுகளம் கொண்ட ஒரு உள் விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. நீச்சல் குளம் ஒன்றும், விளையாட்டு விடுதி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்திலுள்ள வாடிப்பட்டியில் செயற்கை இழை வளைகோல் பந்து பயிற்சி மைதானம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மதுரை எல்லிஸ் நகரில் ஒரு வளைகோல் பந்து ஆடுகளமும் அமைக்கப்பட்டுள்ளது.

*முற்பகல் 10-20*

மதுரையைப் பொறுத்தளவில், தமிழ்நாட்டிலுள்ள விளையாட்டு மைதானங்களிலே சென்னைக்கு அடுத்தபடியாக, தரத்தில் இரண்டாவது தரத்தைப் பெறக்கூடிய அளவிற்கு மதுரை விளையாட்டு மைதானம் அந்தப் பேறினைப் பெற்றிருக்கிறது. அதேநேரத்தில் மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி கிராமத்தில் கைப்பந்து விளையாட்டுப் போட்டிகளுக்கு கிராம விளையாட்டுப் பயிற்சி மையம்



ஒன்று அமைக்கப்பட்டு அதுவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல தேசிய அளவில் மகளிரினுடைய விளையாட்டு விழா கடந்த நவம்பர் மாதம் சிறந்த முறையிலே நடைபெற்று முடிந்து இருக்கிறது. அதேபோல, அதே விளையாட்டு மைதானத்தில் தேசிய இளைஞர் கால்பந்து போட்டி, மின்ஒளி வசதியுடன், *27* அணிகள் கலந்து கொண்டு அதுவும் சிறப்பாக நடைபெற்றது. ஆகவே, மதுரையைப் பொறுத்த அளவில் அங்கே இருக்கிற விளையாட்டு ஆர்வலர்களும், அங்கே இருக்கின்ற விளையாட்டுப் பயிற்சியாளர்களும், சிறந்த முறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மேலும், அங்கே சில சிறந்த வாய்ப்புகளைப் பெற வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைத் தவிர ஏதாவது மினி ஸ்டேடியம் அமைக்க வேண்டும் என்று கோருவாரேயானால், அதற்காக ஏற்கெனவே உள்ள அரசின் திட்டத்தின்படி *5* ஏக்கர் நிலத்தோடு கிட்டத்தட்ட ரூ.*30* இலட்சம் பணியிலே அமைக்க பாதி பணத்தை மக்கள் பங்களிப்பாகப் பெற்றுத் தரத் தயாராக இருந்தால், நிதி நிலைமைக்கு ஏற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. சையது கௌஸ் பாஷா.

**திரு. சை. சையது கௌஸ் பாஷா:** அமைச்சர் அவர்களுடைய விரிவான பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரையைப் பொறுத்தத்தவரை தமிழகத்தினுடைய இரண்டாம் தலைநகரமாகத் திகழ்கிறது. இன்றைக்குச் சென்னையிலே நடைபெறக்கூடிய சர்வதேசப் போட்டிகளைக் காண்பதற்கு தென் மாவட்டத்தில் இருந்து, தென் மாவட்ட மக்கள் சென்னையை நோக்கி வந்து, இங்கு விளையாட்டைக் கண்டு களிப்பதற்கு பல்வேறு சிரமங்கள் உள்ளன. அதைக் கருத்திற்கொண்டு, தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அனைத்து வசதிகளையும் ஒருங்கே பெற்ற ஒரு விளையாட்டு மைதானத்தை மதுரையினுடைய புறநகர்ப் பகுதியிலே அமைத்து அதிலே தேசிய மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உதவிடுவாரா; அதுபோன்ற வசதிகளை அரசினுடைய சார்பிலே சிறப்புத் திட்டமாகச் செய்து கொடுக்க முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஏப்ரல் 1

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆசை நிறைவேறுவதற்குக் கொஞ்சம் காலம் கடந்து நிறைவேறும் என்று கருதுகிறேன்! *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இளைஞர்கள் 15 வயதில் இருந்து 35 வயது வரை உள்ளவர்கள் 45 சதவிகிதம் பேர் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இன்றைக்கு இளைஞர் சக்தி வீணாகிக் கொண்டிருக்கிறது. சிறு வயதிலே இரத்த அழுத்தம், சர்க்கரை போன்ற நோய்களில் இருந்து இளைஞர்களைப் பாதுகாக்க ஆங்காங்கே மாவட்டந்தோறும், விளையாட்டு மைதானங்களை அமைப்பது அவசியம். குறிப்பாக, எங்கள் வேலூர் மாவட்டம், திருப்பத்தூரிலே 10 ஏக்கர் நிலம் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தைத் தேர்வு செய்து நகராட்சிமூலமாக விலைக்கு வாங்கி விளையாட்டுத் துறைக்குக் கொடுக்க இருக்கிறோம். அப்படிக் கொடுத்தால் மத்திய அரசு ரூ.20 கோடி வழங்குவதாக அறிகிறேன். மாநில அரசும் சேர்ந்து மிகப் பெரிய விளையாட்டுத் திடலைக் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல இப்போது மத்திய அரசு விளையாட்டுத் துறைக்காக எந்த நிதியும் ஒதுக்கப்படுவதில்லை. வேலூரைப் பொறுத்த அளவில், மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்கப்படாத ஒரே ஒரு மாவட்டம் வேலூர் மாவட்டம் மட்டும்தான் இருக்கிறது. அதற்காக வேலூர் மாவட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்களும், அந்த மாவட்டச் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கு இடம் கிடைத்தவுடன், உரிய முறையில் மாண்புமிகு முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2008 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சி.க. ராஜேந்திரன்.

**திரு. க.சி.க. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களுக்குப் பிறகு எனக்கு ஒரு வாய்ப்பினைக் கொடுத்திருக்கின்றீர்கள். முதலில் அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேவையில்லாத வேலையெல்லாம் வேண்டாம். கேள்வியை மட்டும் கேட்டுவிட்டு உட்காருங்கள்.

**திரு. க.சி.க. ராஜேந்திரன்:** மதுரை மாநகரிலே புகழ் பெற்ற Race Course மைதானம் என்னுடைய தொகுதியிலே வருகிறது. அந்த Race Course மைதானத்தைச் சமீபத்திலே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், 4 கோடி ரூபாயிலே சீர்படுத்தி இருக்கின்றார்கள். சீர்படுத்தப்பட்ட மைதானம், தற்போது அந்த synthetic ground என்கின்ற அந்தப் புல்வெளிக்கு Corporation water தேவைப்படுகிறது. போதிய Corporation water அங்கே இல்லாததால் அந்த synthetic ground என்பது கருகும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற அந்த உயர் மின் கோபுர விளக்குகள் எல்லாம் திருடப்பட்டுவிட்டன. ஆகையால் அந்த Race Course மைதானத்தைப் போதிய முறையில் பராமரிப்பதற்கும், திருடு இல்லாமல் காப்பதற்கும், இந்த அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவரின்மூலம் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் *10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, 4½ கோடி ரூபாய்க்கு அங்கே synthetic தடகள ஓடு பாதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருக்கரத்தால் திறந்து வைக்கப்பட்டு, இப்போது அது பயன்பாட்டில் உள்ளது. தண்ணீர்ப் பிரச்சினையைப் பொறுத்த அளவில், அங்கே ஏற்கெனவே அந்த மாநகரத்தினுடைய நிருவாகத்தினுடனே பேசி, தண்ணீர் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இன்னும் குறை இருந்தாலும், அது கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2008 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**39—**

**பாலம்**

***28453—திரு. வீர. இளவரசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், கள்ளிக்குடி ஒன்றியம், வீரப்பெருமாள்புரம்-எஸ்.பி. நத்தம் இடையே கவுண்டல் ஆற்றின் குறுக்கே இணைப்புப் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட கள்ளிக்குடி ஒன்றியப் பகுதியில் வீரப்பெருமாள்புரம், எஸ்.வி. நத்தம் கிராமத்திற்கிடையில் கவுண்டல் ஆற்றின் குறுக்கே ஓர் இணைப்புப் பாலம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை, அந்தப் பகுதி மக்களிடையே நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அந்த ஆற்றின் வடபுறத்தில் பல கிராமங்கள், குறிப்பாக, அரசப்பட்டி, வீரப்பெருமாள்புரம், தூம்பக்குளம், திருமால்புதுப்பட்டி, கொக்குளம், வலையங்குளம், கிருஷ்ணாபுரம், பாறைக்குளம், உலகாணி, சின்ன உலகாணி, கல்லணைப்புதூர், கூடக்கோயில், மேலபுலிக்குண்டு போன்ற பல கிராமங்கள் அந்த ஆற்றின் வடபுறத்திலும், தென்புறத்தில் எஸ்.பி. நத்தம், பெருமாள்பட்டி, இடையநத்தம், சென்னம்பட்டி போன்ற பல கிராமங்கள் தென்புறத்திலும் இருந்து வருகின்ற சூழலில்,



2008 ஏப்ரல் 1]

இந்த இரண்டு பகுதிகளுக்கும் இடையிலே ஓடுகின்ற அந்த ஆற்றின் குறுக்கே பாலம் இருந்தால்தான், போக்குவரத்திற்கு வசதியாக இருக்கும் என்ற அடிப்படையில், அந்தப் பகுதி மக்களெல்லாம் நீண்ட நாட்களாக இந்தக் கோரிக்கையைக் கொடுத்துவருகிறார்கள். அதுமட்டுமல்ல; அவர்கள் ஒன்றியத் தலைநகரான கள்ளிக்குடிக்கு யூனியன் அலுவலகத்திற்கும், மேல்நிலைப் பள்ளி அங்கே இருக்கின்ற காரணத்தினால், மேல்நிலைப் பள்ளிக்குச் செல்கின்ற மாணவர்களும் இந்த ஆற்றின் குறுக்கே பாலம் இல்லாத காரணத்தினால், ஏறத்தாழ 10 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வரவேண்டிய ஒரு அவல நிலை அவர்களுக்கு இருந்து வருகிறது. எனவே, இதைப் போக்குகின்ற வகையில், ஆற்றின் குறுக்கே அந்த கவுண்டல் ஆற்றின் குறுக்கே, மெயின் சேனலின் குறுக்கே ஒரு கல் பாலம் அமைப்பதற்கும், அதையொட்டிப் பிரிந்துசெல்கின்ற குராயூர் கால்வாய் என்ற கிளைக் கால்வாயில் 10 மீட்டர் நீளத்திற்கு ஒரு மேம்பாலம் அமைப்பதும் அவசியமாக இருக்கின்ற சூழலில், அரசு முன்வந்து இவ்வளவு முக்கியமான பிரச்சினை என்பதைக் கவனத்தில்கொண்டு, உடனடியாக அதை அமைப்பதற்கு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற சாலை, மண் சாலையாக இருக்கின்றது. இந்தச் சாலை உள்ளாட்சித் துறையினுடைய பராமரிப்பில் உள்ளது. அதாவது, வீரப்பெருமாள்புரத்திலிருந்து எஸ்.பி. நத்தம் வரை, சுமார் 2.2 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. இந்தச் சாலை செல்கின்ற இடையிலேதான், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற கவுண்டல் ஆறும் செல்கின்றது. அதுமட்டுமல்லாமல், அந்த ஆற்றின் மேல்புறமாக கவுண்டல் ஆற்றில் தடுப்பணைக் கட்டி, பொதுப் பணித் துறைமூலம் பாசனத்திற்காகக் கால்வாய் அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே, இரண்டு பாலம் அமைக்கப்பட வேண்டும். அதிலே, கால்வாயிலே அந்தப் பாலம் அமைக்கப்பட வேண்டும் என்று சொன்னால், சுமார் ரூபாய் 20 இலட்சமும், அதேபோல ஆற்றின் குறுக்கே ஒரு உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டும் என்று சொன்னால் ரூபாய் 50 இலட்சமும், அதேபோல பாக்கியிருக்கின்ற 2.2 கிலோ மீட்டர் நீளத்திற்கு இருக்கின்ற மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற

[2008 ஏப்ரல் 1

வேண்டுமென்றால், சுமார் ரூபாய் 25 இலட்சமும், ஆக மொத்தம் ஒரு இலட்சமா, இரண்டு இலட்சமா, ரூபாய் 95 இலட்சம் தேவைப்படுகிறது. இது உள்ளாட்சித் துறையின் பராமரிப்பில் உள்ளது. இதை நபார்டு வங்கியினுடைய நிதியுதவியைப் பெற்றுதான் மாநில அரசின் நெடுஞ்சாலைத் துறை இதுபோன்ற மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றுகின்றது. எனவே, தற்போதைக்கு இத்திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை; எதிர்காலத்தில் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, 90 இலட்சத்திற்கும் அதிகமான தொகை தேவைப்படுகிறது என்பது உண்மையாக இருந்தாலும்கூட, இந்தத் தொகை அரசாங்கத்திற்கு ஒரு பெருந் தொகை என்று கருதமுடியாது. ஏறத்தாழ 20, 30 கிராம மக்கள் பயன்படுத்தக்கூடிய சாலை அந்தச் சாலை. அதுமட்டுமல்ல; கள்ளிக்குடியிலிருந்து காரியாப்பட்டி, அருப்புக்கோட்டை செல்கின்ற அந்தச் சாலையையும் இணைக்கக்கூடிய சாலையாக அந்தச் சாலை இருந்து வருகிறது. நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலை, அந்த ஆற்றின் குறுக்கே இருக்கின்ற பாலத்தை தவிர்த்து, தொடர்ச்சியாக இருக்கின்ற காரணத்தினால், இந்தப் பாலத்தை அமைத்துவிட்டால், தொடர்ச்சியாக போக்குவரத்து சுலபமாக ஆவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு உருவாகக்கூடிய நிலைமை இருக்கின்ற காரணத்தினால், அரசு இதனைக் கவனத்தில் கொண்டு, அந்த மக்களின் நலனில் அக்கறைகொண்டு, உடனடியாக இதை அமைப்பதற்கு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய பதிலில் எதிர்காலத்திலே பரிசீலிக்கலாம் என்று சொல்லியிருக்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலையும் அதேநேரத்தில் அந்தப் பாலங்களும் எதிர்காலத்திலே பரிசீலிக்கப்படும்.



2008 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**40—**

### கட்டட வசதி

***27840—திரு. ஆர். சின்னசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, எஸ்.எஸ்.குளம் ஒன்றியம், இடிகரை பேரூராட்சி கால்நடை மருந்தகத்திற்கு நபார்டு வங்கிமூலம் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிங்காநல்லூர் தொகுதி இடிகரை பேரூராட்சியில் அமைக்கப்பட்டுள்ள கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக நபார்டு வங்கி நிதியின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்சமயம் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. மின் வேலைகள் மட்டும் பாக்கி உள்ளது. ரூபாய் 19 லட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறையின்மூலம் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இன்னும் 15 நாட்களுக்குள் மின் வேலைகள் முடிவுபெற்ற உடனே துறை பொறுப்பு எடுத்து, மருந்தகம் மாற்றப்பட்டுச் செயல்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களுக்குப் பிறகு எனக்கு ஒரு வாய்ப்பு கொடுத்ததற்கு முதலில் உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது தொகுதியில். . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் கேட்கிறீர்களா? அல்லது வேறு விவரங்கள் கேட்கிறீர்களா? கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. ஆர். சின்னசாமி:** உங்களுக்கு நன்றியைச் சொல்கிறேன் தலைவரே! உங்களுக்கு நன்றியைச் சொல்ல வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய பாராட்டு எனக்குத் தேவையில்லை. நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிங்காநல்லூர் தொகுதியில் எஸ்.எஸ்.குளம் ஒன்றியத்தில் இடிகரை பேரூராட்சியில் கால்நடை மருந்தகத்திற்கு நபார்டு வங்கியின் மூலம் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான விடைதான் நான் இப்போது தெரிவித்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணி எவ்வளவு நாட்களுக்குள்ளாக முடிக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன். அதோடு மட்டுமல்லாமல் (குறுக்கீடு) பொறுங்கள். எனது தொகுதி, எஸ்.எஸ். குளம் ஒன்றியத்தில் விளாங்குறிச்சி பஞ்சாயத்தில் கால்நடை மருந்துவமனை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல, சுமார் 15 நாட்களுக்குள் அதாவது 20-4-2008-க்குள் அந்தப் பணி முடிவுறும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. பின்பு துறை அதைப் பொறுப்பெடுத்து கால்நடை மருந்தகம் புதிய கட்டடத்தில் மாற்றியமைக்கப்படும். அதேபோல் இன்னொரு பகுதியில் புதிய கால்நடை மருத்துவமனை





வேண்டுமென்று கேட்டார். அதைத் துறை பரிசீலிக்கும். கால்நடைகளின் எண்ணிக்கைக்கேற்ப புதிய மருந்தகம் அமைக்கப்படுமா என்பதையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியோடு துறை பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. *(குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### பண்ருட்டி தொகுதி, இடி விழுந்து இறந்தோர் குடும்பத்திற்கு நிதி உதவி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நான் இந்த அவையிலே சில கோரிக்கைகள் வைக்கின்றபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருந்தார்கள். தற்போது, அவர்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். திடீரென்று நேற்று முன்தினம் என்னுடைய தொகுதியில் இடியுடன்கூடிய பயங்கர மழை பெய்த காரணத்தினால், ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த இராணி என்கிற ஒரு பெண், இடி விழுந்து அதே இடத்தில் கருகி இறந்து இருக்கிறார். அவருடைய அன்பு மகள் 16 வயதுள்ள ஒரு பெண்ணும், 11 வயதுள்ள ஒரு சிறுவனும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அதே நேரத்தில், பக்கத்துத் தெருவில் செல்ஃபோனில் பேசிக் கொண்டிருந்த ஒருவரும், அவருடைய காதுகள் வெடித்து அவரும் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். அதனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இடிவிழுந்து பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும்— ஏற்கெனவே என்னுடைய மாவட்டத்திலே ஒரு இலட்சம் ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள்; ஆனால் இப்போது, அவர்கள் குடும்பத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், வெறும் 15,000 ரூபாய் மட்டும்தான் வழங்கப்படும் என்றும்,

முதலமைச்சரிடத்திலிருந்து அவர்களுக்கு அறிவிப்பு வரவில்லையென்றும் தெரிவிக்கிறார்கள் .... மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அந்த இரண்டு குழந்தைகளை வைத்துத் தவித்துக் கொண்டிருக்கிற, ஒரு பட்டா நிலம்கூட இல்லாமல் குடிசையில் வாழ்ந்து கொண்டிருக்கிற, அந்த ஆதி திராவிடப் பெண்மணியின் குடும்பத்தின் எதிர்காலம் கருதி, அந்த இரண்டு குழந்தைகளின் வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்ற வகையில், ரூபாய் 2 இலட்சம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக முதலமைச்சரின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அவர்கள், இடி விழுந்து இறந்த குழந்தைகளுக்கு, இறந்த நபர்களுக்கு உதவி அளிக்க வேண்டுமென்கின்ற அந்த வேண்டுகோளோடு நிறுத்தியிருந்தால் பரவாயில்லை. எவ்வளவு என்று கணக்கிட்டு அதையும் அவர் கூறுவது அவ்வளவு சரியல்ல. நான் அதை அனுதாபத்தோடு நிச்சயமாகக் கவனிப்பேன். உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொண்டு, அவர் தருகின்ற விவரங்களின் அடிப்படையில் நாம் அனைவரும் ஆறுதல் அடையத்தக்க நிதி அந்தக் குடும்பத்திற்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் *10-35*

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குக் கர்நாடகத்தில் ஏற்பட்டுள்ள எதிர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குக் கர்நாடகத்தில் ஏற்பட்டுள்ள எதிர்ப்பு குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எல். ரவிச்சந்திரன், திரு. பி.கே. சேகர்பாபு ஆகியோர் அ.இ.அ.தி.மு.க. சார்பாகவும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. சி. ஞானசேகரன், திரு. ஆர்.எம். பழனிசாமி, திரு. ராம. சுப்புராம், திரு. விடியல் எஸ். சேகர், திரு எம்.ஆர். சுந்தரம் ஆகியோரும், பாட்டாளி மக்கள் கட்சியின்



சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல்முருகன், திரு. அ. தமிழரசு, திரு. இல. வேலுசாமி ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திரு. கே. உலகநாதன், திரு. எஸ். இராசசேகரன் ஆகியோரும், ம.தி.மு.க. சார்பாக திரு. நா. இராமகிருஷ்ணன், திரு. வீர. இளவரசன், திரு. ரா. வரதராஜன், டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் ஆகியோரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. சி. கோவிந்தசாமியும் விதி *56*-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மானமாக அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். (குறுக்கீடு) இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் அ.இ.அ.தி.மு.க. சார்பாக யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு)

**திரு. ஒ. பன்னீர்செல்வம்:** நாங்கள் கொடுத்தது வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *9-30* மணிக்குப் பின்னர் கொண்டு வந்து கொடுத்தது வந்திருக்காது. (குறுக்கீடு) சரி, இது குறித்து உங்களில் யார் பேசுகிறீர்கள்?

**திரு. ஒ. பன்னீர்செல்வம்:** நான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுகிறீர்களா? சரி, பேசுங்கள். (குறுக்கீடு) முதலில் நீங்கள் கொடுத்ததுதான் வரும். (குறுக்கீடு) முதலில் நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஒ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் நிலத்தடியில் அதிக அளவு ஃபுளோரைடு என்ற இரசாயனப் பொருள் கலந்திருக்கின்ற காரணத்தினால், நிலத்தடியிலிருந்து எடுக்கப்படுகின்ற நீரில் அந்த நச்சுத் தன்மை அதிக அளவு இருந்த காரணத்தினால், அந்த நீரைப் பருகுகின்ற அந்த மாவட்ட மக்களுக்குப் பல் வியாதியும் அந்த வியாதியைத் தொடர்ந்து பல்வேறு உடல் ரீதியான வியாதிகளும் அவர்களைத் தாக்கக்கூடிய ஓர் அபாயகரமான சூழ்நிலையைக் கருத்தில்கொண்டுதான், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற ஒரு திட்டத்தினை, அதனுடைய முன்மொழிவுகளைத் தயார் செய்து, திட்டத்திற்கான திட்ட மதிப்பீடுகளையும் தயார் செய்து, ஜப்பான் நாட்டினுடைய நிதி உதவியை வேண்டி—ஒரு மாநிலம்

வெளிநாடுகளில் நிதியுதவி பெற வேண்டுமானால் மத்திய அரசினுடைய அனுமதி தேவை—அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், திட்ட மதிப்பீடுகளெல்லாம் மத்திய அரசினுடைய அனுமதியைப் பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால், என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, நாங்கள் ஆட்சியிலிருக்கும்வரை அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இன்றைக்கு இருக்கின்ற தமிழக அரசுக்கு மத்திய அரசு அனுமதி கொடுத்து, ஜப்பான் நாட்டுடன் ஒப்பந்தம் ஏற்பட்டு, இன்றைக்கு அந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான பணிகளைத் துவக்குகின்ற நேரத்தில், அந்தப் பகுதி எங்களுடைய பகுதி என்று சில கன்னட அமைப்புக்கள் அங்கு சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையை ஏற்படுத்தி, இரு சகோதர மாநிலங்களின் மக்களிடையே மொழியால் பிரிந்துகொண்டு, அவர்கள் அங்கே வாழ்கின்ற தமிழ் மக்கள்மீதும், தமிழர்கள் ஏற்படுத்தியிருக்கின்ற வர்த்தக நிறுவனங்கள்மீதும், இங்கிருந்து செல்கின்ற பஸ்கள்மீதும் தாக்குதலைத் தொடங்கியிருக்கின்றார்கள் என்ற செய்தி, கடந்த நான்கைந்து தினங்களாக வந்துகொண்டிருக்கின்றது. அங்கே வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலை அங்கே உருவாகிக் கொண்டிருக்கின்றது.

ஒரு மாநிலத்தில் நம்முடைய பகுதியில் ஒரு திட்டத்தைத் துவக்க வேண்டுமென்று நாம் நல்லெண்ணத்தின் அடிப்படையில், மக்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தினுடைய அடிப்படையில், அந்தத் திட்டத்தைச் செயலாக்க முடியாத வகையில் நம்முடைய சகோதர மாநிலமே, இந்தியாவில் இருக்கின்ற ஓர் அமைப்பாக இருக்கின்ற இன்னொரு மாநிலம், பக்கத்து மாநிலத்திற்குக் குடிக்கக்கூட தண்ணீர் கொடுக்கமாட்டோம் என்று சொல்கின்ற அளவிற்கு தேசிய, இந்திய இறையாண்மை சென்றுகொண்டிருக்கின்றதனை மிகவும் வருத்தத்துடன் குறிப்பிட்டு, இம்மாதிரியான சூழ்நிலைகள் ஏற்படுவதற்கு என்ன காரணம்? அந்தக் காரணத்தைப் போக்குகின்ற மத்திய அரசு, இதில் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கின்றது? மத்திய அரசை வலியுறுத்தி தமிழக அரசு நடவடிக்கை எடுத்து, அந்தத் திட்டத்தினை உறுதியாக அந்தப் பகுதியில் நிறுவி, பாதிக்கப்பட்டிருக்கின்ற தருமபுரி, கிருஷ்ணகிரி மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கியே ஆகவேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் அங்கு வாழ்கின்ற மக்களுக்குப் பாதுகாப்பு தரவேண்டும். அந்தத் திட்டம்





நிறைவேறக்கூடிய காரண காரியங்களை, நடவடிக்கைகளை, நம்முடைய அரசு நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லி அமர்கின்றேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று கர்நாடகாவில் பெங்களூருவில் ஓடிக்கொண்டிருந்த தமிழ்ப் படங்கள் எந்தெந்த தியேட்டர்களில் ஓடிக்கொண்டிருந்தனவோ, அந்தத் தியேட்டர்களுக்குள்ளே சென்று, சில கர்நாடக அமைப்புகள் அங்கே தாக்குதல் நடத்தி தமிழ்த் திரைப்படங்களை அங்கே ஓட்டக்கூடாது என்றும், அதேபோல் பெங்களூருவிலே இருக்கக்கூடிய அல்சூர் பகுதியில், தமிழ்ச் சங்கம் பல ஆண்டுக் காலமாகத் தொடர்ந்து தமிழ்க் கலாச்சாரத்தைப் பேணிக் காத்து வந்து கொண்டிருக்கிற, தமிழர்களுடைய உரிமைக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய தமிழ்ச் சங்கத்தின் உள்ளே புகுந்து, அங்கே கன்னட அமைப்பைச் சார்ந்தவர்கள் சில பேர் வெளியே இருக்கக்கூடிய விளம்பரப் பலகை மற்றும் அறிவிப்புகளை எல்லாம் ழித்துப் போட்டு உடைத்து நாசம் செய்து இருக்கிறார்கள். அதேபோல, ரக்ஷன அமைப்பு என்கிற ஓர் அமைப்பை வைத்துக்கொண்டிருக்கிற நாராயண கௌடா அமைப்பைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள் சில பேர், அணைக்கல், கும்மளாபுரம் பகுதிகளில் நம்முடைய தமிழக அரசினுடைய பேருந்துகள் அங்கே போனபோது அங்கே இருக்கக்கூடிய பயணிகளையெல்லாம், 36 பயணிகளைக் கீழே இறக்கிவிட்டு, அந்த வண்டி, பேருந்துகளை எல்லாம் திருப்பி அனுப்பித் தாக்குதலைத் தொடுத்திருக்கிறார்கள். இப்படித் தமிழர்கள்மீது வன்முறைத் தாக்குதல்களைத் தொடங்கி இருக்கக்கூடிய இந்தக் கன்னடச் சங்கத்தினரின் அச்செயல்கள் நிச்சயமாக வன்மையாகக் கண்டிக்கத்தக்கவை. இதிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெரு முயற்சி எடுத்து, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை ஜப்பான் நாட்டுக்கு அனுப்பி, நிதி உதவியைப் பெறச் செய்து, கடந்த மாதத்திற்குமுன் 26 ஆம் தேதி அடிக்கல் நாட்டிய பிறகு, இந்தப் பிரச்சனையை அவர்கள் பூதாகரமாகக் கிளப்பி, சட்டமன்றத் தேர்தல் அந்தக் கர்நாடகாவில் விரைவில் நடக்கவிருக்கிற காரணத்தினாலே ஓட்டைப் பெற

வேண்டும் என்கிற காரணத்தில், ஒரு குறுகிய கண்ணோட்டத்தில் இப்படிப்பட்ட பிரச்சினையைக் கிளப்பிவிட்டு அதில் குளிர்காய நினைத்துக்கொண்டிருக்கிற அந்தக் கூட்டத்திற்கு நிச்சயமாக நம்முடைய மத்திய அரசு இரும்புக் கரம் கொண்டு இப்படிப்பட்டவர்களைத் தடுக்கவேண்டும் என்பதற்கான ஒரு கோரிக்கையைத்தான், இந்த அவையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுத்தான் இந்தத் தீர்மானத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஏற்கெனவே சென்ற 17 ஆம் தேதி மத்திய அரசுக்கு மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதத்தை எழுதி, இதிலே சில பேர் கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள் தலையிட்டு இதைக் கெடுக்கப் பார்க்கிறார்கள்; போதிய பாதுகாப்பும், வசதியும் செய்து கொடுத்து, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்கிற ஒரு கடிதத்தையும் அனுப்பியிருக்கிறார்கள்.

அதேபோல், சென்ற 27 ஆம் தேதி இதே அவையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து, மத்திய அரசுக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத் துணை புரிய வேண்டும் என்று ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நாம் போட்டு அனுப்பியிருக்கிறோம். இன்று 'இந்து' பத்திரிகையிலேகூட ஒரு செய்தி வந்திருக்கிறது. ஏற்கெனவே கர்நாடக அரசே 1998 ஆம் ஆண்டு ஜூன் 29 ஆம் தேதி, மத்திய நீர்வள ஆதாரத் துறைச் செயலாளரும், அமைச்சரும் கலந்துகொண்டிருக்கக்கூடிய கூட்டத்திலேயே அப்போது இருந்த கர்நாடக அரசு இதற்கு அவர்கள் ஒப்புதலையும் தந்துவிட்டிருக்கிறார்கள். இப்படி கர்நாடக அரசு ஏற்கெனவே ஒப்புதலைத் தந்துவிட்ட பிறகு, மத்திய அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நிதியை, ஜப்பான் நாட்டு நிதியைப் பெற்றுத் தந்து அதற்கான இசைவையும் தந்த பிறகு, இன்று திடீரென்று ஓட்டு வாங்கவேண்டும் என்கிற அந்தக் குறுகிய நோக்கத்திற்காக மட்டுமே இந்தப் பிரச்சினையைக் கிளப்பி, இப்படியெல்லாம் பூதாகரமாக இதை வளர்த்து, அங்கே தமிழ்ச் சேனல்கள் எல்லாம் இன்றிலிருந்து அங்கே ஓடக்கூடாது என்று தடை செய்துவிட்டிருக்கிறார்கள். திரைப்படத்தைத் திரையிடக் கூடாது என்கிறார்கள். தமிழர்களைத் தாக்க முற்படுகிறார்கள். இப்படிப்பட்ட கொடிய செயல்களில் இறங்கிக் கொண்டிருக்கக்கூடிய BJP–ஐச் சார்ந்திருக்கிற இடையூரப்பா; அவர் நமக்கு இடையூறு செய்து, அவர் நம்முடைய எல்லைக்கே





வந்து போராட்டத்தை நடத்தியிருக்கிறார். ஆகவே, தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்துணைக் கட்சிகளும் இன்று மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பின்னால் நின்று, தமிழர்களுடைய உரிமையை நாங்கள் விட்டுக் கொடுக்கமாட்டோம், இதை அறைகூவலாக ஏற்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-45

நிச்சயமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவேன் என்று 1996-லேயே அவர்கள், இதை அறைகூவலாக எடுத்துக்கொள்வோம் என்று தருமபுரி கூட்டத்திலே சொன்னார்கள். அதைப்போல இப்பொழுது அதைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வருகிறபோது, இதிலே திடீரென்று—ஏனென்றால், குடிநீருக்காகத் தண்ணீர் எடுப்பதை உச்ச நீதிமன்றமும் தடுக்கவில்லை. அதைப்போல, காவிரி நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பும் மிகத் தெளிவாக, குடிநீருக்குப் பயன்படுத்துவதற்காக காவிரியில் இருந்து தண்ணீரை எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்ன அடிப்படையில்தான் இன்று பெரிய மாநகரமாக விளங்கிக் கொண்டிருக்கிற பெங்களூருக்கே தண்ணீர் போனது. இல்லை என்று சொன்னால் பெங்களூருவிலே தண்ணீர்ப் பிரச்சினை வந்திருக்கும். ஆகவே, இப்படிக் குடிநீருக்காக எடுக்கக்கூடியதை எந்த ஒரு நீதிமன்றமும் நிச்சயமாகத் தடை செய்ய முடியாது. அவர்கள் வேண்டுமென்றே இப்படியெல்லாம் தடை செய்து, நம் தமிழர்களுடைய அந்த உரிமைக்கு, அவர்களுடைய வாழ்வாதாரத்திற்குச் சவால் விட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலையுள்ளது. கன்னட அமைப்பைச் சேர்ந்திருக்கக்கூடிய நாராயண கௌடா போன்றவர்கள், அதேபோல வாட்டாள் நாகராஜ் போன்றவர்களெல்லாம் இன்று இந்தப் பிரச்சினையைக் கையில் எடுத்துக்கொண்டு, நமக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருப்பதை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக மாண்புமிகு பிரதமருக்கு எப்படியாவது கடிதத்தை எழுதி—அங்கு இருக்கக்கூடிய காவல் துறை, இவ்வளவு நேற்று நடந்தும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருந்திருக்கிறது; தமிழ்ச் சங்க அலுவலகத்தை உடைத்து, போர்டுகளை உடைத்துத் தாக்குதல் நடத்தியவர்கள் யாருமே கைது செய்யப்படவில்லை; அதேபோல நம்முடைய அணைக்கல் பகுதியிலும், கும்மளாபுரத்திலும் ஏற்கெனவே இருந்த passenger–களை இறக்கிவிட்டபோதும், அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை—இப்படித் தடுத்துக் கொண்டிருக்கக்கூடிய அந்தக்

கன்னட அமைப்புகள்மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, தமிழர்கள் அங்கே பாதுகாப்பாக வாழ்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல எல்லைப் பிரச்சினையைக் கிளப்புகிறார்கள். இப்பொழுது நாம் அடிக்கல் நாட்டியிருக்கிற பிரச்சினை, தண்ணீர் எடுக்கக்கூடியதெல்லாம் தமிழ்நாட்டுப் பகுதியைச் சார்ந்தது. பல ஆண்டுக் காலமாக தமிழ்நாடுதான் அதை அனுபவித்துக் கொண்டு வந்திருக்கிறது. இதனை மத்திய அரசு தலையிட்டு, இது தமிழர்களுடைய எல்லை என்று அறிவிக்கச் செய்து, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக நெருக்கடியான நேரத்தில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சிகளுக்கும் வாய்ப்பு அளிக்கிற வகையில், இதைக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொண்டு பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் முதலில் நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு வறட்சியான, பின்தங்கிய மாவட்டங்களுக்கு அதிலும் குறிப்பாக நிலத்தடியிலே fluoride என்ற நச்சுத் தன்மை கலந்திருக்கிற அந்த மாவட்ட மக்களுக்குத் தவித்த வாய்க்குத் தண்ணீர் தருகிறமுகத்தான், அரிய ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்தது வரலாற்றுச் சிறப்புக்குரிய நிகழ்ச்சி என்று அந்த இரண்டு மாவட்டத்து மக்களும் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிற ஒரு நல்ல சூழல். இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலே திட்டமிடப்பட்டாலும்கூட, என்று நிறைவேற்றப்படும் என்று அந்த மாவட்ட மக்கள் ஏங்கி இருந்த வேளையில், கடந்த முறை 1996-2001-இல் தாங்கள் முதலமைச்சராக இருந்த வேளையில்தான் முதற்கட்டப் பணிகள் எல்லாம் துவக்கப்படும் என்று அறிவிப்பு செய்து, 10 கோடி ரூபாய் நிதியும்





ஒதுக்கீடு செய்து, முதல் கட்டப் பணியைத் துவக்கினீர்கள். ஆனால் எதிர்பாராதவிதமாக பொக்ரான் குண்டு வெடிப்பின் காரணமாக, ஜப்பான் நாடு நிதி உதவியை நிறுத்திவிட்ட காரணத்தால், அந்தத் திட்டம் தடைபட்டு, மீண்டும் தாங்கள் முதலமைச்சரான இந்த நேரத்தில் ஜப்பான் நாட்டு நிதி உதவியோடு மத்திய அரசின் அனுமதியைப் பெற்று, இந்த அரிய திட்டத்தைத் துவக்கி வைத்த தங்களுக்கு, அந்த இரண்டு மாவட்ட மக்களின் சார்பிலே மீண்டும் ஒரு முறை நெஞ்சார்ந்த நன்றியை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படி செயற்கரிய திட்டமான இந்தத் திட்டத்தை துவக்கிவைத்து நிறைவேற்றக்கூடிய வேளையில், கர்நாடகத்திலே வெறிபிடித்த சிலர் அரசியல் ஆதாயத்திற்காக அங்கே சட்டமன்றத் தேர்தல் வர இருக்கிறது; மக்களைத் திசை திருப்ப வேண்டும் என்ற கபட நாடகத்தின் அடிப்படையில், பாரதிய ஜனதா கட்சியினுடைய தலைவராக இருக்கிற எடியூரப்பா அவர்கள், இந்தப் பிரச்சினையைக் கையிலே எடுத்து வித்திட்டிருக்கிறார். அந்த எடியூரப்பாவினுடைய வஞ்சக வலையில் விழுந்த கன்னட வெறியர்கள் சில பேர், அதைக் கையில் எடுத்துக்கொண்டு இன்று ஆட்டம் போட்டுக் கொண்டிருப்பது நமக்கெல்லாம் வேதனையான செய்தி என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

முற்பகல் *10-50*

இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அங்கே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றக் கூடாது என்பது ஒரு பிரச்சினை. அதே நேரத்தில் எல்லைப் பிரச்சினையையும் முன்வைத்து, ஒகேனக்கல் பகுதிக்குள் வந்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள்கூட அந்தப் பகுதிக்குச் சென்றுவிட்டு வந்தோம். சென்ற நேரத்தில் அங்கே மக்கள் சொல்கிறார்கள்; கர்நாடகத்திலே வாழக்கூடிய தமிழர்களும், கன்னட மக்களும் சொல்கிறார்கள்; இந்தப் பிரச்சினையைத் தேவையில்லாமல் சிலர் கிளப்பிவிட்டு, அண்டை மாநிலத்தினுடைய சகோதர நல்லுறவுக்கு வேட்டு வைக்கிறார்கள் என்று கன்னடர்களே சொல்லக்கூடிய நிலையும் ஒரு பக்கம் உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, எவ்வளவுதான் அவர்கள் பிடிவாதம் பிடித்தாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இறையாண்மையைக் காக்கிற வகையில், அண்டை மாநில சகோதர நல்லுறவை வளர்க்கிற வகையில், நிதானமாக அடியெடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்களெல்லாம் உற்று நோக்கிக் கொண்டிருக்கிறோம். சகோதர

உறவை வளர்க்க வேண்டுமென்று நினைக்கிற தங்களை ஏற்றுக்கொள்ளாமல், நான் வேதனையோடு சொல்கிறேன்; தங்களின் கொடும்பாவியைக்கூட எரித்தது எங்களுக்கெல்லாம் வருத்தம் அளிக்கிறது என்ற செய்தியைத் தங்களுக்குச் சொல்வது மட்டுமல்ல; அண்டை மாநிலமாக இருக்கிற கர்நாடக மக்களுக்கும் இந்த மாமன்றத்தின்வாயிலாக வருத்தத்தைத் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படி எல்லைப் பிரச்சினைக்கும் வருகிறார்கள். இந்த எல்லைப் பிரச்சினை என்பது, கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்னாலே முடிந்துபோன பிரச்சினை. அப்போது இருந்த இரண்டு மாநிலங்களினுடைய மூத்த தலைவர்கள், முதலமைச்சராக இருந்தவர்கள், மிகப் பெரிய தலைவர்கள், நடுவண் அரசிலே பொறுப்பேற்று, தீர்த்து வைத்த பிரச்சினை. அந்தத் தீர்த்து வைத்த பிரச்சினையை இப்பொழுது கிளப்புகிறார்கள்; வேண்டுமென்றே கிளப்புகிறார்கள். அதிலும் எதைக் கொண்டு, எல்லைப் பிரச்சினை? குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு. இவர்கள் எல்லாம் மனிதாபிமானம் இல்லாதவர்கள். குடிநீர்ப் பிரச்சினை என்பது—நான் அதற்காக கண்டனத்தையும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்னொன்று எல்லைப் பிரச்சினையைக் கிளப்புவீர்களேயானால், நான் அடக்கத்தோடு இந்த மாமன்றத்தின்வாயிலாக கர்நாடக மக்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, நாங்கள் எல்லைப் பிரச்சினையைக் கிளப்பவில்லை; அடக்கத்தோடு இருக்கிறோம். கடந்த எல்லைப் பிரச்சினை முடிந்த நேரத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கு, நமக்குதான் பாதகம். அந்தப் பாதகத்தை எல்லாம் தாங்கிக்கொண்டு பொறுமையாக இருக்கிறோம். ஆனால் இப்பொழுது கர்நாடகாவிலே எல்லைப் பிரச்சினையைக் கிளப்புவீர்கள் என்று சொன்னால், நாங்களும் அமைதியாக இருக்க மாட்டோம். இப்பொழுது வேண்டுகோள் வைப்பது, கன்னட சகோதரர்களே, நீங்கள் வாருங்கள்; தமிழகத்திற்கு வாருங்கள்; வரவேற்கிறோம்; நல்லுறவை ஏற்றுக்கொள்கிறோம்; உங்களை மதிக்கிறோம்; இங்கே வாருங்கள்; ஒன்றாக உட்கார்ந்து உண்ணுவோம்; சகோதரர்களாக வாழ்வோம். அதிலே மாறுபட்ட கருத்து எங்களுக்கு இல்லை. ஒகேனகல்லுக்கே வாருங்கள்; சென்னைக்கு வாருங்கள்; வரவேற்கிறோம். ஆனால் தேவையில்லாமல் மீண்டும் நீங்கள் எல்லைப் பிரச்சினையைக் கிளப்புவீர்களேயானால் நாங்களும் பொறுத்திருக்க மாட்டோம். மீண்டும் பிரச்சினையை எழுப்புவோம். மத்திய அரசை வற்புறுத்துவோம். மீண்டும் எல்லைக் குழுவை



அமையுங்கள் என்போம். தமிழ்நாடு இழந்த பகுதியான பெங்களூரு, எங்களூரு என்போம். (மேசையைத் தட்டும் ஒலி) கோலார் மாவட்டம், தமிழர் மாவட்டம் என்போம். அதைப்போல, சாம்ராஜ் நகர், குண்டல்பேட், கொள்ளேகால் பகுதி, தமிழ்நாட்டிற்குச் சொந்தம் என்போம். அந்த நிலைக்கு எங்களை ஆளாக்காதீர்கள் என்ற வருத்தத்தோடு இந்தச் செய்தியைக் கன்னட மக்களுக்கு நான் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய பெருந்தன்மையை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கர்நாடகத்திலே பிரச்சினை. தமிழ்ச் சங்க அலுவலகத்தைத் தாக்குகிறார்கள்; திரைப்படக் கொட்டகையைச் சேதப்படுத்துகிறார்கள்; தமிழர்களை அச்சுறுத்துகிறார்கள். அங்கே கர்நாடக காவல் துறையோ, கர்நாடக அரசோ நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையிலே இருக்கிற கன்னட நடிகர்கள் வீட்டிற்குச் சேதம் வந்துவிடக் கூடாது என்று, காவல் துறை பாதுகாப்பு அளிக்கிற மகத்தான முதலமைச்சர்தான் அண்டை மாநில உறவை மதிக்கிற முதலமைச்சர்தான் மனித நேய முதலமைச்சர்தான் நம்முடைய கலைஞர் அவர்கள். ஆகவே, பாதிப்பே இல்லாத பிரச்சினையில், இல்லாத பகுதிகளில் பாதுகாப்பு கொடுக்கிறீர்கள். பாதிக்கப்படுகிற பகுதியில், அங்கே கர்நாடக அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, உங்கள் பெருந்தன்மையை, அடக்கத்தை நாங்கள் வரவேற்கிற அதேவேளையில் நீங்கள் கடுமையான எச்சரிக்கையும் கொடுத்திருக்கிறீர்கள். அதையும் நாங்கள் ஏற்றுப் பாராட்டுகிறோம். ஒட்டுமொத்தமாக இந்தச் சூழ்நிலையில் கர்நாடக அரசு சற்று விழிப்போடு இருக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், இந்தியாவில் இருக்கிற பிற மாநிலங்களைவிட, எல்லா மாநிலங்களை விட, இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் குந்தகம் விளைவிக்கிற மாநிலமாக மத்திய அரசினுடைய உத்தரவை மதிக்காத மாநிலமாக, உச்ச நீதிமன்றத்தினுடைய உத்தரவை மீறுகிற மாநிலமாக கர்நாடக மாநிலம் போய்க் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் மிகப் பெரிய கேள்வியை உருவாக்கக்கூடிய சூழ்நிலைக்குக் கர்நாடக அரசும் கர்நாடக மக்களும் போய்விடக் கூடாது என்ற அந்த வேதனையையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னொன்றுகூட, ஒகேனக்கல் குடிநீர்ப் பிரச்சினைப் பற்றிச் சொல்கிறார்கள். இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான்

முதலமைச்சராக இருந்து, அதற்கு முன்பும்கூட, ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு இந்த மாநிலங்கள் எல்லாம் 5 டி.எம்.சி. தண்ணீர் தமிழ்நாட்டிற்குக் குடிநீர் வழங்குவதாக ஒத்துக்கொண்டிருக்கிற வரலாறும் இருக்கிறது.

முற்பகல் 10-55

அதுமட்டுமல்ல; ஒகேனக்கல்லுக்கு மேலே 10 கிலோ மீட்டர் தொலைவிலே பிலிகுண்டு என்ற இடத்தில் நீர் அளவீடு செய்யப்படுகிறது. கர்நாடகாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு எவ்வளவு நீர் வருகிறது என்ற அளவீடு செய்து, 10 கிலோ மீட்டருக்குக் கீழேதான் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒகேனக்கல்லிலிருந்து தண்ணீர் எடுக்க இருக்கிறோம். இங்கே அவர்கள் எப்படி உரிமை கொண்டாட முடியும்? இது நமக்கு அளவீடு செய்து கொடுக்கப்பட்ட தண்ணீர். நம்முடைய எல்லை. இங்கே அவர்கள் கேட்பது நியாயம் இல்லை. இது மனிதாபிமானம் இல்லாத செயல். உலக நாடுகள் எல்லாம் ஒப்பந்தத்தை மதிக்கிற வேளையில், முடிந்துவிட்ட பிரச்சினையை, முடிந்துபோனதைக் கிளப்புகிற வகையிலே இப்படி முட்டுக்கட்டையாக இருப்பது கண்டனத்திற்குரியது என்பதை நான் மீண்டும் ஒரு முறை கடுமையாகவே இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, தங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்வதெல்லாம், நடுவண் அரசு நடுநிலையோடு இருக்கிறது. நடுநிலைக் கண்ணோடு பார்க்கிற நடுவண் அரசு சற்றுக் கடுமையாகவும் நடந்துகொள்வதற்குத் தாங்கள் வற்புறுத்த வேண்டும். இனியும் நாம் பொறுத்திருக்கக் கூடாது. இப்போது தமிழக அரசு பேருந்துகளுக்குச் சேதம், அங்கே தமிழர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை உருவாகிவிடக் கூடாது. நாம் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்ற வகையிலேதான் நீங்கள் இன்னும் சற்று வேகப்படுத்த வேண்டும், மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டு, அதே நேரத்தில் கர்நாடக அரசோடும் தொடர்புகொண்டு பேசுங்கள். நடுவண் அரசோடும் தொடர்புகொண்டு பேசுங்கள். ஒரு இணக்கமான சூழ்நிலை வந்தால் நாம் வரவேற்போம்; மதிப்போம்; இல்லையெனில், நாம் பொறுத்திருக்கக் கூடாது. நாம் காவிரியில் நம்முடைய பங்கை இழந்து நிற்கிறோம். தொடர்ந்து நமக்குப் பாதகம் வந்துகொண்டிருக்கிறது. இனியும் பொறுக்க முடியாது என்ற நிலைக்குத் தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் வேகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.





ஆகவே மீண்டும் அந்த ** இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இன்னொரு வேதனை. அவர்கள் எல்லையிலே வந்த நேரத்திலே, நம்முடைய தமிழ்நாட்டுக் காவல் துறை அதிகாரிகளே, அவர்கள் உள்ளே வருவதற்கு அனுமதித்திருக்கிறார்கள். அதையும் வேதனையோடு சொல்லி, அந்த எல்லையிலே நம்முடைய காவல் துறையின் பாதுகாப்புப் படையை அமர்த்த வேண்டும்; உள்ளே வருவதற்கு அனுமதிக்கக் கூடாது; நம்முடைய எல்லை என்பதை மீண்டும் சொல்லி, ஒட்டுமொத்தமாக நல்ல தீர்வினை விரைந்து உருவாக்குவதற்கு முதலமைச்சர் அவர்களே, தாங்கள் முடிவு எடுங்கள்; உங்கள் பின்னாலே தமிழ்நாட்டிலே இருக்கிற பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க.விலிருந்து அனைத்து அரசியல் கட்சிகளும், ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களும் தலைவர் கலைஞர் அவர்களே, உங்கள் பின்னால் நிற்கிறோம், நிற்கிறோம் என்ற வாக்குறுதியைச் சொல்லி நல்ல தீர்வினை எடுங்கள். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்ட மக்களின் ஒரு 40 ஆண்டுக் கால கோரிக்கையான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவால், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய பெரு முயற்சியால், மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதியோடும், கர்நாடக அரசாங்கத்தினுடைய முழுமையான ஒப்புதலோடும், இந்தத் திட்டம் இறுதி செய்யப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களாலே அந்தத் திட்டப் பணிகள் துவக்கப்பட்டுள்ள ஒரு சூழலில் கர்நாடகாவிலே அண்மையில் நடைபெற இருக்கிற சட்டமன்றத் தேர்தலை மனதிலே வைத்துக்கொண்டு, மத வெறி சக்தியான பாரதிய ஜனதா கட்சி இப்போது தேவையில்லாமல் வேண்டுமென்றே அரசியல் ஆதாயத்திற்காக, ஏற்கெனவே கர்நாடக அரசாங்கத்தாலே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய, மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கக்கூடிய, முழுக்க முழுக்க நம்முடைய தமிழகத்தின் எல்லையிலே நடைபெறக்கூடிய இந்தத் திட்டத்தை வேண்டுமென்றே, மத வெறியைத் தூண்டுகிற வகையிலும், அதனுடைய தொடர்ச்சியாக தற்போது இன வெறியைத் தூண்டிவிட்டு, அங்கே ஒரு அரசியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆதாயம் அடைகிற அற்ப நோக்கத்தோடு பாரதிய ஜனதா கட்சி இந்தத் தவறான நிலைபாடுகளுக்குத் தலைமை தாங்கக்கூடிய ஒரு மோசமான அணுகுமுறையை மேற்கொண்டிருக்கிறது.

*முற்பகல் 11-00*

அதன் தொடர்ச்சியாக இன்றைக்குச் சில கன்னட அமைப்புகளால், தமிழ்நாட்டிலிருந்து செல்கிற பயணிகள் பேருந்து தாக்கப்படுவது, தமிழ்த் திரைப்படங்கள் ஓடுகிற தியேட்டர்கள் அடித்து நொறுக்கப்படுவது, தமிழ்ச் சங்கம் தாக்கப்படுவது, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்ற மிக மோசமான, மத வெறி, இன வெறியைக் கிளப்புகிற வகையில் நிகழ்ச்சிகள் கர்நாடகத்திலே நடைபெற்றுக்கொண்டிருப்பது, மிகக் கடுமையாக, வன்மையாகக் கண்டிக்கத்தக்க ஒரு நிகழ்வாக மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி பார்க்கிறது. இந்த இரண்டு மாவட்ட மக்களின் நீண்ட நெடுநாளைய கனவாக இருந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய உத்தரவால், உள்ளாட்சித் துறை அமைச்சருடைய பெரு முயற்சியால், ஜப்பான் நாடுவரையில் சென்று பேசி, நிதியுதவியைப் பெற்று, இந்த அற்புதமான திட்டம் இன்றைக்குச் செயல் வடிவம் பெறுகிறபோது, இதைத் தடுக்கின்ற ஒரு தீய நோக்கத்தோடு, அரசியல் நோக்கத்தோடு இதைத் தடுக்கிற முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிற பாரதிய ஜனதா கட்சியும், அவர்களோடு இணைந்து இந்தக் கலவரத்தில் ஈடுபடுகிற சில கன்னட அமைப்புகளினுடைய செயல்பாடுகளைக் கடுமையாகக் கண்டிப்பதோடு, மத்திய அரசாங்கம் இதிலே இனியும் வேடிக்கை பார்க்காமல் உடனடியாகத் தலையிட்டு, மத்திய அரசின் அனுமதியோடு நிறைவேற்றப்படுகிற இந்தத் திட்டத்தைத் தடுக்கிற தீய சக்திகளினுடைய தவறான இந்தப் போக்குகளைத் தடுத்து நிறுத்தி, இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேறுவதற்கு மத்திய அரசு அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

அதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், தமிழக அரசும் மேற்கொள்கிற அனைத்துவிதமான நடவடிக்கைகளுக்கும் மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியும், இங்கேயுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருங்கிணைந்து நிற்கும் என்று, ஏற்கெனவே நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதே அவையிலே முன்மொழிந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, மத்திய



அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட கலவரங்கள் சூழ்ந்து வருகிற சூழலில், இரண்டு மாநில மக்களுக்கிடையிலே தேவையில்லாத ஒரு மோதலை உருவாக்கக்கூடிய சூழலில், சில கன்னட வெறி சக்திகளும், மத வெறி சக்திகளும் இன்றைக்குக் கர்நாடகத்திலே துடித்துக்கொண்டு கலவரத்தில் ஈடுபடுவதைத் தொடர்ந்து மத்திய அரசு அனுமதிக்கக்கூடாது. ஆகவே, குடிநீர்த் திட்டம் நிறைவேறவேண்டும்; நாட்டின் இறையாண்மை பாதுகாக்கப்படவேண்டும். அதில் மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு, அவர்களாலே ஒப்புக்கொள்ளப்பட்ட இந்தத் திட்டம் தடையின்றி நிறைவேற, அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வலியுறுத்தி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசும்போது, ** என்று சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, கர்நாடக மாநிலத்திலே பாரதிய ஜனதா கட்சியால் அரசியல் உள்நோக்கத்தோடு தொடங்கப்பட்ட நிகழ்வு என்பது, தமிழகத்திலிருந்து செல்லுகின்ற பேருந்துகள் தடுக்கப்படுவதும், பயணிகள் இறக்கப்படுவதும், தமிழ்ச் சினிமாக்களைத் திரையிடும் கொட்டகைகள் தாக்கப்படுவதும், தமிழ்ச் சங்கத்தில் புகுந்து இரகளையிலே ஈடுபடுவதுமான நிகழ்ச்சிக்குக் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறது.

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுடைய நீண்ட நாளைய கோரிக்கை, குடிநீர்ப் பிரச்சினை. முன்பு பேசியவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த மாவட்ட மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத நிலையைப் போக்குவதற்குரிய முயற்சியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2008 ஏப்ரல் 1

நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் மிகுந்த சிரத்தையோடு மேற்கொண்டு, அதை ஏற்பாடு செய்து, ஜப்பான் நாட்டு நிதியுதவியைப் பெற்றுத் தொடங்குவதற்கான முன்முயற்சிகளை மேற்கொண்டிருக்கிற இந்த வேளையில், உள்நோக்கத்தோடு அவற்றைத் தடுப்பதற்கான முயற்சியை பாரதிய ஜனதா கட்சியும், வேறு சில அமைப்புகளும் செய்கின்றன.

குறிப்பாக, ஐக்கிய நாடுகள் சபையிலேகூட, உலக அளவிலே பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி விவாதிக்கப்பட்டாலும், குடிநீருக்குரிய அந்தப் பிரச்சினை என்பது எவ்விதமான தடையுமில்லாமல் வழங்கப்பட வேண்டுமென்பதுதான் ஐக்கிய நாடுகள் சபையிலே வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே பார்க்கிறபோதுகூட, இந்தக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் கர்நாடகம் எந்தவகையிலும் தடையாக இருக்கக் கூடாது. காவிரி நீர்ப் பிரச்சினையிலே மிகப் பெரிய தடைக் கல்லை ஏற்படுத்தியிருக்கிறது. அது நடுவர் மன்றத் தீர்ப்பானாலும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பானாலும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது கர்நாடகம். அதைத் தடுத்து நிறுத்தி, சரியான திசைவழியிலே கொண்டு செல்வதற்குரிய முயற்சி நமது தேசத்திலே நடைபெறுவதற்கான வாய்ப்புகள் குறைந்துகொண்டே இருப்பது என்பது வேதனைக்குரிய ஒன்று.

*முற்பகல் 11-05*

குறிப்பாக, சமீப காலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்தச் செய்தியைப் பார்க்கிறபொழுது கர்நாடக மாநிலம் என்ற முறையில் பார்த்தால், பாரதிய ஜனதா கட்சியினுடைய செயல்பாடுகள் என்று பார்க்கும்போதும் சரி, இந்த ஒகேனக்கல் பிரச்சினையைப் பற்றி அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளைப் பொறுத்தவரையிலும் பார்க்கிறபோதும் சரி, தமிழகத்தை மிரட்டுகின்ற போக்கிலேயே அவர்களுடைய செயல்பாடுகள் அமைந்திருக்கின்றன. இதற்கு நாம் அஞ்சப் போகிறோமா? எந்தவகையிலே விடை காண்பதற்குரிய முயற்சியை எடுக்கப் போகிறோம் என்பதுதான் இன்றைக்கு இருக்கிற கேள்வி. குறிப்பாக இதிலே தலையிட்டுத் தீர்வு காணவேண்டியது மத்திய அரசு. இதிலே விரைவான தீர்வு காண்பதற்கான முயற்சியை மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டுத் தீர்ப்பதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டும் என்பதை நம்முடைய மன்றம் வலியுறுத்த வேண்டும். குறிப்பாக, அந்த ஒகேனக்கல் பகுதிகளில் கடந்த சில மாதங்களாகவே கன்னடர்கள் குழுக்கள், குழுக்களாக, கூட்டமாகக்



2008 ஏப்ரல் 1] [திரு. வை. சிவபுண்ணியம்]

கொடி பிடித்துக் கோஷம் போடுவதும், நமது ஒகேனக்கல் பகுதிகளுக்கே வந்து, அது எங்களுக்கு உரிமையானது என்று கர்நாடகக் காவல் துறையினுடைய உதவியோடு நமது எல்லையிலே வந்து போராட்டம் நடத்துவதுமான செய்திகள் வந்துகொண்டேயிருக்கின்றன. இதை நம்முடைய தமிழகக் காவல் துறையும் பார்த்துக்கொண்டிருக்கிறது என்ற வருத்தமான செய்தியும் அங்கிருந்து வருகிறது. அப்படியானால், நமது மாநில எல்லையிலே இன்னொரு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளே புகுந்து தனக்குச் சொந்தம் என்று உரிமை கொண்டாடுவதற்குரியவரையிலும் அவர்கள் வருகிறார்கள் என்று சொன்னால், நாம் அதைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமா என்பதுதான் இன்றைக்கு இருக்கிற பிரதானமான கேள்வி. 'ஒகேனக்கல் பாதுகாப்பு' என்ற ஓர் அமைப்பு அங்கே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. எங்களுடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நஞ்சப்பன் தலைமையில் அமைப்பாளராகக் கொண்டு அது இயங்கி வருகிறது. அவர்களுடைய ஆதங்கம், அவர்களுடைய கோரிக்கை என்பது இது இப்படியே நீடித்துக்கொண்டிருந்தால் என்ன செய்வது; நாங்களும் எதிர்த்துப் போராட்டம் நடத்துவதற்குத் தயாராக இருக்கிறோம்; நம்முடைய தமிழக எல்லையைப் பாதுகாப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் உறுதியாகச் சொல்லுகிறார்கள். ஆகவே, எந்தத் தியாகத்தையும் செய்யத் தயார் என்று அந்தப் பகுதியிலே வாழ்கிற மக்களுடைய கோரிக்கையாகவும், உயிர்ப் பிரச்சினையாகவும் இருக்கிற காரணத்தினாலே, இதிலே உடனடியாக மத்திய அரசுதான் தலையிட வேண்டிய அவசியம் இருக்கிறது.

இப்பொழுது எனக்கு நினைவுக்கு வருவதெல்லாம் நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பது இந்திய நாட்டிலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகிறபொழுது இதிலே எப்படியெல்லாம் பாராமுகமாக இருக்கிறோம் என்பதற்குரிய கருத்து அதிலே பதியப்பட்டிருக்கிறது. அதுகூட பல வருத்தங்களைக்கூட ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால், இன்றைக்கு அது பொருத்தமாக இருக்கிறதே! "எல்லா வகையிலும் முட்டி மோதி, மூச்சிறைக்க முன்னேறுவதற்கான முயற்சிகளை எடுக்கிறபோது அதற்குரிய தடைக் கல்லாக இருந்துவிடக் கூடாது" என்ற வார்த்தைகள் அதிலே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு அது பொருத்தமாக இருப்பதாக நான் உணருகிறேன். ஆகவே, மத்திய அரசு இதிலே சுணக்கம் காட்டுவது என்பதோ, தாமதம்

செய்வது என்பதோ வேறுவிதமாக அரசியல் காரணங்களாலோ இதிலே காலம் தாழ்த்துவது என்பதும் சரியாக இருக்காது என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அழுத்தமான கருத்து. இதிலே உடனடியாகத் தீர்வு காண்பதற்கான முயற்சியை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வலுவாகச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல, குறிப்பாக இதிலே என்னுடைய உணர்வு என்பது, இந்தப் பிரச்சினையின்மீது இப்பொழுது ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கவன ஈர்ப்பாக எடுத்து நாம் பேசுகிறோம். அனைத்து அரசியல் கட்சிகளுமே உணர்வுப்பூர்வமாக இந்தக் கருத்தை வெளியிடுகிறோம். இது மட்டுமே போதுமானதா? இதிலே ஒரு பதிலைச் சொல்லி எங்களுக்கு திருப்தி ஏற்படுத்துவது என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் ஏற்றுக்கொள்ளவில்லை. நம்முடைய உணர்வை தமிழக மக்களுடைய உணர்வை வெளிப்படுத்துவதற்கான முயற்சியாக ஏதாவது ஒரு கண்டன இயக்கம், அது 'பந்த்' போன்ற அளவிலே நடத்துவதற்கான முயற்சியை உடனடியாக எடுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் கருத்தாக முன்வைக்க விரும்புகிறேன். அதை எந்த வடிவத்திலே நம்முடைய உணர்வுகளை, தமிழகத்தினுடைய உணர்வுகளை, நம்முடைய நியாயத்தை எடுத்துவைக்க வேண்டுமென்பதற்கான முன்முயற்சியாக இந்தக் கருத்தின்மீது இந்த அவை தீர்மானிக்க வேண்டும். அதை சாத்வீகமான ஒரு முறையிலே நாம் நடத்தலாம். ஆனால், மாறுபட்ட கருத்து இல்லை. உணர்வுகளை வெளிப்படுத்த தவறிவிடக் கூடாது என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்து. அதை இந்த அவையின்மூலமாக ஒரு தீர்மானமாக நிறைவேற்றுவதும், உடனடியாக மத்திய அரசு தலையிடுவதும், நம்முடைய உரிமையைப் பெறுவதற்குரிய முயற்சியை எடுப்பதும் உடனே தேவையாக இருக்கிறது என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ம.தி.மு.க. சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன்.

*முற்பகல் 11-10*

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் நீண்ட காலக்



கோரிக்கை, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். நிலத்தடி நீரில் fluoride என்ற நச்சுத் தன்மை கலந்திருப்பதால், அந்தப் பகுதிவாழ் மக்கள் தொடர்ந்து பல்வேறு நோய்களுக்கு ஆட்பட்டு, அதன் காரணமாக இப்பொழுது தீர்வு காணுகின்ற வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே அடிக்கல் நாட்டியதையொட்டி கர்நாடக அமைப்பினரும், சில அரசியல் கட்சித் தலைவர்களும் ஒகேனக்கல் பகுதி எல்லைக்குள் நுழைந்து, அத்துமீறி நுழைந்து தங்களுடைய வெறித்தனத்தைக் காட்டியிருப்பது, கண்டனத்திற்குரியது. ஒகேனக்கல் கர்நாடக மாநிலத்தைச் சார்ந்தது என்று அவர்கள் சொன்னது, இந்திய இறையாண்மைக்கே வேட்டு வைக்கின்ற சம்பவம் ஆகும். அதைத் தொடர்ந்து இன்றைய காலைப் பத்திரிகையிலே பார்க்கின்றபோது, நெஞ்செல்லாம் எரிகின்ற வகையிலே தமிழர்கள் வாழ்கின்ற பகுதி, அல்சூரில் தமிழ்ச் சங்கம் ஒன்று இயங்கி வருகிறது; அந்தத் தமிழ்ச் சங்கத்திற்குள் நுழைந்து அட்டகாசம் செய்து அங்கே வன்முறையை அரங்கேற்றியிருக்கின்றார்கள்.

அதைப்போல, தமிழர்கள் வணங்குகின்ற வழிபாட்டுத் தலங்கள் கருமாரியம்மன் கோயில், விநாயகர் கோயில்களுக்கு எல்லாம் சென்று அங்கே வைத்திருக்கின்ற ஓடுகளையெல்லாம் கழற்றி அடித்து, செருப்பால் அடித்து அதை நொறுக்கியிருக்கின்றார்கள். மேலும் வருந்தத்தக்கச் செய்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உருவ பொம்மையையே எரித்திருக்கின்றார்கள் என்று சொன்னால், அது மிகவும் கண்டனத்திற்குரியது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதைப்போல தேன்கனிக்கோட்டையிலிருந்து அணைக்கல் என்ற பகுதிக்குச் சென்ற தமிழ்நாடு போக்குவரத்துக் கழகப் பேருந்தில் பயணித்த 36 பேர்களை, அந்தப் பயணிகளைக் கீழே இறக்கிவிட்டு தமிழகத்திற்கு அனுப்பி வைத்தது கொடுஞ்செயலாகும். கர்நாடக அரசின் தலைமைச் செயலாளர் ஒரு அறிக்கை தந்துள்ளார்கள். அது கடும் கண்டனத்திற்குரியது. ஒகேனக்கல் பகுதி என்பது, தமிழ்நாட்டிற்கு எல்லைக்குட்பட்டதல்ல; அதிலே தமிழக அரசு எந்த உரிமையும் கொண்டாட முடியாது என்கின்ற வகையிலே அந்த அறிக்கை அமைந்திருக்கிறது. இதெல்லாம் கண்டனத்திற்குரியது. பிரிட்டிஷ் அரசு ஆண்ட காலத்திலே அந்த அரசால் அறிவிக்கப்பட்டுள்ள அந்த வனத் துறை அமைப்பிலே ஒகேனக்கல் பகுதி என்பது கர்நாடகத்தைச் சார்ந்தது கிடையாது; தமிழகத்தைச் சார்ந்தது என்று மேலும் Survey of India என்ற அலுவலகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[திரு. நா. இராமகிருஷ்ணன்] [2008 ஏப்ரல் 1

அது தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. இந்த நிலைகளையெல்லாம் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசை வலியுறுத்தி, இந்தச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாத வண்ணம் இரும்புக் கரத்தைக் கொண்டு மத்திய அரசு அடக்க வேண்டுமென்று கேட்பதோடு, தமிழக அரசு எடுக்கின்ற நடவடிக்கைக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவைத் தெரிவிக்கும் என்பதனையும், அதைப்போலவே மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஒகேனக்கல் பகுதியிலே இது குறித்து தன்னுடைய கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது என்பதனையும் இந்த அவையிலே பதிவு செய்து அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக கர்நாடகாவைச் சேர்ந்தவர்கள், தமிழர்களை அச்சுறுத்தியும், தமிழ்ப் பதாகைகளை அடித்து நொறுக்கியும், அங்குள்ள பேருந்துகளைச் சேதப்படுத்தியும் வன்முறையிலே ஈடுபட்டு வருகிறார்கள். எப்பொழுதெல்லாம் தமிழகத்திற்கு நல்ல காரியங்களை, நல்ல திட்டங்களை நம்முடைய தமிழக முதல்வர் கொண்டுவருகிறாரோ, அப்பொழுதெல்லாம் இப்படிப்பட்ட தமிழின விரோதிகள் தொடர்ந்து தமிழகத்திற்கு எதிராக வன்முறையில் ஈடுபடுவது வழக்கம். ஆனால், தற்போது தமிழர்களையும் அங்கே துன்புறுத்துகிறார்கள்; அடிக்கிறார்கள். தமிழினத் தலைவராக இருக்கின்ற நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய புதல்வியின் வீட்டையே தாக்கினார்கள். இவையெல்லாம் எதைக் காட்டுகிறது என்றால், நாம் பெருந்தன்மையாக ஏற்கெனவே பல இடங்களைக் கர்நாடகாவிற்குத் தாரை வார்த்துக் கொடுத்திருக்கிறோம். இப்போது ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது உலக அளவிலே போற்றப்படக்கூடிய, மதிக்கப்படக்கூடிய ஒரு திட்டம். கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களிலே பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் கிடைக்காததால், அங்கே பல சங்கடங்களுக்கு ஆளான நம்முடைய தமிழின மக்களுக்கு, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஜப்பான் வரை சென்று ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை இங்கே கொண்டு வந்து இந்த மாபெரும் திட்டத்தை இங்கே நிறைவேற்றும்தருவாயிலே, இப்படிப்பட்ட இன்னல்களை அங்கே ஏற்படுத்துகிறார்கள். குறிப்பாக, தமிழ்த்



2008 ஏப்ரல் 1] [திரு. கு. செல்வம்]

திரையரங்குகளிலே தமிழ்ப் படத்தை அங்கே ஓடவிடுவதில்லை. தமிழ்ச் சேனல்களையும் முடக்கி வைத்திருக்கிறார்கள். தமிழகத்தைச் சார்ந்த திரைத் துறையில் இருக்கின்ற நம்முடைய நடிகர் நடிகைகளும் இதற்குக் குரல் கொடுக்க வேண்டும். கர்நாடக எல்லையில் எப்படிக் கன்னடர்கள் ஒற்றுமையாக இருக்கிறார்களோ அப்படித் தமிழகத்திலே இருக்கின்ற நடிகர்கள் எல்லாம் அந்த அரசுக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டுமென்று நாம் வலியுறுத்துகிறோம். அதேபோன்று அவர்கள் நடத்தும் இந்தக் காலியாட்டங்களுக்கும் அட்டூழியங்களுக்கெல்லாம் பதிலடி கொடுப்பது ஒன்றும் பெரிய காரியம் இல்லை. ஆனால், நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள், இந்தியாவிலே அமைதியை ஏற்படுத்த வேண்டும்; எப்படி இந்தியாவிற்குத் தமிழகம் வழிகாட்டியாக இருக்கிறதோ, அப்படி அவர்களையும் நம்முடைய சகோதரர்களாக, அண்டை மாநிலங்களை மதிக்கின்ற தலைவராக இருக்கிறார். ஆனால், கன்னடர்கள் தமிழகத்திலே அமைதியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தமிழர்கள், கர்நாடகத்திலே நல்ல அமைதியானதொரு வாழ்க்கையை வாழமுடியவில்லை. ஆக, மத்திய அரசு இதிலே தலையிட வேண்டும். குறிப்பாக, நம்முடைய அ.திமுக., ம.தி.மு.க. போன்ற கட்சிகளெல்லாம் தமிழினத் தலைவர் கலைஞரின் கரத்தை வலுப்படுத்துவோம் என்று இங்கே உறுதியளித்திருக்கிறார்கள். அந்தவகையிலே, அனைத்துத் தலைவர்களையும் அழைத்துக் கொண்டு, புதுடெல்லிக்குச் சென்று, பிரதமரைச் சந்தித்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வலியுறுத்த வேண்டுமென்று பதிவு செய்கிறேன்.

முற்பகல் *11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த்.

***திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருமே, இந்த அவையிலே வாழ்கின்ற தமிழர்கள், எந்த மாதிரியெல்லாம் கன்னடத்திலே வாழ்கின்ற தமிழர்கள், எந்த மாதிரியெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று எல்லோருமே பேசியிருக்கிறார்கள். ஆனால், இந்த நிகழ்ச்சி அடிக்கடி அதிகமாக அங்கு நடக்கிறது. இதற்கு நாம், மற்றவர்களைக் காரணமாய்ச் சொல்வதைவிட, நாம் நம்மையே எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு பழமொழியைக்கூட தமிழிலே சொல்வார்கள்:

"ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்கணும்;
பாடிக் கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்கணும்"

என்று. நமக்கு ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்கவும் தெரியும்; பாடிக் கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்கவும் தெரியும். ஆனால் கன்னடத்துக்காரர்கள், அதை பயம் என்று நினைக்கிறார்கள். ஆனால், நாம் அதை பயம் என்று நினைக்கவில்லை. முன்னெச்சரிக்கை கருதி, நாம் அமைதி காத்துக்கொண்டிருக்கிறோம்.

அதே நேரத்தில், மத்திய அரசிலே காங்கிரஸின் கூட்டணிக் கட்சியாக கம்யூனிஸ்டு இருக்கிறது, அவர்கள் அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்று வரும்போது, ஒரு புள்ளியை வைக்கிறார்கள், கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள். அதை, மத்தியிலே இருக்கிற காங்கிரஸ் கட்சி கேட்க முடியாமல், பயந்துகொண்டிருக்கிறது, அதை நிறைவேற்றுவோமா, நிறைவேற்ற முடியதா என்று. அதேமாதிரி ஒரு புள்ளியைத் தமிழக அரசு வைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. அப்படி வைத்தால்தான், தமிழ்நாட்டிற்குக் குடிநீர் நிச்சயமாகக் கிடைக்கும். இல்லையென்றால், காவிரி மாதிரி இதுவும், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், நிச்சயமாக யாருக்கும் கிடைக்காமல் போய்விடுமோ என்கிற பயம் இருக்கிறது என்று சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் தாங்கள் எடுத்துக்கொண்ட சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது, மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு திரு. கு. செல்வம், மாண்புமிகு திரு. விஜயகாந்த் ஆகிய மாமன்ற உறுப்பினர்கள் ஒத்த குரல் எடுத்து, உரிமைக்காக ஓங்கிப் பேசியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நான் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்மிடையே அரசியல் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், தமிழ்நாட்டு உரிமையைக் கட்டிக் காப்பதில் தமிழ்நாட்டுக் கட்சிகள் ஓரணியிலே இருக்கின்றன என்பதை அனைவரும் எடுத்துக்காட்டியதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) நான்





அனைவருக்கும். தமிழக அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஒற்றுமையும், இந்தப் பாசப் பிணைப்பும் நம்மிடையே இருக்குமானால், பல பிரச்சினைகளில் நாம் வெற்றி காண முடியும்.

இந்த இடத்தில் உரையாற்றியவர்களெல்லாம், சமீப காலமாக ஒகேனக்கல் பகுதியிலே ஒரு கும்பலால் ஏற்பட்டிருக்கிற அசாதாரண நிலை குறித்தும், அதன் தொடர்பாக நேற்று கர்நாடக மாநிலத்தின் தலைநகர் பெங்களூருவில் ஏற்பட்டிருக்கிற விரும்பத்தகாத நிகழ்ச்சிகளையும் மிகவும் தெளிவாக இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். எல்லாவற்றையும் தொகுத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், கர்நாடக அரசைக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள். சில விஷமிகள் இப்படி நடப்பதைக் கண்டித்து கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள்; இது ஒன்று. இரண்டாவது, தமிழ்நாட்டு உரிமையை நிலைநாட்ட வேண்டுமென்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு இதில் உடனடியாகத் தலையிட வேண்டும் என்பதையும் எல்லோரும் அழுத்தமாகத் தெரிவித்திருக்கிறார்கள். 'மாண்புமிகு முதல்வர் அவர்கள் பின்னால் நாங்கள் நிற்போம்' என்ற உறுதியையும் எங்களுக்கு அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-20*

நம்முடைய முதல்வர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட வேண்டும் என்பதை இன்றைக்கு அல்ல; 17-3-2008 அன்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார்கள்:

"Dear Prime Minister,

This is regarding Hogenakkal Drinking Water Supply Project for which 1.4 t.m.c. feet of water is proposed to be drawn annually from Cauvery river to benefit about 29.8 lakh people living in 6,500 rural habitations, 17 town panchayats and 3 municipalities in the fluoride affected districts Dharmapuri and Krishnagiri"

என்று எழுதிவிட்டு,

"I wish to bring to your kind notice that the Hogenakkal Water Supply Project is proposed to be implemented at a cost of Rs.1,334 crores with funding assistance of the Japan Bank for International Co-operation"

என்பதையும் சுட்டிக்காட்டிவிட்டுத் தெரிவிக்கிறார்:

[THIRU DURAI MURUGAN] [2008 ஏப்ரல் 1

"Necessary clearance for this project has been given by the Government of India in the Ministry of Water Resources in its Reference No.3/39/96, dated 21-9-1998. The quantity of water to be utilized for this purpose will be met out from the share allocated by the Cauvery Water Disputes Tribunal in Tamil Nadu, as stipulated by the Government of India. Similar conditions were stipulated by the Government of India when Bangalore Water Supply Project was cleared earlier. The clearance of the Government of India in turn was based on the discussion held in the meeting of the Secretary, Ministry of Water Resources on 29-6-1998 with the senior officials of Tamil Nadu and Karnataka.

Following this, Tamil Nadu also obtained necessary clearance from the Union Ministry of Environment and Forest, Urban Affairs and Rural Development. These facts have also been informed to the Chief Secretary, Karnataka by the Chief Secretary of Tamil Nadu in his letter dated 8-3-2008 in response to the former's letter dated 28-2-2008"

என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, இது தருமபுரியிலே இரண்டு மாவட்டங்களில் வாழ்கின்ற சுமார் 40 இலட்சம் பேர்களுக்கு, 30 இலட்சம் பேர்களுக்குக் குடிப்பதற்காகத்தான், பயிரிடுவதற்காக அல்ல; இந்தியாவிலே National Water Policy என்று ஒன்று இருக்கிறது. அதனுடைய முக்கிய நோக்கம் என்னவென்று கேட்டால், குடிதண்ணீருக்குத்தான் முன்னுரிமை தரவேண்டும் என்பதுதான் National Water Policy–யினுடைய முக்கிய நோக்கம். ஆகவே, நாம் குடிதண்ணீருக்காகத்தான் இந்தத் தண்ணீரைக் கேட்கிறோம்; எடுக்கிறோம்.

அடுத்து, யாருடைய பாகத்திலும் நாம் அதை எடுக்கவில்லை. நமக்கு காவிரி நடுவர் மன்றம் அளிக்கிற தீர்ப்பில் இந்த 1.4 டி.எம்.சி. தண்ணீரை அவர்கள் அளக்கிற இடத்திலே குறைத்துக்கொள்ளுங்கள். 419 டி.எம்.சி. என்று அவர்கள் நமக்கு அறுதியிட்டிருந்தால், இந்த 1.4 டி.எம்.சி.யை நீங்கள் அதிலே கழித்துக்கொள்ளுங்கள் என்று நமக்கு வருகிற பங்கில்தான் இந்த 1.4 டி.எம்.சி.யை நாம் எடுக்கிறோமே தவிர, கர்நாடகத்திலிருந்து யாசகமல்ல; அவர்கள் பாகத்திலே நாம் கேட்கவில்லை. இதை முதலில் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

*முற்பகல் 11-25*

அடுத்து, எங்கே எடுக்கப் போகிறோம்? கர்நாடக எல்லையிலா? அவர்கள் மண்ணிலா? கர்நாடக மாநிலத்திற்கு உட்பட்ட பகுதியிலா?



2008 ஏப்ரல் 1] [திரு. துரைமுருகன்]

அல்ல. அந்த மொழிவாரி மாநிலம் அமைந்தபொழுது State Re-organisation Committee போட்ட கோடு, நீங்கள் பார்ப்பீர்களேயானால், அந்தக் காவிரி ஓடுகிறதென்றால், நடுவிலே அந்தக் கோடு வருகிறது. அதனைப் போட்ட புண்ணியவான் ஒன்று அப்படியாவது போட்டிருக்க வேண்டும்; அல்லது இப்படியாவது போட்டிருக்க வேண்டும். நடுவிலே போட்டான். ஆனால் அக்கரைக்கு சென்று நாம் எடுக்கவில்லை. நம் தமிழ்நாட்டின் பக்கத்திலே இருக்கிற கரையிலிருந்து நாம் தண்ணீரை எடுக்கிறோம். இதை எடுக்க வேண்டாம் என்று சொல்வதற்கு என்ன உரிமை? உரிமை ஒரு பக்கம் இருக்கட்டும். இது மனிதாபிமானப் பிரச்சினை அல்லவா? அதைத்தானே மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பத் திரும்பச் சொன்னார்கள்? எந்த மாநிலமாக இருக்கட்டும். ஒரு குடிதண்ணீர்ப் பிரச்சினைக்காகவா சண்டை போடுவது? அதிலும், நம்முடைய இடத்தில், நம்முடைய பங்கிலே எடுக்கிறோம். இன்னொன்று; அதைத்தான் நான் படித்துக் காட்டினேன். ஏதோ நாமே நினைத்து, அங்கே போய், எங்களுடைய பாகம், எங்களுடைய இடம், இதிலே தண்ணீர் எடுத்துக்கொள்கிறோம் என்று நாம் எடுக்கவில்லை. அப்பொழுதுகூட மத்திய அரசாங்கத்தை அணுகி, அங்கே இருக்கிற Water Resources Minister–ஐப் பார்த்து, அதற்குப் பிறகு கர்நாடகத்திலே இருக்கிற முதன்மைச் செயலாளரை அழைத்து, நம்முடைய செயலாளர்கள் போய், அங்கே இருக்கின்ற Water Board Chairman-ஐக் கூப்பிட்டு, நம் அதிகாரிகளை உட்கார வைத்துப் பேசி, முடிவு பண்ணித்தான் நாம் எடுத்துக்கொள்ளலாம்; தமிழ்நாட்டுப் பங்கில் நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்; அவர்கள் கர்நாடகா பங்கில் பெங்களூருவுக்குத் தண்ணீரை எடுத்துக்கொள்ளட்டும் என்று ஒப்பந்தம் போட்டதற்குப் பிறகுதான், ஒரு தீர்மானத்திற்கு வந்த பிறகுதான் நாம் எடுக்கிறோமே தவிர, நாமாகப் போய் எங்களுடைய பகுதி, தண்ணீரை எடுக்கிறோம் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆக, நாம் எந்த இடத்திலும் எல்லை மீறவில்லை.

அதுமட்டுமல்லாமல், இந்தப் பிரச்சினைகளுக்கு இன்னும் சில வேகத்தை அவர்கள் காட்டியிருக்கிறார்கள். ஆனால், அண்டை மாநிலத்தோடு நாம் நல்லுறவு காணவேண்டுமென்று, நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் விரும்புகிறார்கள். அவர் நீண்ட நெடிய காலம் இந்த அரசியலில் இருந்தவர். அவர் பல அரசுகளைப் பார்த்தவர், பல அனுபவங்களைப் பெற்றவர். குறிப்பாக, சிறப்பாக— காவிரியோடு—அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சரான நேரத்தில் அவர் பொதுப் பணித் துறை அமைச்சர். அப்போது

வீரேந்திர பட்டீல் அங்கே முதலமைச்சர். அவரிடத்திலே நீர்ப் பாசனத் துறை. கலைஞர் அவர்களிடத்தில் நீர்ப் பாசனத் துறை. காவிரிபற்றி முதன்முதலாகச் சென்று அவரோடு வாதிட்டவர். அன்று தொடங்கி, இன்றுவரையில் காவிரிப் பிரச்சினையிலேயே உழன்று கொண்டிருக்கிறவர். எத்தனையோ இருந்தாலும், சில நேரங்களில் மனக் கசப்பு உருவாகிவிடுகிறது. ஒருமுறை இப்படித்தான் ஆகி, நூற்றுக் கணக்கான தமிழர்கள், வீடு வாசலை இழந்து, ஜோலார்பேட்டையிலும், காட்பாடியிலும், அரக்கோணத்திலும் வந்து கும்பல் கும்பலாகக் குவிந்தார்கள். அந்த நேரத்திலும் நாம்தான் கண்ணீர் வடித்தோம். ஆனால் வன்முறை, தாக்குவது என்பது, ஒருவழிப் பாதை அல்ல. இதை யாவரும் தெரிந்துகொள்ள வேண்டும். சில நேரங்களில் நாம் அவர்களோடு – அது அண்டை மாநிலமாக இருக்கிறது. அனுபவமின்மையால்—immaturity in politics—என்ற காரணத்தால் சில கும்பல்கள், சில நேரங்களில் தவறாக நடந்துகொண்டாலும், அவர்கள் திருந்துவார்கள் என்ற பெருந்தன்மையைக் கலைஞர் அவர்கள் காட்டுகிறார்கள். அது பலஹீனம் அல்ல. நேற்றைக்குகூட, நம்முடைய கேரள முதலமைச்சர், கலைஞருக்கு ஒரு கடிதம் எழுதினார்—பேசினார். அறுவடை மெஷின் வேண்டும் எங்களுக்கு என்று. ஆகையால் நீங்கள் அதை எங்களுக்கு அனுப்புங்கள் என்று கேட்டார்கள். கலைஞர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள், அறுவடை மெஷினா, நீ நெய்யாற்றில் தண்ணீர் விட்டால்தான் அறுவடை மிஷின் என்று திருப்பி அனுப்பினாரா? நானாக இருந்தால் கேட்டிருப்பேன். ஆனால், அவர் முதலமைச்சர் ஆயிற்றே! அவருக்கு இருக்கும் அனுபவம் அல்லவா? அவர் உடனே சொன்னார், அந்தப் பேச்சைக் கேட்காமல், ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சர், இன்னொரு முதலமைச்சரிடம் கேட்கிறார் என்று பெருந்தன்மையோடு உடனடியாக இன்றைக்கு ஆட்களிடம் மிஷின்களை எடுத்துக்கொண்டு போங்கள் என்று அனுப்பியிருக்கிறார் என்று சொன்னால், அதற்குப் பெயர்தான் பெருந்தன்மை. அதற்குப் பெயர்தான் அரசியல் அனுபவம், அதற்குப் பெயர்தான் Statesmanship என்பார்களே, அது. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-30*

சமீபத்திலேகூட ஒரு பாலத் திறப்பு விழாவிலே பேசுகிறபோது சொன்னார். அதைத்தான் சொன்னார்; "எங்கள் எலும்புகளை நீங்கள் உடைத்தாலும் சரி, நான் கண்ணீர்விட்டுக் கேட்கிறேன்,



தண்ணீர் வேட்கையிலே இந்திய ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுங்கள்" என்று. இதே நிலை நீடித்தால் என்னவாகும்? பக்கத்து மாநிலங்களில் ஒருவருக்கொருவர் உறவையும் மதிக்க மாட்டோம். மத்திய அரசையும் மதிக்கமாட்டோம். உச்ச நீதிமன்றத்தையும் மதிக்காத மனப்பான்மை வந்துவிட்டது. முல்லைப் பெரியாறிலே தீர்ப்புரைத்து, மூன்று முறை உரைத்த பிறகும், கேரளா மறுக்கிறது. Tribunal போட்டு அதிலே தீர்ப்பு வந்த பிறகும் அதை ஏற்க மறுக்கிறது. ஆக, இப்படிப்பட்ட நிலைமை நீள்கிறது. இது இந்தியாவிலே – ஜோதிபாசுக்கு இணையாக நீண்ட நெடிய காலத்திலே அரசியல் அனுபவம் பெற்ற கலைஞருக்கு அது உறுத்தியிருக்க வேண்டும், தலைவருக்கு. எல்லா மாநிலங்களும் நடந்துகொண்டிருக்கின்றன. சமீபத்திலே பார்த்தால், மும்பையிலிருந்து வட இந்தியர்கள் விரட்டப்படுகிற நிலைமை. இங்கே தமிழ்ச் சினிமா கொட்டகைகள், தமிழ் சங்கங்களை அடிக்கிற நிலைமை, உச்ச நீதிமன்றத்தை மதிக்காத போக்கு. இந்த நிலை இப்படி இருக்கிறதே என்று அவர் நெஞ்சை உறுத்தியிருக்க வேண்டும். ஆகையினால்தான் கண்ணீர்விட்டுக் கேட்கிறேன், "இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுங்கள்" என்று கேட்கிறார் என்றால், அது உரிமைக்கு அப்பாற்பட்டு இந்தத் தேச நலனில் அக்கறையோடு இருக்கின்ற ஒரு முதல்வருக்கு இருக்கின்ற பண்பாகும். ஆனாலும் அதேநேரத்தில் நம்முடைய பெருந்தன்மையை மட்டும் காட்டிக்கொண்டு இருந்துவிட்டு, இருக்கிறதை விட்டுவிட முடியாது. ஆகையினால், இந்த மாமன்றத்திலே மாண்புமிகு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து அன்றைக்கு நிறைவேற்றி இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு பன்னீர்செல்வம் அவர்களும் சொன்னார்கள், நாங்கள் எல்லோரும் என்று சொல்லும்போது ஒரு சின்ன சிட்டிகை போட்டார், நாங்கள் இருக்கிறபோது மத்திய சர்க்கார் எங்களுக்கு permission கொடுக்கவில்லை; இப்போது கொடுத்துவிட்டார்கள் என்று. அவர்கள் அல்ல permission கொடுப்பது. திரு. மணி அவர்கள் அழகாகச் சுட்டிக்காட்டினார்கள், நீங்கள் இருக்கிறபோது பொக்ரான் குண்டு வெடித்துவிட்டது என்று. ஜப்பான்காரன் சொன்னான்: "இந்த குண்டு வெடிக்கிற அந்த டெஸ்ட்டை நீங்கள் செய்யக்கூடாது" என்று சொன்னான். "நாங்கள் செய்வோம்" என்று வாஜ்பாய் அரசு அப்போது செய்தது. ஆகையினாலே, ஜப்பான்காரன் சொன்னான்: "அப்படியானால் உங்களுக்கு நான் உதவி தர மாட்டேன்" என்று சொல்லிவிட்டான். பிறகு அவர்கள் முறுக்கிக்கொண்டிருந்தார்கள், இப்போது முறுக்கு தீர்ந்தது. அதனுடைய விளைவுதான் நம்முடைய

[திரு. துரைமுருகன்] [2008 ஏப்ரல் 1

தளபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், ஜப்பான் வரை சென்று, 1,334 கோடி ரூபாயைப் பெற்றுக்கொண்டு வந்திருக்கிறாரே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) இதில் மித்திரபேதம் எதுவும் கிடையாது. எனக்கு இருக்கிற பெருமகிழ்ச்சி என்னவென்றால், நாம் அத்தனை பேரும் கொஞ்சம்கூட மனமாச்சரியம் இல்லாமல், வேறுபாடு இல்லாமல் ஒரே நிலையிலே நின்றிருக்கிறோமே, இந்த உணர்வைக் கர்நாடகத்தில் இருக்கிற சில கும்பல்கள் உணர வேண்டும். கர்நாடகத்திலே இருக்கிற கவர்னர் ஆட்சி தெரிந்துகொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக மத்திய அரசு இனியும் இப்படிக் காலதாமதம் செய்யக்கூடாது. சில பிரச்சினைகளை முளையிலேயே கிள்ளி விடுவதுதான் சரியாக இருக்கும். எனவே, அவர்களும் இதிலே தலையிட வேண்டும். பிறகு சொன்னார்கள், "ஆடிக் கறக்கிற மாட்டையும், பாடிக் கறக்கிற மாட்டையும் எப்படிக் கறக்க வேண்டும்" என்று. அதிலே கை தேர்ந்தவர் கலைஞர் அவர்கள். நிச்சயமாக இந்தத் திட்டத்தை எப்படி நிறைவேற்ற வேண்டுமோ அப்படி நிறைவேற்றுவார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், ஒன்று, தமிழ்நாட்டின் உரிமை எள்ளளவும் விடப்பட மாட்டாது. கிருஷ்ணகிரி, தருமபுரி மக்களுக்கு ஒகேனக்கல் தண்ணீரைக் கொண்டு வந்து தருவோம்; இந்த அரசு தரும் என்ற உறுதியை இந்த மன்றத்திற்குத் தெரிவித்து, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

## 4. அரசினர் தனித் தீர்மானம்

### ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குக் கர்நாடக வெறியர்களால் தமிழக மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைக் களைந்திடவும், தமிழக மக்களின் உரிமைகளைக் காத்திடவும் மத்திய அரசை வலியுறுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 27-3-2008 அன்று இந்த மாமன்றத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு, மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்சி வேறுபாடின்றி ஒருமித்த கருத்தோடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அந்தத் தீர்மானத்தினுடைய விளைவு என்ன என்பதை நாம் முழுமையாக அறிந்துகொள்வதற்கு முன்பே மீண்டும் நம் அனைவருடைய சார்பில் இந்த மாமன்றத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய



2008 ஏப்ரல் 1] [கலைஞர் மு. கருணாநிதி]

நெருக்கடிக்கு ஆளாகி இருக்கிறோம் அல்லது அவசியத்திற்கு ஆளாகி இருக்கிறோம். நமக்கும், கர்நாடக மாநிலத்திலே உள்ள சில மொழி வெறியர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள இந்தக் கசப்புகூட ஒருவகையிலே நாம் வரவேற்கத்தக்க கசப்பாகத்தான் இருக்கிறது. ஏனென்றால், இந்த மாமன்றத்தில் இன்று ஒரு நாள்தான் எல்லோரும் ஒரே கருத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தும், வழிமொழிந்தும், அதை மொத்தமாக நான் இங்கே முடிவுரையாற்றி, வரவேற்று, சொல்லப்பட்ட கருத்துகளையெல்லாம் ஒரு தீர்மான வடிவிலே கொண்டு வருவதற்கு வழிவகுத்த நிகழ்ச்சியாக, இரண்டு நாட்கள் கர்நாடக மாநிலத்திலே நடைபெற்று வருகின்ற நிகழ்ச்சிகள் அமைந்திருக்கின்றன.

*முற்பகல் 11-35*

எப்பொழுதும் தமிழ் என்றால், தமிழ்நாடு என்றால், தமிழ் மக்கள் என்றால், அது என்ன காரணமோ, எனக்குத் தெரியவில்லை, கர்நாடக மாநிலத்திலே உள்ள ஒரு சில மொழி வெறியர்களுக்கு அது அறவே பிடிப்பதில்லை. ஒரு allergy என்பார்களே ஆங்கிலத்தில், அப்படி ஒரு—allergy—ஒவ்வாமை அவர்களுக்கு ஏற்பட்டு, நம்மை வெறுப்பதையே தொழிலாக, அவர்களுடைய வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள். அது நீக்கப்படாமல், நீங்காமல், இந்தியாவினுடைய ஒருமைப்பாடு, இறையாண்மை என்பதெல்லாம் வெறும் வாய்மொழியாகத்தான் இருக்குமே அல்லாமல், வாய்மை நிறைந்ததாக இருக்க முடியாது. எடுத்துக்காட்டாக, சான்றாகச் சொல்லவேண்டுமேயானால், உலகம் போற்றும் உத்தம ஞானி, தமிழர்களுக்குக் குறளைத் தந்த எம்மான், அய்யன் வள்ளுவருக்குக் கர்நாடக மாநிலத்திலே மதிப்பு உண்டா என்றால், இல்லை. நீங்கள் மறந்திருக்க முடியாது. இந்த நேரத்திலே நான் நினைவூட்டுவது, யாரிடத்திலே நாம் நம்முடைய கருத்து வேறுபாடுகளைச் சொல்லி, அவர்களை ஒற்றுமைப்படுத்த வேண்டியிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்வதற்காகத்தான் நினைவூட்டுகிறேன். பல ஆண்டுகளுக்கு முன்பு பெங்களூரு தமிழ்ச் சங்கத்து வாயிற்புறத்திலே வைக்கப்பட்ட அய்யன் வள்ளுவருடைய சிலை, துணி கொண்டு மூடப்பட்டு, அதைத் திறக்கவே கூடாது என்று அங்குள்ள வெறியர்கள் அதைத் தடுத்திருப்பதும், அதன் காரணமாக அந்தச் சிலையே திறக்கப்படாமலே இருப்பதும் எல்லோரும் அறிந்த ஒன்று. ஏறத்தாழ ஒரு பத்தாண்டு காலம் ஆகின்றது, என்னை பெங்களூரிருவிலே அந்த நிகழ்ச்சிக்கு நண்பர்கள் அழைத்தபோது நான் சொன்ன வாசகம், "என்றைக்குத்

திருவள்ளுவருடைய சிலை அங்கே திருவிழா நடத்தித் திறந்து வைக்கப்படுகின்றதோ, அன்றைக்கு மறுநாள்தான் நான் பெங்களூருவில் நிகழ்ச்சிக்கு வருவேன்" (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி, அன்று முதல் பெங்களூரு நிகழ்ச்சிக்குச் செல்வதையே நிறுத்திவிட்டேன். அத்தகைய சூளுரை மேற்கொள்ள வேண்டிய அளவுக்கு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட, எல்லாத் தரப்பு மக்களாலும் போற்றப்பட்ட, எல்லா சமயத்தினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மகான், ஒரு மாமேதை, தமிழர்களுடைய வழிகாட்டி வள்ளுவருக்கே அங்கே அந்த கதி. அதை நாம் போக்க முடியாமல் தவித்துக்கொண்டிருக்கின்ற இந்தக் காலக்கட்டத்தில், தண்ணீரும் கிடையாது; பயிர் பச்சைகளுக்குத் தண்ணீர் கிடையாது என்று சொன்னவர்கள், உயிர் காப்பதற்கும் தண்ணீர் கிடையாது என்று இன்றைக்குச் சொல்கின்ற அளவுக்கு ஒகேனக்கல் பிரச்சினையைக் கையில் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இதைப்பற்றி நம்முடைய அமைச்சர் துரைமுருகன் அவர்கள் விரிவாகப் பேசிவிட்ட காரணத்தால், நான் மேலும் உங்களுக்கு விரிவோ, விளக்கமோ தரவேண்டுமென்று கருதவில்லை. எல்லோரும் அதை நன்கு புரிந்து வைத்திருக்கிறீர்கள். ஆகவே இங்கே தரப்படுகின்ற விளக்கம் அவைக் குறிப்பிலே ஏறி, அது அகில இந்திய அளவிலே மக்களிடத்திலே பரப்பப்பட வேண்டுமென்பதற்காகத்தானே தவிர, உங்களுக்காக அல்ல.

*முற்பகல் 11-40*

*27-3-2008*-இல் நாம் இந்த அவையில் நிறைவேற்றிய தீர்மானத்தின் இறுதி வாசகங்களை மாத்திரம் படித்துக் காட்டுகிறேன்:

"தமிழகம் எப்போதுமே தனது அண்டை மாநிலங்களுடனும், அந்த மாநிலங்களின் மக்களுடனும் நட்பையும், நல்லுறவையும் பேணி வளர்த்து வருகிறது. எனவே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற, மத்திய அரசு முழு ஒத்துழைப்பையும், உதவியையும் தமிழக அரசிற்கு வழங்க வேண்டுமென்றும், கர்நாடக அரசு கடைப்பிடித்து வரும் எதிர்ப்புப் போக்கினைத் தடுத்து நிறுத்திட ஆவன அனைத்தும் செய்திட வேண்டுமென்றும் இந்தப் பேரவை மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது"





என்ற தீர்மானம் அந்தப் பெரிய, நீண்ட தீர்மானத்தினுடைய முடிவுரையாக இருந்தது.

இன்றைக்கு அதோடு இன்னும் சில வாசகங்களை அமைத்து, அதாவது,

"அமைதி காக்கும் நோக்குடனும், மாநிலங்களுக்கிடையே ஒற்றுமை காணவேண்டிய தன்மையுடனும் இந்த அவையில் அந்தத் தீர்மானத்தை நாம் நிறைவேற்றி இருக்கும்போது, அந்தத் தீர்மானத்திற்கு எதிராக கர்நாடகத்திலே உள்ள வெறியர்கள் சிலர், தமிழருக்கும், தமிழ் உணர்வுக்கும், தமிழக மக்களுடைய நலன்களுக்கும் விரோதமாக நடந்துகொள்ளும் போக்கினையும், நடத்தும் கலவரங்களையும் இந்தச் சட்டமன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது என்பதுடன் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் இறையாண்மை, ஒருமைப்பாடு, இவற்றைக் காத்திடும் பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கின்ற காரணத்தால், அந்தப் பொறுப்பையும் உடனடியாக நிறைவேற்ற முன்வந்து தமிழக மக்களின் உரிமைகளைக் காத்திட வரவேண்டுமென்று மத்திய அரசை இந்த மாமன்றம் இந்தத் தீர்மானத்தின்மூலமாக வலியுறுத்துகிறது" (மேசையைத் தட்டும் ஒலி)

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை ஒருமனதாக நீங்கள் நிறைவேற்றித் தந்தமைக்கு, மாமன்றத்தின் சார்பில், தமிழக அரசின் சார்பில், தனிப்பட்ட முறையில் என் சார்பில், உங்கள் அத்தனை பேருடைய சார்பில், நம்முடைய நன்றியை எல்லாம் காணிக்கையாக்கி இந்த அளவில் இந்தப் பிரச்சினையை இன்றைக்கு நிறுத்துகிறோம். இனி என்ன நடக்கிறது என்பதைப் பார்த்து, அணிவகுப்பது, பணி முடிப்பது, இவைகளைப் பற்றி பிறகு அனைத்துக் கட்சிகளின் சார்பிலே கலந்து ஆலோசித்து முடிவு செய்வோம் என அறிவித்து, அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

[2008 ஏப்ரல் 1

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, நேரமாகிவிட்டது.

## 5. வரவு–செலவுத் திட்டம், 2008–2009, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2008-2009* ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, பொது விவாதம்-தொடர்ச்சி, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக உருவாக்கி, நவீன தொழில்நுட்பப் புரட்சியையும் உருவாக்கி, தமிழகப் பொருளாதாரத்தை ஏற்றம் பெறச் செய்து, தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, மக்கள் நலன் காக்கும் மேம்பாட்டுத் திட்டங்கள் பல உருவாக்கி, கல்லாமையை இல்லாமையாக்கி, மகளிர் மற்றும் ஏழையெளியோர், விவசாயிகள், நெசவாளர்கள், மீனவர்கள், தொழிலாளர்கள் என அனைத்து தரப்பட்ட மக்களின் வாழ்வில் வளம் சேர்த்த தூய்மையான, நேர்மையான, விரைவான, வெளிப்படையான, திறமையான ஆட்சியும், நிர்வாகமும் அமைத்திட்ட, திரைப்படம் வெறும் திரைப்படமாக மட்டுமல்லாமல், அது பாடமாகவும் இருக்கவேண்டுமென்று கலைத் துறையில் புரட்சி செய்து, பின் ஆட்சியமைத்து, அரசியல் துறையிலும் புரட்சி செய்த புரட்சித் தலைவரின் ஒரே அரசியல் வாரிசு இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி என் உரையைத் துவக்குகின்றேன்.

முற்பகல் *11-45*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் இந்த வாய்ப்பை நல்கியதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டனவா என்றால், இல்லை. உதாரணத்திற்கு கடந்த *2007-2008* நிதிநிலை அறிக்கையில் பக்கம் *19*, பத்தி *49*-ல், "பெரம்பலூர் மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலம்மூலமாக உருவாகும் வேலைவாய்ப்புகளை அப்பகுதி இளைஞர்கள் பயனடையும் வகையில் அம்மாவட்டத்தில் இரண்டு புதிய தொழிற்பயிற்சி நிலையங்களும், சிவகங்கை மாவட்டத்தில் ஒரு புதிய



2008 ஏப்ரல் 1] [திரு. டி. ஜெயக்குமார்]

அரசு தொழில் பயிற்சி நிலையமும் அமைக்கப்படும்" என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு நிதி ஒதுக்கீடு செய்து இத்திட்டம் நிறைவேற்றப்பட்டதா என்றால் அதுபற்றி எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

அதேபோன்று, கடந்த *2007-2008* நிதிநிலை அறிக்கை பக்கம் *25*, பத்தி *65*-ல், "தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பெண் பட்டதாரிகள் மற்றும் பொறியியலாளர்கள், சென்னை மாநகரில் உள்ள மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களில் பணிபுரியும் நிலையில் இவர்களுக்கு நவீன வசதிகள் மற்றும் பாதுகாப்புடன்கூடிய உறைவிட வசதிகள் அமைக்கப்படும் என்பதைக் கருத்தில்கொண்டு மைய அரசின் பணிபுரியும் பெண்கள் விடுதி திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்று, பணிபுரியும் பெண்கள் விடுதி ஒன்றும் பெரிய அளவில் அமைக்கப்படும்" என்று அறிவித்த அறிவிப்பும் காற்றோடு போயிற்று.

அதேபோன்று, கடந்த *2006-2007* நிதிநிலை அறிக்கையில், பக்கம் *21*-ல், "ஊரகப் பகுதிகளில் பல் மருத்துவக் கல்லூரிகள், செவிலியர் கல்லூரிகள், உடல் இயக்க மருத்துவக் கல்லூரிகள் (Colleges of Physiotherapy) அமைந்திட, தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்" என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், *2007-2008* நிதிநிலை அறிக்கையிலும், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும், இதுகுறித்த விவரம் எதுவும் கூறப்படவில்லை. எந்த ஊரகப் பகுதியில் உடல் இயக்க மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்பட்டன அல்லது செவிலியர் கல்லூரிகள் அமைக்கப்பட்டன என்பது குறித்தும் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மேலும் *2007-2008* ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பக்கம் *23*-ல், "சிவகங்கையில் உள்ள கிராபைட் கனிம வளத்தை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில், தமிழ்நாடு கனிம நிறுவனம், தனியார் தொழில் முனைவோருடன் இணைந்து சர்வதேசத் தரத்திலான உயர் தொழில்நுட்பத்துடன் கிராபைட் சுத்திகரிக்கும் மற்றுமொரு தொழிற்சாலையை அமைத்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்" என்று கூறப்பட்டிருந்தது. அந்தத் தொழிற்சாலையை அமைக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்பது குறித்தும் தெரிவிக்கப்படவில்லை.

அதேபோன்று, கடந்த *2007-2008* நிதிநிலை அறிக்கையில், பக்கம் *23* பத்தி *59*-ல் "சென்னை எண்ணூர் துறைமுகப் பகுதியிலும், கடலூர்

மாவட்டத்திலும், இரு கப்பல் கட்டும் தளங்கள் ரூபாய் 3,700 கோடி முதலீட்டில் தனியார் துறையில் அமைக்கப்பட உள்ளன; இதனால் இப்பகுதியில் உள்ள சுமார் 25,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்" என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் நிலை தற்போது என்ன? தனியார் துறையால் எவ்வளவு பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளது? எவ்வளவு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கின்றது? இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இதுகுறித்து விவரம் ஏதும் குறிப்பிடப்படவில்லை. கட்டப்பட்ட கப்பல் ஓடுகிறதா? இல்லை; காகிதத்தில் கப்பல் செய்து கடல் நடுவே ஓடவிட்டேன் என்ற கதைபோல் ஆகிவிட்டதா என்பதைத்தான் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் நிலை இது என்றால், தற்போது நடைபெற்று வரும் திட்டங்களில் உள்ள குளறுபடிகள் இந்த ஆட்சியின் தடுமாற்றத்தை எடுத்து இயம்புகிறது.

கடந்த வடகிழக்குப் பருவ மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் நமது மாநிலம் பாதிக்கப்பட்டது குறித்து, ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில், பக்கம் 4, பத்தி 6-ல், "ஒன்றரை இலட்சம் எக்டேர், ஏறக்குறைய 3.75 இலட்சம் ஏக்கர் பயிரிடப்பட்ட நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது. அதே நிதிநிலை அறிக்கையின் தமிழ் உரையில் பக்கம் 4 பத்தி 6-ல், "ஒன்றரை இலட்சம் ஏக்கர் பயிரிடப்பட்ட நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூபாய் 56.5 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆங்கில உரையின்படி இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது என்றால், ஒரு ஏக்கருக்கு சராசரியாக ரூபாய் 1,500 இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்பட்டுள்ளதாக எடுத்துக்கொள்ளலாம். தமிழ் உரையின்படி பார்த்தால், ஒரு ஏக்கருக்கு சராசரியாக ரூபாய் 3,760 இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்பட்டுள்ளதாக எடுத்துக்கொள்ளலாம். ஆங்கிலத்தில் ஒரு வகையாகவும், தமிழில் ஒரு வகையாகவும் நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருப்பது, வெள்ள நிவாரணப் பணிகளில் அரசு சரிவர கையாளாமல் அதேநேரத்தில் நிவாரணம் வழங்குவதிலும் இந்த அரசுக்கு ஏற்பட்ட தடுமாற்றத்தின் பிரதிபலிப்பே இது என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்றது. தமிழில் உள்ள நிதிநிலை அறிக்கையின்படி நிவாரணம்



வழங்கப்பட்டதா? அல்லது ஆங்கில நிதிநிலை அறிக்கையின்படி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதா? ஏன் இரண்டு மாதிரியான வெவ்வேறு வகையான அந்த நிலத்தின் சம்பந்தப்பட்ட அந்தக் குறிப்பு வெவ்வேறு நிலையில் அச்சடிக்கப்பட்டது என்பதைத் தெளிவாக விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். ஒவ்வொரு விவசாயியும் எவ்வளவு நிவாரணம் பெற்றார் என்பது குறித்தும் விளக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மூன்று மாத காலமாக தமிழ்நாடே மழை வெள்ளத்தால் பாதித்திருந்த நிலையில், 30 மாவட்டங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில், அனைவருக்கும் நிவாரணம் வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். வெள்ளத்தால் முழுவதும் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு இரண்டாயிரம் ரூபாய் ரொக்கப் பணம், 10 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி, ஒரு சேலை வழங்கி மொத்தம் 900 கோடி ரூபாய் அளவில் நிவாரணம் வழங்கிய ஒரே முதலமைச்சர் நம்முடைய புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். ஆனால் நீங்களோ கடந்த மழைக்கு நிவாரணமாகக் கொடுத்த தொகை ரூபாய் 56.5 கோடிதான். இந்த ஆண்டில் பெய்த மழைக்கு நிவாரணத் தொகை எவ்வளவு வழங்கினீர்கள் என்பதும் குறிப்பிடவில்லை. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் பொது மக்களுக்கும், நீங்கள் கொடுத்த நிவாரண உதவித் தொகை 'யானைப் பசிக்குச் சோளப் பொரி போல்' உள்ளது.

*முற்பகல் 11-50*

கூட்டுறவுக் கடன்கள் இரத்துச் செய்யப்பட்டதன் வாயிலாக, ரூ.7,000 கோடி கூட்டுறவு நிறுவனங்களுக்கு மாநில அரசு இழப்பீடு வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி கடந்த இரண்டு ஆண்டுகளில் 2006-2007 மற்றும், 2007-2008-ல் இதுவரை ரூபாய் 3,304 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2008-2009 ஆம் நிதி ஆண்டில் 1,150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், மொத்தம் இதுவரை அரசு 4,454 கோடி ரூபாயை அரசு, கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதி அளித்துள்ள நிலையில், கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் ரூ.2,427 கோடி கடன்களாக

வழங்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடும்போது, இந்நிதி ஆண்டில் ரூ.1,500 கோடி அளவில் புதிய பயிர்க் கடன்கள் வழங்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதன்மூலம் மூன்று ஆண்டுகளில் மொத்தம் 3,927 கோடி ரூபாய்தான் விவசாயிகளுக்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 527 கோடி ரூபாயை வங்கிகள், விவசாயிகளுக்கு எவ்விதக் கடனும் கொடுக்காமல் இத்தொகை எத்தனை மாதங்களாகக் கூட்டுறவு வங்கிகளிலே கடன் வழங்காமல் இருப்பில் உள்ளது என்ற விவரங்களை அளிக்கக் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக அரசு, கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதி அளிக்கும்போது, கூட்டுறவுச் சங்கங்கள் அந்த நிதியை முறையே விவசாயிகளுக்கு மறுபடியும் கடனாக அளிக்க வேண்டும். ஆனால், இதற்கு நேர்மாறாக தற்போது அரசு அளித்துள்ள நிதியில், 527 கோடி ரூபாய் வங்கிகளில் அப்படியே இருப்பில் உள்ளது. விவசாயிகள் பயிர்க் கடன் கேட்டு அல்லல்படுகின்ற சூழ்நிலையில் விவசாயிகளுக்குக் கடன் அளிப்பதற்குப் பதிலாக கூட்டுறவு நிறுவனங்கள் 527 கோடி ரூபாயை தன் இருப்பில் வைத்துக்கொள்ளவா அரசு இந்நிதியை வழங்கி உள்ளது? கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கும் கடன் வழங்குகிறதா, இல்லையா என்பதைக் கண்காணிக்கத் தவறியது இந்த அரசாங்கம்.

தமிழ்நாடு முழுவதும் நிலவள வங்கியில் நிறைய பேர் வீடு போன்ற அசையா சொத்தைப் பிணையமாக வைத்து சிறு தொழில் செய்வதற்குக் கடன் வாங்கியுள்ளனர். கடனுக்கு மேல் இரண்டு மடங்கு வட்டியாகவும் கட்டியுள்ள சூழ்நிலையில், தற்போது அவர்களால் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலையில், அந்தக் கடனை இரத்து செய்திட இந்த அரசு முன்வர வேண்டும். மேலும் நிலவள வங்கிகளில் வைப்புத் தொகையாக deposit செய்தவர்கள் பணத்தை Deposit Maturity ஆன நிலையிலும், இந்த அரசு திருப்பித் தராமல் பாமர மக்களை அலைக்கழித்து வருகிறது.

திருமணம், கல்வி போன்ற நிகழ்வுகளுக்காக deposit செய்தவர்களின் நிலைமை இந்த ஆட்சியிலே பரிதாபகரமாக உள்ளது. உடனே deposit தொகை, முதிர்வு பெற்றதைத் திரும்பத் தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்படும்போது அரசு, விவசாயிகளும் பொதுமக்களும் பாதிக்காத வகையில் அமைக்கப்பட வேண்டும். அமைக்கப்படும் மண்டலங்களுக்கான நிலங்களை அரசு கையகப்படுத்தாமல், மண்டலங்களை அமைக்க



விரும்புவோரே தங்களுக்கு ஏற்ற வகையில் சந்தை விலையில் நிலங்களைப் பெறவும், விவசாய நிலங்கள் மற்றும் மக்கள் தொகை அதிகம் உள்ள நகரம் அருகே மண்டலங்கள் அமைவது தடுக்கப்பட வேண்டும்.

மின் தேவை மிக மிக அவசியம் ஆகிவிட்ட சூழ்நிலையில், தற்போது சீரான மின்சாரம் வழங்கப்படுகிறதா என்றால் இல்லை. சம்சாரம் இல்லை என்றாலும்கூட இருந்துவிடலாம். ஆனால் மின்சாரம் இல்லாமல் நிச்சயமாக இருக்கவே முடியாது. கடுமையான மின் வெட்டினால் மின்சாரம் வீட்டிற்கு ஒரு விருந்தாளிபோல வந்து வந்து போகின்றது. பல நேரங்களில் வராமலே போகின்றது. இந்த ஆட்சியில் ஏற்பட்ட நன்மைகளை இருட்டில்தான் தேட வேண்டியுள்ளது. உலகம் இப்பொழுது வெப்பம் ஆகி வரும் நிலையில், பல நாடுகளில் உலக வெப்பத்தைத் தடுக்க மின்சார விநியோகம் நிறுத்தப்படுகின்றது. மின் துறை அமைச்சர் அவர்களும் அதனால்தான் என்னவோ, மின்வெட்டை அமல்படுத்தி உலகம் வெப்பம் ஆகாமல் தடுக்கிறார் போலும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். அரசால் பிறப்பிக்கப்படும் உரிய ஆணைகள். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க.வினர் யாராக இருந்தாலும், மின்சாரம் இல்லாததைப் போலவும் தமிழ்நாடே இருட்டிலே இருப்பதைப் போலவும், அவர்கள் எல்லாம் வெளிச்சத்தையே காணாதவர்கள் போலவும் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். 3 ஆம் தேதி மானியம் வருகிறது. நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. நான் சொல்கின்ற பதில்களுக்கு உங்களால் முடிந்தால் திருப்பி பதில் சொல்லுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 3 நாட்களுக்கு முன்பாகக்கூட ஆவடி பகுதியிலே சாலை மறியல் ஏற்பட்டு, அங்கே பிரச்சினைகள் எல்லாம் ஏற்பட்டன; தொலைக்காட்சியில் மின் துறை அமைச்சர் அவர்கள் பார்த்து இருப்பார்கள் என்றே கருதுகிறேன். அரசால். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 15 நாட்களாக நம்மிடத்திலே 500 முதல் 1000 மெகாவாட் வரையிலே மின்சாரம் மிச்சமாக இருக்கிறது. ஆவடியிலே ஏற்பட்டதற்குக் காரணம் அங்கே மாஞ்சா காற்றாடி ஒன்று விடப்பட்டு, அது wire-களில் மாட்டி transformer பழுதான காரணத்தினாலே அந்தத் தடை ஏற்பட்டதே தவிர, தமிழ்நாட்டிலே மின்சாரப் பற்றாக்குறை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஜெயக்குமார், காற்றாடி விடாதீர்கள்!

முற்பகல் 11-55

**திரு. டி. ஜெயக்குமார்:** நான் reel சுற்றவில்லை. அரசால் பிறப்பிக்கப்படும் உரிய ஆணைகள் உரிய முறையில் செயல்படுத்தப்படுகின்றனவா என்றால், அதுவும் இல்லை. பொதுமக்கள் அளிக்கும் மனுக்களின்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு 60 நாட்களில் தெரிவிக்க வேண்டும் என்பது அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், கடந்த 21 மாத காலமாக இதுவரை—சென்னை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முதியோர் உதவித் தொகை மற்றும் விதவை உதவித் தொகை விண்ணப்பங்களும், சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு கிடைக்கப்பெறாத 372 மனுக்களும் மற்றும் இதர 134 மனுக்களும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுப் பல மாதங்கள் ஆகியும், அந்த மனுக்கள்மீது எந்த நடவடிக்கையும் இல்லை. மனுதாரர்களுக்கும், எனக்கும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதும் தெரிவிக்கப்படவில்லை. அதேபோல, உணவுப் பங்கீட்டு அட்டை கேட்டு விண்ணப்பித்த 754 மனுக்கள்மீதும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை இல்லை. உணவுத் துறை அமைச்சரோ, உணவுப் பங்கீட்டு அட்டை விண்ணப்பித்த 20 நாட்களில் கிடைக்கும் என்று கூறியுள்ளது சிறந்த நகைச்சுவையாக உள்ளது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மொத்தம் 1,91 மனுக்கள் பெற்று சம்பந்தப்பட்ட துறைகளுக்கு என்னுடைய பரிந்துரையுடன் அனுப்பியதை என்னுடைய அலுவலகப் பதிவேட்டில் பதிவு செய்துள்ள நகல்களைத் தங்களிடம் அளிக்கிறேன்.

(உறுப்பினர் சில தாள்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரிடம் கொடுத்தார்.)



பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனுக்கள் குழு மூலமாவது அதற்குரிய நிவாரணம் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். தாங்களாவது இதன்மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். ஒரு சட்டமன்ற உறுப்பினர் அனுப்பும் மனுக்களுக்கு உரிய பதில் தர மறுக்கும் நிலைதான் இந்த ஆட்சியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பாமர மக்களின் மனுக்கள் மீதான நடவடிக்கை பரிதாபகரமான நிலை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பக்கம் 52, 'மீனவர் நலன்' என்ற தலைப்பின்கீழ் பத்தி 115-ல், மீனவர்கள் வருவாயைப் பெருக்குவதற்கு ஏதுவாக மீனவர்கள் நண்டு, கடல்பாசி மீன் போன்றவற்றைக் கடலில் கூண்டுகள் அமைத்து வளர்க்க, டாடா போன்ற பெருந்தொழில் நிறுவனங்கள் சிறப்புப் பயிற்சி மையத்தை அமைக்க, டாடாவை அழைத்திருப்பது, டாடா வசம் கடல் ஆதிக்கத்தைக் கொடுப்பதற்காகவா என்பதையும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுத் தரத் தேவையில்லை. மீனவர்களுக்கு மீன் பிடிப்பதற்கும், மீன் வளர்ப்பதற்கும் எப்படி எனச் சொல்லித் தர டாடா இங்கு வரவேண்டிய தேவையில்லை. கடந்த 26-12-2004 அன்று தமிழகக் கடற்கரையில் ஏற்பட்ட சுனாமி ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நல்வாழ்விற்காக மாண்புமிகு அம்மா அவர்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் மீனவர்கள் பெற்ற கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தியும், இக்கடனைத் தள்ளுபடி செய்ய குரல் கொடுக்காத, வாய் திறக்காத மாநில அரசையும் கண்டித்து கருத்துத் தெரிவித்துள்ள நிலையில், மீனவர்கள் கடன் தள்ளுபடி குறித்தான இவ்விஷயத்தில் இதுவரை மௌனம் சாதிப்பது ஏன் என்றும் தெரியவில்லை. மீனவர்களின் கடன் தள்ளுபடி செய்வது குறித்து மைய அரசை வலியுறுத்துவீர்களா? இல்லையா? இதற்கு விளக்கம் தேவை. ஒன்றரை இலட்சம் மீனவர்கள் பாதிப்படையும் வகையில் கடலில் அட்டை பிடிப்பதற்கான தடையை உடனே நீக்குவதற்கு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2003 டிசம்பரில் தொழிற்சங்கங்களின் கூடுதல் பதிவாளர் அளித்த சான்றிதழின்படி, அரக்கோணம் எம்.ஆர்.எப். ஒன்றுபட்ட தொழிலாளர் சங்கத்தை நிருவாகம் அங்கீகரிக்கக் கோரி, தொடர்ச்சியாகப் பல்வேறு போராட்டங்களை நடத்தியும், எம்.ஆர்.எப் நிருவாகம் அங்கீகரிக்க மறுத்துள்ளது. வரும் 2-4-2008-இல்

தொழிலாளர்கள் இக்கோரிக்கையை வலியுறுத்தி கவன ஈர்ப்புப் பேரணி நடத்த உள்ளனர். அரசு இனியும் காலம் தாழ்த்தாமல் உரிமை மறுக்கும் எம்.ஆர்.எப். நிருவாகத்தைப் பணிய வைத்து, தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வுகாண கேட்டுக்கொள்கிறேன். நாட்டின் பொது அமைதி மற்றும் நம்பகத் தன்மையைக் கட்டிக் காத்து, பயங்கரவாதத்தையும் தீவிரவாதத்தையும் அடக்கி மக்கள் நலனைக் காத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் சட்டம்-ஒழுங்கைப் பொறுத்தமட்டில், கொலைக் குற்றங்கள் 2005-இல் 1,365 ஆகவும், 2007-ல் உங்கள் ஆட்சியில் 1,565 ஆகவும் உயர்ந்து, 11 சதவிகிதம் அளவிற்குக் கொலைகள் அதிகரித்து உள்ளன. ஆதாயக் கொள்ளையோ, 2005-இல். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சார், ஒரு நிமிடம் இருக்கிறது. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. 15 நிமிடங்கள்தான். இரண்டாவது, நீங்கள் வீட்டுக்கு வேறு போக முடியாது. 'சம்சாரம் இல்லாமல்கூட வாழ்ந்து விடலாம்' என்று வேறு சொல்லிவிட்டீர்கள்! வீட்டுக்குப் போவதில் வேறு பிரச்சினை!

**திரு. டி. ஜெயக்குமார்:** Deputy Speaker Sir, Speaker எனக்குக் கொடுத்தது 20 நிமிடங்கள். அவரை வேண்டுமானாலும் நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. 15 நிமிடங்கள்தான்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை. 20 minutes தான், கேட்டுக்கொள்ளுங்கள். ஆதாயக் கொள்ளையோ, 2005-இல் 74-ம் 2007-இல் 102-ம் ஆக மொத்தம் 38 சதவிகிதம் உயர்ந்துள்ளது. கொள்ளைக் குற்றங்கள் 2005-இல் 73-ம் 2007-இல் 88-ம் ஆக, உங்கள் ஆட்சியில் 21 சதவிகிதம் அதிகரித்துள்ளது. திருட்டுக் குற்றங்களைப் பொறுத்தவரை, 2005-இல் 437-ம், 2007-இல் 495-ம் ஆக உயர்ந்துள்ளது. ஆக, திருட்டுக் குற்றங்கள் 13 சதவிகிதம் உங்கள் ஆட்சியில் உயர்ந்துள்ளது.

முதலமைச்சர் அவர்களுடைய சொந்த மாவட்டமான திருவாரூரிலுள்ள தன்னுடைய மாவட்டச் செயலாளரையே முதலமைச்சரால் காப்பாற்ற முடியவில்லை என்றால், என்ன வேடிக்கை என்பதைத் தயவுசெய்து தெரிந்துகொள்ளுங்கள். காங்கிரஸ்



கட்சித் தலைவர் தாக்கப்பட்டார்; முதுகுளத்தூரில் ஆசிரியர் படுகொலை; தென்காசியில் மதக் கலவரம் காரணமாக ஏற்பட்ட படுகொலைகள்; அண்ணா நகரில் டி.ஜி.பி. அலுவலகத்தில் பணிபுரியும் உயர் அதிகாரியின் மனைவியின் கழுத்தை அறுத்துக் கொலை; நக்சலைட்டுகளின் ஊடுருவல்கள்; நீதிமன்ற வளாகத்திலேயே வக்கீல் படுகொலை; காவல் துறையினர் முன்னிலையிலேயே காவல் நிலையத்தில் உள்ள துப்பாக்கிகள் நக்சலைட்டுகளால் பறிமுதல் செய்யப்படுவது; காவல் துறையினரை அடித்து அவர்களுடைய ரோந்து வாகனத்தைப் பறிமுதல் செய்தல்; கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அருகே இரயில் தண்டவாளத்தில் குண்டு வெடிப்பு, அடுத்த நாள் வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அருகே இரயில் தண்டவாளத்தில் குண்டு வெடிப்பு என்று அடுக்கிக்கொண்டே போகும் அளவுக்கு எண்ணற்ற குற்றங்கள்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு. (குறுக்கீடுகள்)

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை. உரையை முடித்துவிடுகிறேன்,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைலவர்:** இல்லை, முடியாது. நான் Time keep up பண்ணியாக 'வேண்டும். திரு. அருள் அன்பரசு, பேசுங்கள். (குறுக்கீடுகள்) நாளைக்கு உங்களுக்கு sufficient ஆக நேரம் கொடுத்திருக்கிறோம். உங்கள் துணைத் தலைவர் பேசுகிறார். திரு. அருள் அன்பரசு, பேசுங்கள். (குறுக்கீடுகள்) இவ்வளவு நேரமும் நல்ல கருத்தைத்தான் பேசினார். சம்சாரம் வேண்டாம் என்பதைக்கூட நல்ல கருத்தாகத்தான் சொன்னார்.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு, 10 நிமிடங்கள்தான்.

**திரு. அருள் அன்பரசு:** 10 நிமிடங்கள் போதாது. பதவிகள் பல தேடி வந்தபோதும். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, முடியாது. திரு. அருள் அன்பரசு, நீங்கள் continue பண்ணுங்கள்.

**திரு. அருள் அன்பரசு:** பதவிகள் பல தேடி வந்தபோதும், அப்பதவிகளைத் துச்சமென மதித்து, (குறுக்கீடுகள்) சோதனைகள் பல வந்தபோதும் அவற்றைச் சாதனைகளாக மாற்றி 'பகைவருக்கும் அருள்வாய் நன்னெஞ்சே' என்ற முதுமொழிக்கேற்ப, தூய்மையில் அன்னைத் தெரசாவாகவும், தன் கணவரைக் கொன்ற விடுதலைப் புலிகளின் (குறுக்கீடுகள்) மரண தண்டனைகள் விதிக்கப்பட்ட கொலைக் குற்றவாளிகளுக்குக்கூட கருணை காட்டுங்கள் என்று சொன்ன, அகிலமெல்லாம் போற்றும் எங்கள் உன்னதத் தலைவியாகவும் விளங்கும் (குறுக்கீடுகள்) இந்தியாவை 21 ஆம் நூற்றாண்டுக்கு நம்மையெல்லாம் அழைத்துச் சென்ற அமரர் இராஜீவ் காந்தியின் கனவுகளை நெஞ்சத்திலே சுமந்துகொண்டு இந்தியாவை ஒரு நல்லரசாகவும், ஒரு வல்லரசாகவும் செயல்பட வைத்துக்கொண்டிருக்கும் எங்களின் ஆருயிர் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கு என்னுடைய முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) என்னை ஒரு சட்டமன்ற உறுப்பினராக ஆக்கிய எனது சோளிங்கர் தொகுதி மக்களின் சார்பாகவும், தொகுதியின் சார்பாகவும் கோரிக்கைகளை முன்வைக்கின்றேன்.

சோளிங்கரிலுள்ள மிகவும் பிரசித்தி பெற்ற அருள்மிகு யோக நரசிம்மர் ஆலயத்திற்கு ரோப் கார் வசதி அமைத்துத் தரப்படும் என்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டார்கள். அவரை வாழ்த்த வயதில்லை என்றாலும் வணங்குகின்றேன். ரோப் கார் திட்டத்தை அறிவித்து இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இன்னும் அதற்குண்டான துவக்கப் பணிகள் துவக்கப்படாமலேயே உள்ளன. அதேபோல, தமிழகத்தில் உள்ள மற்ற பிரசித்தி பெற்ற கோயில்களுக்கும் அறங்காவலர் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால், சோளிங்கர் கோயிலுக்கு இதுவரை அறங்காவலர் குழுத் தலைவரோ, உறுப்பினர்களோ நியமிக்கப்படவில்லை. உடனடியாக ரோப் கார் பணியைத் துவக்கும்படியும், அதேபோன்று அறங்காவலர் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிக்கும்படியும் நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

சோளிங்கர் பேரூராட்சியை நகராட்சியாக அறிவிக்க வேண்டுமெனவும், நிருவாக வசதிக்காக சோளிங்கரைத் தனி வட்டமாக அறிவிக்க வேண்டுமென்றும், எனது கோரிக்கையை ஏற்று,



சோளிங்கர் தொகுதியில் சிறப்புப் பொருளாதார மண்டலமும் மற்றும் 'சிப்காட்' தொழிற் பேட்டையும் அமைப்பதற்கு வழிவகுத்த நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதே நேரத்தில், 'சிப்காட்' மற்றும் தொழிற்பேட்டை மண்டலத்திற்கு நிலம் கையகப்படுத்தப்படுகின்றபோது விளைநிலங்களை எடுக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் எலிக் கறி சாப்பிட்ட ஏழை விவசாயிகளின் விவசாயக் கடன்களை மத்திய அரசு ரூபாய் 60,000 கோடியும், (குறுக்கீடுகள்) மாநில அரசு ரூபாய் 7,000 கோடியும் தள்ளுபடி செய்து விவசாயக் குடும்பங்களை வாழவைத்துக் கொண்டிருக்கும் வேளையில் . . . (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர், ஒரு நிமிடம் இருங்கள். திரு. கே.ஏ. செங்கோட்டையன், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அமைதி, அமைதி.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சிக் காலத்தில் எலிக் கறி சாப்பிட்டார்கள் என்று ஒரு பொய்யான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றபோது, இதே தி.மு.க.-வினர், எதிர்க்கட்சியாக இருந்தவர்கள் என்ன விமர்சனங்களை இந்த மன்றத்திலே செய்திருக்கிறார்கள் என்பதை காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற முறை 5 ஆண்டு காலம் இவர்கள் ஆட்சி நடத்தியபோது, நாங்கள் இங்கே எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தோம். கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு. சிவபுண்ணியம் அவர்கள், ஆதாரப்பூர்வமாகப் பத்திரிகையை எடுத்து வைத்துக்கொண்டு, அவர்களுடைய மாவட்டத்திலே எலிக் கறியை

சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இதே மாமன்றத்திலேயே வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அனைத்துப் பத்திரிகைகளிலே வந்த செய்திதானேயொழிய, இதனை ஒன்றும் புதிய செய்தியாக திரு. அருள் அன்பரசு சொல்லவில்லை. *(குறுக்கீடு)*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன். (குறுக்கீடு) உட்காருங்கள் தம்பி, திரு. செங்கோட்டையன் நிற்கிறார் அல்லவா?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இதற்கு மறுப்புச் சொல்லி, எந்த இடத்திலும் அதுபோன்ற செய்திகள் வரவில்லை என்ற தகவலை இங்கே தந்திருக்கிறார்கள். வேண்டுமென்றே அமைச்சர் அவர்கள் தவறான தகவலைச் சுட்டிக்காட்டியிருப்பது உண்மையிலேயே வேதனைக்குரிய ஒன்று மட்டுமல்ல; இதைத் திரும்பத் திரும்பச் சொன்னால் நாங்களும் அதை வேறு திசையிலே பேச வேண்டிய வாய்ப்புக்கள் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் *12-05*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து இன்று ஒருநாளாவது மாண்புமிகு உறுப்பினர்கள்—ஏனென்றால் இங்கு எல்லோரும் பேசவேண்டும்; அனைத்துக் கட்சித் தலைவர்களும் பேசவேண்டும்; நேரம் இல்லை—குறுக்கீடுகளைக் குறைத்துக்கொண்டு அமைச்சர்களேகூட முடிந்தால் விளக்கம் தருவதைக்கூட நிறுத்திக்கொண்டு சபையை ஒன்றரை மணிக்குள் முடிப்பதற்கு ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மத்திய அரசு ரூ.60,000/- கோடி, மாநில அரசு ரூ.7,000/- கோடிக்கு விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்து, விவசாயக் குடும்பங்களை வாழவைத்துக் கொண்டிருக்கும் வேளையில், அவர்களுடைய விளைநிலங்களை அரசு கையகப்படுத்தக்கூடாது என்று வேண்டுகோள் வைக்கின்றேன்.



மற்றும் என் தொகுதியில் அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படுவதால் விவசாயிகள், நெசவாளர்கள், தொழில் முனைவோர் ஆகியோர் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே மின்திறனை உயர்த்தி, சீரான மின்சாரம் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். எனது தொகுதியில் இரண்டு பெரிய ஏரிகள் உள்ளன. அதிலும், மிகவும் குறிப்பாக, வேலூர் மாவட்டத்திலேயே மிகவும் பழமைவாய்ந்த ஏரியான காவேரிப்பாக்கம் ஏரி மிகவும் பெரிய ஏரி. அந்த ஏரியினைத் தூர் வாரிச் செப்பனிட்டுத் தருமாறு கேட்டுக்கொண்டு, அதேபோன்று மகேந்திரவாடி ஏரியும் தூர் வாரிச் செப்பனிடப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

சோளிங்கர் நகரைச் சுற்றுலாத் தல மையமாக அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். சோளிங்கர் நகரில் அடிக்கடி வாகன நெரிசல் ஏற்படுவதால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்படுகின்றது. எனவே, அதற்கு ஒரு புறவழிச் சாலை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். சோளிங்கர் தொகுதியில் அரசின் சார்பில் இயக்கப்படுகின்ற பேருந்துகள் மிகவும் குறைவாக உள்ளது. தனியார் பேருந்துகள் பல இருந்தாலும் அதிகமான கட்டணங்கள் வசூலிக்கப்படுவதால் அங்கு பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. நேரு அவர்கள், பல்வேறு சாதனைகள் செய்துகொண்டிருக்கும் இவ்வேளையில், எனது தொகுதிக்கு மேலும் 25 புதிய வழித் தடங்களை ஏற்படுத்தி, கூடுதல் பேருந்துகளை இயக்க ஏற்பாடு செய்துதருமாறு கேட்டுக்கொள்கிறேன். சோளிங்கரிலிருந்து சென்னைக்கு இரண்டு அரசுப் பேருந்துகள் இயக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். எனது தொகுதியில் காவேரிப்பாக்கத்தில் ஒரு புதிய காவல் நிலையம் துவக்கப்பட்டது. அந்தக் காவல் நிலையம் திறப்பின்போது வைக்கப்பட்ட அந்தக் கல்வெட்டில் சட்டமன்ற உறுப்பினரின் பெயர் பொறிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்து, தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகின்றேன்.

அதேபோல், தொகுதியில் உள்ள அரசு அனுமதிபெற்ற கனிமவள நிறுவனமான 'டாமின்' மூலம் கிரானைட் கற்களை வெட்டி எடுத்து வர்த்தகம் செய்கிறார்கள். ஆனால், அவர்கள் எடுக்கின்ற அளவைக் குறைவாக அரசிற்குக் கணக்குக் காட்டிவிட்டு பெரும் இலாபம் சம்பாதிக்கின்றார்கள். இதனால் அரசுக்கு வரவேண்டிய வருவாய், இழப்பு ஏற்படுகின்றது. அதேபோல அதனுடைய துகள்கள்,

பக்கத்தில் உள்ள ஏரியில் ஆங்காங்கே போடப்பட்டு, அவை நீராதாரத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கின்றன. அரசு உடனடியாகத் தலையிட்டு முறையான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் அரசு சார்பில் நடைபெறும் அரசு நலத் திட்டப் பணிகள் துவக்க விழாவின்போது சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்தாலோசிக்காமல், அவருக்குத் தெரிவிக்காமல் சில அதிகாரிகள் செயல்படுகின்றார்கள் என்பதையும் தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

'உலகப் பொதுமறை' என்று சொல்லப்படும் திருக்குறள் தந்த வான்புகழ் கொண்ட திருவள்ளுவரைப் போற்றுகின்ற இந்த அரசு, அவரது துணைவியார் வாசுகி அம்மையார் பிறந்த இல்லமான காவேரிப்பாக்கம் அடுத்த கொண்டாபுரம் இல்லத்தினை நினைவு இல்லமாக அறிவிக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றேன். அதேபோல, சோளிங்கர் தொகுதியையும், செய்யாறு தொகுதியையும் இணைக்கின்ற வகையிலே மாமண்டூர் முதல் பிரம்மதேசம் வரை பாலாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டித் தர அரசு முன்வரவேண்டும். ஏற்கெனவே நபார்டு திட்டத்தின்கீழ் பரிந்துரை செய்யப்பட்டு, ரூ.9 கோடி செலவாகும் என்று மதிப்பீடும் செய்யப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தினை நிறைவேற்றினால் ஏறத்தாழ 17 கிலோ மீட்டர் தூரம் மிச்சம் ஆகும். எரிபொருளும் மற்றும் இதர செலவுகளும் குறையும். எனவே, பாலம் கட்டித் தர முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

பட்ஜெட்—பட்ஜெட் பற்றிய விவாதத்திற்கு இப்போது நான் வருகின்றேன். மத்திய அரசும், மாநில அரசும் ஒரு சிறப்பான பட்ஜெட்டை 2008-2009 ஆம் ஆண்டில் அறிவித்துள்ளன. மாநில அரசு ரூ.7,000/- கோடி விவசாயிகள் நலனுக்காக அறிவித்துள்ளது. அதேபோல் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதல்களோடு சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கும் நமது பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் அமைச்சரவையிலே பங்கேற்றிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் ரூ.60,000/- கோடி விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்து, அவர்களின் வாழ்வில் ஒளியேற்றியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. அருள் அன்பரசு:** அதேபோல, தமிழக நிதி அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்த தமிழக பட்ஜெட் மிகவும் பாராட்டுதலுக்குரியது. காங்கிரஸ் கட்சியின் சார்பாக மனமார வரவேற்கின்றேன். ஏழை விவசாயிகளின் ஏற்றம் போற்றிய மத்திய மாநில அரசின் பட்ஜெட்டைப் பாராட்ட மனம் இல்லாமல் இலட்சக்கணக்கான வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஏதோ ஒரு மூலையில் மின் கசிவின் காரணமாக ஏற்பட்ட விபத்தில் ஒரு குழந்தை பலியானதை, ஏதோ வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில் வெடிகுண்டை வைத்து வெடிக்கச் செய்ததுபோல் ஓலமிடும் எதிர்கட்சியினர், தங்களுடைய கடந்தகால ஆட்சியில் கும்பகோணத்தில் பிஞ்சு மலர்கள் தீயில் கருகியதையும், தருமபுரி வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டதையும் நினைவில் எண்ணிப் பார்க்கவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) மகாபாரதத்திலே வரும் குந்தி தேவியைப் பார்த்து, காந்தாரி, குழவிக் கல்லை எடுத்துத் தன் வயிற்றில் இடித்துக் கொண்டு, 'குய்யோ முறையோ' என்று கூக்குரலிட்டதுபோல், இந்த ஆட்சியைப் பார்த்துக் குமுறுகின்றார்கள்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. அருள் அன்பரசு:** எதிர்க்கட்சிகள் என்ற நிலைமை மாறி, எதிரிக் கட்சியாகச் செயல்படுவதைக் கைவிட்டு, இனியாவது தமிழகம் முழுவதும் தடையில்லாமல் ஆரோக்கியமாக இருக்கின்ற அளவில் சட்டமன்றத்தில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. டி. மூர்த்தி, 10 நிமிடங்கள்.

**திரு. அருள் அன்பரசு:** ஐந்து நிமிடங்கள்தான் ஆகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை; நேரமில்லை எனக்கு. குறிப்பிட்ட நேரத்தில் முடித்தாக வேண்டும். (குறுக்கீடுகள்) திரு. மூர்த்தி. (குறுக்கீடுகள்) உங்களுக்கான time முடிந்துவிட்டது; அவ்வளவுதான். திரு. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம் திருப்போரூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக்கி, என்னை இந்த மாமன்றத்தில் 2008-2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தில் கலந்து கொண்டு பேச வாய்ப்பளித்த தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர் வளர்ச்சிக்கும், தமிழ் மொழிக்கும், சமூக நீதிக்கும், சமத்துவத்துக்கும் என்றும் போராடும் எமது சமூக நீதிக் காவலர், மருத்துவர் அய்யா அவர்களுக்கும், இந்திய ஜனாதிபதிக்கு என்ன மருத்துவ வசதி கிடைக்கின்றதோ அதே மருத்துவ வசதியை இந்தியாவின் கடைக்கோடி கிராமத்தில் உள்ள குப்பனுக்கும், சுப்பனுக்கும் கிடைக்க வழிவகை செய்தவரும், புகையில்லா உலகை உருவாக்கி, உலக நாடுகளின் சுகாதாரத் துறையின் நன்மதிப்பைப் பெற்றவரும், எமது மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் சின்ன அய்யா அவர்களுக்கும், மேலும் எங்களது கட்சி வளர்ச்சிக்கும், மனித நேயத்திற்கும் அயராது பாடுபடும் ஓய்வறியா உழைப்பாளி, தியாகச் செம்மல் எமது கட்சியின் தலைவர் அண்ணன் மாண்புமிகு கோ.க. மணி அவர்களுக்கும், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திருக்கச்சூரார் அவர்களுக்கும், கொறடா வேல்முருகன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த 2008-2009 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் நல்லவற்றை வாழ்த்தியும், அதேவேளையில் குறைகளை எடுத்துக்கூறியும் இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம், அரசுத் திட்டங்களில் மகத்தான திட்டம். வருவாய்த் துறைமூலம் வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தில் இந்த ஆண்டிற்குள் 3 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதை இந்த அரசு இலக்காக நிர்ணயித்து, இந்த ஆண்டு அது விஞ்சப்பட்டு 3 இலட்சத்து, 98 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் அரசுப் புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டுகளாக வீடுகள் கட்டி குடியிருப்போருக்குப் பட்டா வழங்குவதற்கான குடியிருப்புக் கால அளவை 5 ஆண்டுகள் குறைத்தும், வருமான வரம்பை நீக்கியும், அனைவருக்கும் வீட்டு மனைப் பட்டா கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வரசானது கடந்த நிதிநிலை அறிக்கையில் காலக் கெடு 2008 மார்ச் 31 ஆம் தேதி என நிர்ணயித்து, அதாவது நேற்றோடு



இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று கூறியிருந்தது. காலக் கெடு நேற்றுடன் முடிந்துவிட்டது. இதுவரை எத்தனைப் பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது; அதேநேரத்தில், வருமான வரம்பை நீக்கி அனைவருக்கும் வீட்டுமனைப் பட்டா என்று சொல்லும் அரசு, அரசு ஊழியர்களுக்கு மட்டும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க முடியாது என்று அதிகாரிகள் சொல்கிறார்கள்; எனவே, அரசு ஊழியர்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு இலவசமாக வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்குச் சட்டத்திலே இடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்; சட்ட விதிமுறைகளின்படி அரசு ஊழியர்களுக்கு வழங்க இயலாது.

**திரு. டி. மூர்த்தி:** நன்றி, அமைச்சர் அவர்களுக்கு. அதேபோன்று, பழங்குடி இன மக்கள் தமிழகத்தின் கிராமங்களில் ஊரின் ஒதுக்குப் புறமான ஏரி, குளம், காடு போன்ற பகுதிகளில் பல வருடங்களாக வசித்து வருகின்றனர். இவர்களுக்கும், அவ்விடங்களுக்கு மாற்றாக அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

பழங்குடி இன மக்களான எஸ்.டி. எனச் சொல்லப்படுகின்ற பழங்குடி இன மக்களுக்குத் தமிழகத்திலே பல கிராமங்களில் வசித்தாலும், அவர்களின் பிள்ளைகள் படித்து உயர்நிலை அடைவதற்குச் சாதிச் சான்றிதழ் உடனடியாக வழங்கப்பட வேண்டும். இதில் வருவாய்த் துறை அதிகாரிகள் மிகவும் சுணக்கம் காட்டுவதால், பல எஸ்.டி. இன மாணவர்கள் கல்வி அறிவு பெறமுடியாமல் உள்ளனர். இதனை அரசு உடனடியாகப் போக்கவேண்டும். மேலும், கடந்த அண்ணா தி.மு.க. அரசால் கொண்டு வரப்பட்ட பொது மக்களால் பெரிதும் பாராட்டப்பட்ட “தொட்டில் குழந்தைகள் திட்டம்”, நல்ல திட்டம். அத்திட்டம் இப்பொழுது என்னவாயிற்று? மேலும், இந்தத் தொட்டில் குழந்தைகள் திட்டத்தில் வளர்க்கப்பட்ட குழந்தைகள் என்ன ஆனார்கள்? எங்கு உள்ளார்கள்? அவர்களின்

எதிர்காலம் எப்படி உள்ளது? அந்தக் குழந்தைகளுக்குத் தற்பொழுது 15 வயது ஆகியிருக்கும் என்று சொல்லப்படுகின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மாணவச் செல்வங்கள்பற்றியும், அதேபோன்று தொட்டில் குழந்தைகள் திட்டத்தில் வளர்க்கப்பட்ட அந்தக் குழந்தைகள் யாரிடம் உள்ளார்கள் என்பதையும் தயவுகூர்ந்து இந்த மாமன்றத்தில் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

விளம்பர banner; இன்று தமிழகக் கலாச்சாரத்தை அழித்துவரும் விஷயங்களில் முதலிடத்தில் விளம்பரம் உள்ளது. திரைப்படத் துறையினர், அரசியல் கட்சிகள், தனியார் குழுக்கள் ஆகியோர் செய்யக்கூடிய விளம்பரங்கள் நமது தமிழ்ப் பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் அழிக்கக்கூடிய வகையில் உள்ளது. நமது சிற்றூர், பேரூர் என அனைத்து இடங்களிலும் சாலையோரம், பாலம், சுவர்கள், பொது இடங்கள், சுவர்களில் எழுதும் கலாச்சாரமும் வானுயர banner–களும், cut-out கலாச்சாரமும் நமது தமிழகத்தில்தான் பெருகிக் கொண்டிருக்கின்றன. இதனைத் தடுத்து நிறுத்த அனைத்து முயற்சிகளும் அரசால் மேற்கொள்ளப்பட வேண்டும். அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் இது மாதிரி விளம்பரத்தில் ஈடுபடக் கூடாது என்ற ஒரு எண்ணத்தை உருவாக்கவும், அரசியல் விளம்பரத்தை அடியோடு தடுத்து நிறுத்தவும் சட்டம் இயற்றப்பட வேண்டும். குறிப்பாக, ஆபாச விளம்பரம் மற்றும் அரசியல் விளம்பரம் செய்பவர்களுக்கு, வெளியில் வர முடியாத சிறைத் தண்டனை வழங்க அரசு சட்டம் கொண்டு வரப்பட வேண்டுமெனப் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பக்கங்களைச் சரியாகத்தான் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்! (சிரிப்பு)

**திரு. டி. மூர்த்தி:** கடந்த 2 மாதங்களுக்கு முன்பாக cut-out கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலே நமது முதல்வர் கலைஞர் அவர்கள் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். நிகழ்ச்சி நடத்தப்படும் முன்பு 2 நாட்களுக்கும் அதேபோன்று முடிந்த பின்பு 3 நாட்களுக்கும் வைக்க மட்டும் அனுமதி வழங்கப்படும் என அறிவித்தார்கள். இதனை எங்களது கட்சி நிறுவனர் மருத்துவர் அய்யா



அவர்கள்கூட வெகுவாகப் பாராட்டினார்கள். பத்திரிகைகளும், பொது மக்களும் பாராட்டினார்கள். ஆனால், அந்த அறிவிப்பு வந்த 2 நாட்கள் மட்டும் பரபரப்பாகப் பேசப்பட்டது. ஆனால் மீண்டும் cut-out கலாச்சாரம் தலைதூக்கி உள்ளது. இதனைத் தடுக்க வேண்டிய காவல் துறையினர், எந்த நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளனர். உடனடியாகக் காவல் துறை இதுபோன்று cut-out கலாச்சாரத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாகப் பத்திரிகைச் செய்திகளிலே கடலில் மீன் பிடிக்க 45 நாட்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வந்துள்ள செய்தியை அறிந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டோர் மிகவும் வேதனை அடைந்துள்ளார்கள். இது ஒவ்வோர் ஆண்டும் மீன் இனப் பெருக்கத்திற்கான நடைமுறை என்றாலும்கூட, இதுபோன்ற காலக்கட்டத்தில் மீன்பிடித் தொழிலையே நம்பியுள்ள மீன்பிடித் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவசமாக தினமும் 2 கிலோ அரிசியும், அதேபோன்று மாதம் ரூ.2,000 இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றேன்.

நம்முடைய அரசு பொறுப்பேற்று, முதல் நிதிநிலை அறிக்கையைத் தொடர்ந்து, ஆகஸ்ட் 4, 2006-இல் நடைபெற்ற கல்வி மானியக் கோரிக்கையில், 201 தொழிற்கல்வி ஆசிரியர்களுக்குப் பணி நியமனம் வழங்குவது எனப் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, 2 ஆண்டுகள் முடிவடையும் நிலையில், அரசாணை 35 வெளியிடப்பட்டது. அன்று வெளியிடும்போதே பள்ளியில் சேர்ந்த நாளை முன்னுரிமையாகக் கொண்டு, பட்டியலில் 201 தொழிற்கல்வி ஆசிரியர்களின் பெயரும் வெளியிடப்பட்டது. போதிய கல்வித் தகுதி இருந்தும், போதிய முன்நிகழ்வுகள் இருந்தும், எந்தவிதமான தடை ஆணை இல்லாத நிலையிருந்தும், அரசாணை 35 வெளிவந்து ஓர் ஆண்டுக்கு மேலாகியும், இன்னும் ஏறக்குறைய 90 பேர்களுக்குப் பணி நியமனம் வழங்கப்படவில்லை. இவர்களில் பெரும்பாலானோர் பட்டியலில் முதலில் இடம் பெற்றவர்கள் ஆவார்கள்.

தமிழக அரசின் கல்வித் துறையில் பிற பிரிவுகளிலும், ஆயிரக்கணக்கில் புதிய பணி நியமனம் வழங்கப்பட்டு வருகின்றன. பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் நிருவாக நிதியில் மேல்நிலைப் பள்ளிகளில் பல ஆண்டுகளாக மிகக் குறைந்த ஊதியத்தில் பணியாற்றி வரும் ஏறக்குறைய 1,000 தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கும்

ஒரே அரசாணையில் புதிய பணியிடங்கள் தோற்றுவித்து பணி நியமனம் வழங்கிட, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள முக்கியமான பிரச்சினைகள். சமத்துவபுரம்—தந்தை பெரியாரின் சமத்துவக் கொள்கையை நிலைநாட்டும் வகையில் அவரது திருவுருவச் சிலையுடன்கூடிய 95 புதிய சமத்துவபுரங்களை அமைப்பதற்கு இந்த அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் என்னுடைய தொகுதியில் உள்ள மாம்பாக்கம் கிராமத்தில் உள்ள சமத்துவபுரத்தில் 100 பேருக்கும் 100 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், அவர்களுக்கு இதுவரை வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு அதிகாரிகள் மறுக்கின்றார்கள். உடனடியாக அரசு அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்போரூர் தொகுதியில் செல்லும் பழைய மகாபலிபுரம் சாலையில், தற்போது திருப்போரூர் பேரூராட்சி மற்றும் தண்டலம் பகுதியில் நெடுஞ்சாலைத் துறைமூலமாக ஆறு வழிச் சாலையாக மாற்ற பூர்வாங்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருபுறங்களிலும் உள்ள சுமார் 300 வீடுகளை அகற்ற அரசு முடிவெடுத்துள்ளதாக அந்தப் பொது மக்கள் கருதுகின்றனர். எனவே அந்த வீடுகளை இடிக்காவண்ணம் மாற்றுப் பாதை அமைத்துத் தரும்படியும் இதற்குண்டான மாற்று இடமும் அப்பகுதியில் உள்ளது; இதனை அரசு மறுபரிசீலனை செய்யும்படியும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்போரூர் தொகுதியிலிருந்து செங்கல்பட்டு வட்டாட்சியர் அலுவலகம், 45 கிலோ மீட்டர் தூரம் ஆகும். தொகுதி மக்கள் சாதிச் சான்று, இருப்பிடச் சான்று, வருமானச் சான்று மற்றும் அரசு சான்றுகள் பெற வேண்டுமானால், அவ்வளவு தூரம் சென்று வர ஒரு நாள் ஆகிறது. அதுமட்டுமல்ல; கூலித் தொழிலாளர்களின். . . (மணியடிக்கப்பெற்றது) ஓரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. டி. மூர்த்தி:** கூலித் தொழிலாளர்களின் பல நாள் கூலி வீணாகிறது. எனவே இதனைப் போக்க திருப்போரூர் ஒன்றியத்தை மையமாக வைத்து, திருப்போரூரில் வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கப்பட வேண்டுகின்றேன்.



*பிற்பகல் 12-20*

கடைசியாக ஒன்று. திருப்போரூர் தொகுதியின் நீண்டகால கோரிக்கையும் நான் இம்மன்றத்தில் வைத்த முதல் கோரிக்கையுமான, அதாவது கிழக்குக் கடற்கரைச் சாலையான E.C.R.-இலிருந்து-நெமிலியிலிருந்து திருப்போரூர் வந்து செல்ல இடையிலுள்ள பக்கிங்ஹாம் கால்வாய்மீது மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டு, எனக்கு இம்மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி. (குறுக்கீடு)

**THIRU POLUR M. VARADHAN:** Deputy Speaker Sir, one clarification.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சி. கோவிந்தசாமி, உங்களுக்கு 20 நிமிடங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகிற வாய்ப்பைத் தந்த தங்களுக்கு முதலில் நன்றியைக் கூறி, புது வரி இல்லாத ஒரு பட்ஜெட்டை நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்தச் சபையிலே சமர்ப்பித்திருப்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இந்த பட்ஜெட்டில் பல்வேறு விதமான சலுகைகள், திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. கல்விக்கான ஒதுக்கீடு அதிகரிப்பு, புதிய கல்லூரிகள் துவக்கம், அரசுப் பள்ளிகளில் சிறப்புக் கட்டணம் இரத்து, விடுதி மாணவர்களுக்கான கட்டண உயர்வு, விவசாயிகள் பயிர்க் கடன் வட்டிக் குறைப்பு, நெசவாளர் வீடு கட்ட வாங்கிய கடன் 15 கோடி ரூபாய் தள்ளுபடி, ஆதி திராவிடர் விவசாயிகள் தாட்கோ கடன் 5 கோடி ரூபாய் தள்ளுபடி, நலிந்தோர் பெற்ற கூட்டுறவு வீட்டு வசதிக் கடன் தள்ளுபடி, அதேபோல, அருந்ததி இன மக்களுக்கான உள் ஒதுக்கீட்டுக்கான தனிக் குழு அமைக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கை எடுப்பதற்கான அறிவிப்புகள், நீண்ட காலமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி,

மாதர் அமைப்புகள் வலியுறுத்தி வந்த மகளிர் ஆணையத்திற்குச் சட்டப்பூர்வமான வழங்கக்கூடிய வகையிலே தனிச் சட்டம் கொண்டுவருவது, தமிழ்நாட்டிற்குள் செல்லும் நதிகள் இணைப்பு போன்ற பல்வேறு அறிவிப்புகள், இவைபோன்ற அறிவிப்புகள் இந்த பட்ஜெட்டிலே இடம் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது. சாதாரண ஏழையெளிய அடித்தட்டில் வாழ்கிற மக்களுக்குப் பல நிவாரணங்கள் இதன்மூலம் கிடைக்கிற வாய்ப்பு உருவாகும் என்ற வகையில் இதை வரவேற்கின்றோம்.

அதேபோல, கடந்த ஒரு வருட காலமாக வாய்ப்புக் கிடைக்கும் நேரங்களில் எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் தொடர்ந்து நான் வலியுறுத்தி வந்த, திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தனி மாவட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்கிற அந்தக் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையிலே தனி மாவட்டம் உருவாவதற்கான அறிவிப்புகள் வெளியிட்டமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், நிதியமைச்சர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அதிகாரிகளுக்கும் திருப்பூர் தொகுதி மக்களின் சார்பில் என்னுடைய நன்றியை, வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துகளை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் தன்னுடைய வரி வருவாயில் மாநிலங்களுக்கு 27 சதவீதம் பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. இது 50 சதவீதமாக உயர்த்தப்படுகிறபோதுதான், மாநில அரசுகள் மத்திய அரசிடத்திலே எதற்கெடுத்தாலும் அதனுடைய உதவியை எதிர்பார்த்து நிற்கிற நிலையிலே ஒரு மாற்றம் உருவாக முடியும். ஆகவே, உடனடியாக 50 சதவீதம் சாத்தியமில்லை என்றாலும், அதை நோக்கிச் செல்கிறவகையிலே மத்திய அரசினுடைய வரி வருவாயில் மூன்றில் ஒரு பகுதியாவது மாநிலங்களுக்கு மத்திய அரசு அந்த நிதியைப் பகிர்ந்தளிக்க வேண்டும். அதற்காக மத்திய அரசை நம்முடைய மாநில அரசு வலியுறுத்த வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

விலைவாசி உயர்வு மிகக் கடுமையாக இன்றைக்கு உயர்ந்துள்ளது. அதனை எல்லாக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்திய நாடு முழுவதும் இன்றைக்கு



இந்த விலைவாசி என்பது உயர்ந்திருக்கிறது. தமிழகத்திலே, மாண்புமிகு முதல்வர் அவர்களாலே ரேஷன் அரிசி கிலோ இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படுவது நல்லது. ஆனால், அதே நேரத்தில் இந்த விலையுயர்வுக்கு, இவ்வளவு கடுமையான விலையுயர்வுக்கு அடிப்படையான காரணங்களில் ஒன்று, online வர்த்தகம் என்பது. அதன்படி, ஒரு குறைந்த தொகைக்கு, ஒரு கோடி ரூபாய்க்கு ஒருவர் ஒரு பொருளை வாங்க வேண்டுமானால், 25 சதவிகிதத் தொகையை முன்பணமாகச் செலுத்திவிட்டு, அந்தப் பொருளை அவர் பதிவு செய்துகொண்டால் அந்தப் பொருளை வேறு யாருக்கும் விற்க முடியாது. அப்படி அதை விற்க முடியாத காரணத்தினால், அந்தப் பொருள் பதுக்கி வைக்கப்படுகிறது என்றுதான் பொருள். ஆகவே, அப்படிப் பதுக்குவதன்மூலமாக ஒரு செயற்கையான பற்றாக்குறை ஏற்படுத்தப்பட்டு, அதன் விளைவாகக் கடுமையாக விலைகள் இன்றைக்கு உயர்கின்றன. நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள், online வர்த்தகத் திட்டத்தையே இரத்துச் செய்ய வேண்டுமென்று இங்கே வலியுறுத்தினார்கள். அவர் சொன்னதைப்போல, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும் அதைத்தான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அவர் இங்கே சொன்னதை நானும் வழிமொழிய விரும்புகிறேன். அதே நேரத்தில், இன்றைக்கு மத்திய அரசாங்கம் சமீபத்திலே நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னாலே, ஓர் அவசரச் சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அந்த அவசரச் சட்டத்திலே என்ன வலியுறுத்துகிறார்கள் என்றால், இந்த online வர்த்தகத்தை முறைப்படுத்துவதற்கும், அன்னிய மூலதனம் online வர்த்தகத்திலே பயன்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கக்கூடியவகையில், இந்தச் சட்டத்திலேயே சில திருத்தங்களைச் செய்வதற்கான ஒரு புதிய அவசரச் சட்டத்தை அறிமுகம் செய்திருக்கிறார்கள். உண்மையிலேயே இதைக் கட்டுப்படுத்த வேண்டுமானால், விலை உயர்வை எதிர்க்கக்கூடிய, இருக்கிற எல்லா அரசியல் கட்சிகளும் மத்திய அரசு கொண்டுவர அறிவித்திருக்கிற அவசரச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சட்டமாக்குகிறபோது, அதை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகளில் அனைவரும் இணைந்து நின்றால், நிச்சயமாக ஓரளவு விலைவாசியைக் கட்டுப்படுத்தமுடியும். அந்தவகையிலே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி அதை வலியுறுத்த விரும்புகிறது. நம்முடைய தமிழக அரசும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-25

அதேபோல, இந்த விலை உயர்வின் காரணமாக, இன்றைக்கு steel விலை, மருந்து விலை—தனியார் கல்விக் கட்டணம் உள்பட—பல்வேறு பொருட்களின் விலை இன்றைக்குக் கடுமையாக உயர்ந்திருக்கிறது; சாமானிய மக்களை மிகக் கடுமையாக அது பாதிக்கிறது. இந்தக் கடும் விலை உயர்வுக்கு இன்னொரு முக்கியமான காரணம், புதிய பொருளாதாரக் கொள்கை என்கிற அந்த நடவடிக்கை. அதனுடைய விளைவு, இன்றைக்கு இந்தப் பாதிப்புகள் மேலும் மேலும் அதிகரிக்கின்றன. இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கை அமெரிக்காவினாலே முன்மொழியப்பட்ட ஒரு கொள்கை என்பதை நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன். ஆகவேதான், மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியும், இடதுசாரி இயக்கங்களும் தொடர்ந்து இதை வலியுறுத்தி வருகின்றன. அமெரிக்கா என்பதற்காக அல்ல; அந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையின்மூலம் ஏற்படுகிற கடுமையான பாதிப்புகளால், நாட்டு மக்கள் கடும் பாதிப்புக்கு ஆளாகிறார்கள் என்ற முறையில் அதை வலியுறுத்தி வருகிறோம்.

சமீபத்திலே, நம்முடைய மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்கள் சிங்கப்பூருக்குச் சென்றிருந்தார்கள். சிங்கப்பூருக்குச் சென்றிருந்தபோது, அங்கே இதுவரையில் இந்தியாவில் இடதுசாரிகளும் மற்ற அமைப்புகளும் எதை வலியுறுத்தி வந்தார்களோ, அதாவது அமெரிக்காவினுடைய தவறான பொருளாதாரக் கொள்கை, இன்றைக்கு உலகம் முழுவதும் விலை உயர்வுக்குக் காரணமாக இருக்கிறது என்ற செய்தியை, திரு ப. சிதம்பரம் அவர்கள் சிங்கப்பூரிலே போய், அங்கே ஒரு நிகழ்ச்சியிலே பேசுகிறபோது குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய நாட்டிலே ஏனோ அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். சிங்கப்பூரிலே போயாவது அதை ஏற்றுக்கொண்டதற்கு நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, அந்தவகையில், இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கை கடுமையான பாதிப்பை உருவாக்கக்கூடியதாக இருக்கிறது. அதைக் கவனத்தில் கொண்டு மத்திய அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மற்றொரு முக்கியமான நிகழ்வு; இந்தப் பன்னாட்டுக் கம்பெனிகளும், இந்தியப் பெரு முதலாளிகளும் சிறு வர்த்தகத்திலே நுழைகிற நடவடிக்கை என்பது, இன்றைக்கு அதிகரித்து வருகிறது. காய்கறிக் கடையிலிருந்து, பலசரக்குக் கடை வரையில் சகலத்திலும்,



இதுபோன்ற பெரு முதலாளிகளும், அன்னிய கம்பெனிகளும் இதிலே தலையிடுவது என்பது தடுக்கப்படவேண்டும். அதற்காக பல இடங்களிலே மக்கள் போராட்டத்தின்மூலம், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் அதை விரட்டியடித்திருக்கிறார்கள். ஆகவே, இங்கேயிருக்கிற எல்லா அரசியல் கட்சிகளும், மக்களின் நலன் கருதி, அதுபோன்ற சிறு வர்த்தகத்திலே, பெரு முதலாளிகளும், அன்னிய முதலாளிகளும் தலையிடுவதைத் தடுப்பதற்கு ஒன்றுபட்டுக் குரல் கொடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்காக முன்வர வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, கடந்த 15 வருடங்களில், கிராமப்புற வங்கிகள், சற்றேறக்குறைய 4,780 வங்கிகள் கிராமப்புறங்களிலே மூடப்பட்டிருக்கின்றன. நம்முடைய U.P.A. அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, நம்முடைய மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்கள் நிதி அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, 1,503 வங்கிகள் கிராமப்புறங்களிலே மூடப்பட்டிருக்கின்றன. கிராமப்புற ஏழையெளிய சிறு விவசாயிகள், அந்த அரசு வங்கிகளை நம்பி, அவற்றிலே கடன் வாங்கி வந்தவர்கள், இன்றைக்கு அந்த வங்கிகள் மூடப்பட்ட காரணத்தினால், தவிர்க்கமுடியாமல் கந்து வட்டிக்காரனை நாடிச் செல்கிற நிலைமையும், கந்து வட்டிக்காரனிடத்திலே வாங்கிய கடனையும், வட்டியையும் கட்டமுடியாமல், நாடு முழுவதும் பல விவசாயிகள் தற்கொலை செய்துகொள்கிற நிலைமையும் இன்றைக்கு நிகழ்ந்து வருகிறது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் கவனப்படுத்த விரும்புகிறேன். அதுபோன்ற. . . (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன். அதுபோன்ற கிராமப்புற வங்கிகளை மூடுவதன்மூலம், சாதாரண கிராமப்புற மக்கள் கடுமையான பாதிப்புக்கு ஆளாகக்கூடிய ஆபத்து அதிகரிக்கிறது. அதனால் தமிழகத்தையும் பாதிக்கக்கூடிய ஆபத்து வரும் என்ற காரணத்தினாலே, நம்முடைய அரசு இதில் மத்திய அரசை வலியுறுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-30

அதேபோலதான், கடந்த பாரதிய ஜனதா கட்சியினுடைய ஆட்சிக் காலத்திலே இதே நிலை நீடித்தது. நான் இந்த அரசில்தான் பூட்டியதாகச் சொல்லவில்லை. அவர்கள் காலத்திலேயும் அதிகமான வங்கிகளைப் பூட்டினார்கள். இதையெல்லாம் பூட்டி, கிராமப்புற விவசாயிகள் தற்கொலை செய்துகொள்கிற நிலை பி.ஜே.பி. ஆட்சிக்

காலத்திலே தீவிரமாக இருந்தது. ஆனால், அன்றைய பி.ஜே.பி. அரசாங்கமும், அன்றைய பிரதமரும் இந்தத் தற்கொலையைப் பற்றியெல்லாம் உண்மை நிலைகளை ஆய்வு செய்வதற்கு மாறாக, 'இந்தியா ஒளிர்கிறது, இந்தியா பீடுநடை போடுகிறது' என்றெல்லாம் பறைசாற்றி வந்தார்கள். அது நடைமுறை வாழ்க்கைக்கும் அவர்கள் சொல்வதற்கும், யதார்த்தத்திற்கும் புறம்பாக முற்றிலும் மாறுபட்டு இருந்தது. ஆகவேதான் தேர்தல் காலத்திலே மக்கள் பதிலைத் தந்தார்கள். நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புவதெல்லாம் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியும், இடதுசாரி இயக்கங்களும் கடந்த 4 ஆண்டுக் காலமாக மத்தியிலே ஆளுகிற இந்த அரசைத் தொடர்ந்து ஆதரித்து வரக்கூடியவர்கள் என்ற உரிமையோடும், அக்கறையோடும் இந்த அரசு தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்ற விருப்பத்தோடும் நாங்கள் கவனப்படுத்த விரும்புவது, பாரதிய ஜனதாக் கட்சியினுடைய அந்தப் பாதையில் இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன்மூலம் கடுமையான பாதிப்புக்கு சாதாரண மக்கள் ஆளாகிறார்கள். ஆகவே, அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். (குறுக்கீடு)

இன்றைக்கு விவசாயிகளைப் பாதுகாக்க 60,000 கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டிருப்பதை மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது. ஆகவே, அதை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி விரும்புகிறது என்பதை நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Sir, No point of order, no clarification.

**திரு. சி. கோவிந்தசாமி:** அதேபோல, அருமைப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) காங்கிரஸ்காரர்கள் நாளைக்குப் பேசுகிறபோது தாராளமாக இதற்கெல்லாம் விளக்கம் கொடுக்கட்டும். நாளையதினம் அவர்கள் பேசுகிறபோது விளக்கம் தரட்டும். ஆகவே, அந்தவகையிலே தயவுசெய்து குறுக்கிட வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. No point of order.

**திரு. சி. கோவிந்தசாமி:** அந்தவகையிலே, இன்றைக்கு... (குறுக்கீடுகள்) அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் சம்பந்தமாக. . . (குறுக்கீடுகள்) இது மாநிலப் பிரச்சினை அல்ல. (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், பா.ஜ.க. பாதையிலே நாம் போகக்கூடாது; நம்முடைய டாக்டர் மன்மோகன் சிங் ஆட்சி நிலைத்து நிற்க வேண்டும்; நீண்ட நாள் ஆள வேண்டுமென்றுதான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) தயவுசெய்து (குறுக்கீடுகள்) நேரம் இல்லை; இன்றைக்கு நேரம் இல்லை. தயவுசெய்து நாளைக்கு நீங்கள் பேசும்போது சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, continue செய்யுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** அருமைப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னொரு விஷயத்தையும் நான் இங்கே பதிவுசெய்ய விரும்புகிறேன். அமெரிக்க-இந்திய அணுசக்தி ஒப்பந்தம் இன்றைக்குப் பரவலாகச் சொல்லப்பட்டு வருகிறது. நம்முடைய தே.மு.தி.க. தலைவர் மரியாதைக்குரிய உறுப்பினர் விஜயகாந்த் அவர்கள்கூட, இங்கே நம்மிடையே சுட்டிக்காட்டினார்கள். இடதுசாரிகள் இதை ஏன் எதிர்க்கிறோம்? இடதுசாரிகள் இந்த நாட்டின் வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்கிறோமா; அல்லது, இந்த நாட்டினுடைய மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இதைப் பயன்படுத்துவதற்குத் தடையாக இருக்கிறோமா என்பதைத்தான் நான் இங்கே விளக்க விரும்புகிறேன். அந்த அணுசக்தியைப் பயன்படுத்துவதிலேயோ அல்லது விஞ்ஞான வளர்ச்சிக்கோ என்றைக்கும் கம்யூனிஸ்டுகள், இடதுசாரிகள், தடையாக இருந்ததில்லை. ஆனால், இந்த அணுசக்தி ஒப்பந்தத்தின்மூலமாக, பல விஷயங்கள் இருக்கின்றன. அதற்குள் எல்லாம் நான் போக விரும்பவில்லை. மின்சாரம் என்கிற ஒரு view-விலிருந்து நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு நம் நாட்டினுடைய மொத்த மின்சார உற்பத்தியில் அணுவைப் பயன்படுத்தி உற்பத்தி செய்கிற மின்சாரம், மொத்த உற்பத்தியில் 4 சதவீதம். அந்த அணுசக்தி ஒப்பந்தத்தின்மூலமாக 10 ஆண்டுகளுக்குக் கூடுதலாகக் கிடைக்கிற மின்சாரம் 4 சதவீதம் என்பது, 7 சதவீதமாக உயரும் என்பதுதான் இன்றைக்கு அந்த ஒப்பந்தத்தினுடைய ஷரத்துகளிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நான் என்ன குறிப்பிட விரும்புகிறேன் என்றால், இந்த 3 சதவீதம் உயர்வதற்காக செலுத்த வேண்டிய தொகை 3 இலட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய். அதற்கு

மாறாக, இன்றைக்கு நம்முடைய நீரைப் பயன்படுத்தி புனல் மின்சாரம் உற்பத்தி செய்தால் அதே அளவு மின்சாரத்திற்குத் தேவைப்படுவது ஒரு இலட்சம் கோடி ரூபாய். அதேபோல, நம்முடைய நாட்டின் நிலத்திற்கு அடியிலே குவிந்து கிடக்கிற, 100 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்த வாய்ப்பு இருக்கக்கூடிய நிலக்கரியைப் பயன்படுத்தி அனல் மின்சார உற்பத்தி செய்தாலும் ஒரு இலட்சம் கோடி ரூபாய் ஆகும். அதே அளவு மின்சாரம் நம்மால் உற்பத்தி செய்யமுடியும். மீதியிருக்கிற 2 இலட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை, இந்த நாட்டினுடைய கிராமப்புற மக்களின் வளர்ச்சிக்காக, இந்த நாட்டின் கல்விக்காக, இந்த நாட்டு மக்களினுடைய சுகாதாரத்திற்காகப் பயன்படுத்தினால் இந்திய கிராமப்புறம் உண்மையிலேயே பீடுநடை போடும். ஆகவே, கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரம் உயராமல் எந்த நாடும் முன்னேற முடியாது என்பதை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இங்கே அழுத்தமாக வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறோம். அதற்காகத்தான் நாங்கள் அதை ஆட்சேபிக்கிறோம் என்பதை நான் இந்த அவையிலே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்ததாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருந்தால், அவருடைய நேரடி கவனத்திற்குக் கொண்டு சொல்ல வேண்டுமென்று விரும்பினேன். நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மின் துறை அமைச்சர் அவர்களும் அதை முதலமைச்சரிடத்திலே சொல்லி நம்முடைய நிதியமைச்சரின் நாளைய பதிலில் அதற்கான அறிவிப்பு வரும் என்ற நம்பிக்கையோடு நான் குறிப்பிட விரும்புவது, நம்முடைய முதல்வர் அவர்கள் செய்வதைத்தான் சொல்கிறார்; சொல்வதைத்தான் அல்லது சொன்னதைச் செய்கிறார். அந்தவகையிலே தமிழ்நாடு அரசு ஊழியர்கள் இன்றைக்கு 1½ இலட்சம் பேரை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கிற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற அந்தச் சங்கத்தினுடைய மாநாட்டிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், விரைவிலே இந்தச் சங்கம் அரசாலே அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக எதிர்காலத்திலே அறிவிக்கப்படும் என்று சொன்னார்கள். கடந்த காலத்திலே அரசு ஊழியர்களின் பல்வேறு சலுகைகள் பறிக்கப்பட்டபோது கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றபோது அவற்றையெல்லாம் திரும்ப வழங்கியிருக்கிறார்கள். புதியதாக பல சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் மகிழ்ச்சியோடுதான் இருக்கிறார்கள். அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருப்பது, அரசு ஊழியர் சங்க மாநாட்டிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள்



அறிவித்ததைப்போல, அந்தச் சங்கத்திற்கான அங்கீகாரம் வழங்க வேண்டுமென்று ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் நாளைய தினம் அதற்கான நல்ல அறிவிப்பு வரும் என்ற நம்பிக்கையோடு அவருடைய கவனத்திற்கு நான் இதைக் கொண்டு வர விரும்புகிறேன்.

பிற்பகல் 12-35

அதேபோல, ஆதிவாசி மக்களினுடைய நலன் காக்க தொடர்ந்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தோடு இடதுசாரி கட்சிகள், ஒருங்கிணைப்புக் குழுவிலே தொடர்ந்து வலியுறுத்தி, இப்போது மத்தியிலே ஆதிவாசி மக்களின் நலன் பாதுகாக்க ஒரு நல்ல சட்டம் நாடாளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தன்னுடைய பங்களிப்பை அதிலே செலுத்தியிருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசாங்கத்தாலே நிறைவேற்றப்பட்டிருக்கிற ஆதிவாசி மக்களுக்கான அவர்களுடைய வாழ்வுக்கும் உத்தரவாதம் அளிக்கக்கூடிய ஒரு நல்ல சட்டம்; அந்தச் சட்டம் முழுமையாக நம்முடைய தமிழகத்திலே மலைப் பகுதிகளிலே வாழ்கிற ஆதிவாசி மக்களுக்குப் போய்ச் சேருகிற வகையில் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, முறைசாராத் தொழிலாளர்கள். முறைசாராத் தொழிலாளர்களுக்கு 14 வாரியங்கள் உருவாக்கப்பட்டு, தொழிலாளர் நலத் துறை மூலமாகச் செயல்பட்டு வந்தன. அவற்றிலே சில தவறுகள் நிகழ்வதாக அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததையொட்டி, அந்த நல வாரியப் பணிகளை மேற்கொள்கிற பணிகள், வாரியத்தில் உறுப்பினர்களைச் சேர்ப்பது, பயனாளிகளை அறிந்து அவர்களுக்கு உதவி வழங்குகிற பணிகள் ஆகியவை வருவாய்த் துறையின்கீழே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அது இன்றைக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. நம்முடைய அரசும் அந்த நீதிமன்றத் தடையை விலக்குவதற்காக மனு தாக்கல் செய்திருக்கிறது. நான் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், இங்கிருக்கிற நம்முடைய அமைச்சர் பெருமக்களையும் கேட்டுக்கொள்ள விரும்புவது, தொழிலாளர் நல வாரியத்தாலேயே தொடர்ந்து அந்த வாரியப் பணிகள் அனைத்தும் தொடர வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். தொழிலாளர்களுடைய நலனைப்பற்றி அவர்களுடைய வாழ்க்கைத் தரங்களைப்பற்றி

வருவாய்த் துறையைவிட தொழிலாளர் நலத் துறை நன்கு அறிந்த ஒரு துறை. ஆகவே, அதில் ஏதாவது சில தவறுகள் இருக்குமானால், அந்தத் தவறுகளைக் களைந்து சிறப்பாக நடத்துவதற்கு என்ன மாற்று வழி என்பதைக் கண்டறிந்து அதற்கான தீர்வை உருவாக்க வேண்டும். அந்தவகையில் தொழிலாளர் நலத் துறை என்பதுதான், ஒவ்வொரு factory வாரியாகப் போய் நேரடியாக ஆய்வு செய்யக்கூடியது. கிராமப்புறங்களிலே மட்டும் எல்லாத் தொழிலாளர்களும் இல்லை. அதுமட்டுமல்ல; இன்றைய வருவாய்த் துறையிலே—அதனுடைய விளக்கத்திற்குப் போக விரும்பவில்லை—ஏராளமான பணிச் சுமையிலே அவர்கள் இருக்கிறார்கள். உரிய காலத்திலே அரசு அறிவிக்கிற பல நல்ல திட்டங்கள், மக்களைச் சென்றடைவதிலே வருவாய்த் துறைக்கு இருக்கிற கூடுதலான பணிச் சுமையின் காரணமாகக் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. அதன் விளைவு, சில இடங்களிலே தவறுகள்கூட நிகழ்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட சுமையுள்ள ஒரு துறைக்கு, இந்த இரண்டு கோடி மக்கள் உள்ள முறைசாராத் தொழிலாளர்களுடைய பணிகளைக் கவனிக்கக்கூடிய பொறுப்பையும் கூடுதலாகக் கொடுப்பது என்பது மிகப் பெரிய சுமையை உருவாக்கும். இந்த வாரியம் எதிர்காலத்திலே செயல்படுவதிலே சில தடைகள், இடையூறுகள் உருவாகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இதில் கௌரவப் பிரச்சினையைப் பாராமல் நம்முடைய அரசு மறுபரிசீலனை செய்து, இந்த வாரியத்திலேயே தொழிலாளர் நல வாரியத்திலேயே தொடர்ந்து செயல்படுவதற்கு முன்வர வேண்டும். அது சிறப்பாக தவறுகள் இல்லாமல் செயல்படுவதற்கு என்ன வழிமுறைகள் என்பதை ஆய்வு செய்து, கூடுதலான ஊழியர்களை அந்தத் துறைக்கு நியமித்து அதைச் சிறப்பாக நடத்தலாம். இப்போதுகூட, ரேஷன் கார்டுகளில் கேஸ் சிலிண்டர் வைத்திருப்பவர்களுக்கு ஒரு முத்திரை குத்துகிறார்கள். அது இருந்தால் அவர்கள் மண்ணெண்ணெய் வாங்க முடியாது. அதைப்போல வாரியத்திலே ஒரு முறை பதிவு செய்தால் அவர்களுக்கு ஒரு முத்திரை குத்திக் கொடுத்தால் அவர்கள் இரண்டாவது முறை பதிவு செய்ய முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களில் பேசி, உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** எவ்வளவோ வழி இருக்கிறது. அரசு அதையெல்லாம் தயவுசெய்து ஆய்வு செய்து, மறுபரிசீலனை செய்து, அந்த நீதிமன்றத்திலே இருக்கிற மனுவைத் திரும்பப் பெற்று,



தொடர்ந்து தொழிலாளர் நல வாரியத்தில் செயல்பட முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இரண்டே நிமிடங்களிலே முடித்துவிடுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே சமீப காலமாக நாடாளுமன்றத் தேர்தல் வருவதைக் கவனத்திலே கெண்டு அங்கே இருக்கிற B.J.P., R.S.S. அமைப்புகள், மத வெறி செயல்பாடுகளை இன்றைக்குத் தொடர்ந்து தீவிரப்படுத்தி வருகின்றன. பல்வேறு நிகழ்வுகள் அந்த மாவட்டத்தில் நடந்திருக்கின்றன. சமீபத்திலே விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட புனிதமேரி மேல்நிலைப் பள்ளியினுடைய நிர்வாகம், அந்த ஊராட்சிக்குச் சொந்தமான ஒரு பாதையில், அந்தப் பள்ளிக்கு முன்னாலே—Arch—வளைவு ஒன்று போடுவதற்கு ஊராட்சி நிர்வாகத்தின்மூலம் முறையாக அனுமதி பெற்று அந்த Arch–ஐ அமைத்திருக்கிறது. ஆனால் அங்கிருக்கக்கூடிய மத வெறி சக்திகள், உள்ளூரிலுள்ள காவல் துறை அதிகாரிகள், வருவாய் வட்டாட்சியர் ஆகியோரின் உதவிகளைப் பயன்படுத்தி, இரவோடு இரவாக-- அவர்களுக்கு notice கொடுக்கவில்லை. (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். Notice கொடுக்கவில்லை; அதேமாதிரி அவர்களைக் கூப்பிட்டு எந்தவிதமான விசாரணையும் இல்லாமல் இரவு ஒரு மணிக்குப் போய்—பாருங்கள், ஆக்கிரமிப்பை அகற்றுவதென்றால் பகல் நேரத்தில்தான் அரசு செய்து கொண்டிருக்கிறது. நடு இரவிலே, திருட்டுத்தனமாகச் செய்வதுமாதிரி, அங்கே போய் அதையெல்லாம் இடித்து, சத்தம் கேட்டுவந்த பாதிரியார், நான்கு பெண்கள் உட்பட, தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கேயுள்ள சில காவல் துறை அதிகாரிகளும், மதவெறி சக்திகளோடு இணைந்து செயல்படுகிற நிலைமை கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறது. எல்லோரும் என்று சொல்லவில்லை. சில அதிகாரிகள் அதுபோன்று செயல்படுகிறார்கள். ஆகவே, ஒரு நோக்கத்தோடு பணியாற்றுகிற அந்த மாவட்டத்தை, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய துறையான காவல் துறை, கொஞ்சம் கூடுதலாகக் கவனித்து, இதை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் த[illegible]:** [illegible] உறுப்பினர் திரு. வை. சிவபுண்[illegible]யம். (குறுக்கீடு) இல்[illegible] ஒரு

second கூட கொடுக்க முடியாது. அதனால்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள். Conclude பண்ணுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** இன்னும் சில கோரிக்கைகள் இருக்கின்றன. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வந்த பிறகு சொல்லலாம் என்று நினைத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சரிடம் எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** நேரில் அவர்களிடத்திலே பேசியிருக்கிறேன். நிறைய நிறைவேற்றித் தருகிறார்கள். அவர்களுடைய மானியக் கோரிக்கையிலே அதையெல்லாம் அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, நேரத்தின் அருமை கருதி, என்னுடைய உரையை இதோடு முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் சொன்னதிலே ஒரு சிறிய விளக்கம். விவசாயத் தொழிலாளர்கள், சமூகப் பாதுகாப்புத் தொழிலாளர் அட்டையிலே இடம்பெற்றிருப்பவர்கள், அவர்களுக்குக் குடும்ப அட்டையை நாம் அச்சடித்துக் கொடுத்திருக்கிறோம். அதிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள், விவசாயத் தொழிலாளர் நல வாரியத்திலேயும் பயனைப் பெற்றுக்கொள்கிறார்கள். திருமணத்திற்கோ அல்லது எந்த உதவியையும் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். அதே உறுப்பினர்கள், அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியத்திலிருந்தும்—தனியாக உறுப்பினர்களுக்கென்றே தனி அட்டை கொடுத்திருக்கிறோம்—அந்தத் தனி அட்டையைப் பயன்படுத்தியும் அரசினுடைய நலத் திட்ட உதவிகளை அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். எனவே, இரண்டுவிதமாகப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். இரண்டு வாரியத்திலிருந்தும் அவர்கள் பயன்பாடு பெறுவதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த முறை பின்பற்றப்படுகிறது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) இல்லை, சிவபுண்ணியம் பேசட்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசுவதற்கு 10 நிமிடங்கள்தான் கொடுத்திருக்கிறோம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஏன்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏன் என்பதில்லை; அவ்வளவுதான். இது என்ன வம்பாக இருக்கிறது?

**திரு. வை. சிவபுண்ணியம்:** 20 நிமிடங்கள் கொடுக்கலாம். 'டக்'கென்று பேச்சே வராமல் போய்விட்டதே! சரி. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையிலே, தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த ஆறரை கோடி தமிழ் மக்களுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தைச் சிறப்புக்குரிய வகையிலே இங்கே வைத்திருப்பதற்கு நிதி அமைச்சர் அவர்களையும், அதற்குக் காரணமாக இருந்த தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். "நல்லதொரு குடும்பம், பல்கலைக்கழகம்" என்று சொல்வார்கள். அதைப்போல, நல்ல குடும்பத் தலைவனாக, சிறப்புக்குரிய வகையிலே எல்லாவிதமான அனுபவங்களையும் பெற்று, தமிழகத்தைத் திறம்பட ஆண்டுகொண்டிருக்கிற டாக்டர் கலைஞர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையை வரவும் செலவும் சமமாக வருகின்ற வகையில், வரிவிதிப்பு இல்லாத ஒரு சிறந்த பட்ஜெட்டாகத் தமிழகத்திற்கு வழங்கியிருப்பதை மனதார இந்த அவையிலே பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுக்கான கடன் வட்டி நான்கு சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. புதிய திட்டமாக, விவசாயிகள் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கக்கூடியது. மாணவர்களுக்குச் சிறப்புக் கட்டணம் இரத்து செய்யப்பட்டிருக்கிறது. இதனால், 50 இலட்சம் மாணவர்கள் பயனடைகிறார்கள். அதேபோல, தொழிற்கல்வி பயிலும் மாணவர்கள், 21 ஆயிரத்திற்கும்

மேற்பட்டவர்கள் பயனடைவார்கள் என்று சொல்வது, மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. மருத்துவக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டதற்கான நன்றியை எங்களுடைய உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதை நானும் வரவேற்று, அதற்குப் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன்.

தொகுப்பு வீடுகளுக்கு 55 ஆயிரம் ரூபாயாக அறிவிக்கப்பட்டிருப்பது வரவேற்கக்கூடியது. இது ஒரு சிறந்த திட்டம். ஆனால், நாங்கள் வலியுறுத்திக் கேட்பது, ஒரு இலட்சம் ரூபாயாக ஆக்க வேண்டுமென்று. நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருடைய தலைமையிலே இருக்கிற, விழிப்புணர்வுக் கண்காணிப்புக் குழுக் கூட்டத்திலேயே அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து, நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களே மத்திய அரசுக்கு அதைத் தீர்மானமாக அளித்திருக்கிறார்கள்; வலியுறுத்தியிருக்கிறார்கள். இது குறிப்பிட்டுச் சொல்லப்படக்கூடிய ஒன்றாக நான் கருதுகிறேன். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், திரும்பவும் இந்த அவையிலே அதைத் தெரியப்படுத்த வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். குழு வீடுகள் ஒரு இலட்சம் அளவிலே உருவாக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசிடத்திலே நாம் கோரியிருக்கிறோம். அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சி எடுக்கப்பட வேண்டுமென்று நாம் வலியுறுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-45*

அதைப்போல, மகளிர் ஆணையத்திற்குச் சட்டப்பூர்வமான அதிகாரம்; அது வரவேற்கக்கூடிய ஒன்று. அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்களுக்கு 41 சதவீதத்திலிருந்து 47 சதவீதமாக அகவிலைப் படியை உயர்த்தி, நிலுவைத் தொகை உட்பட உடனடியாக வழங்கப்படும் என்ற அறிவிப்பு மிகப் பெரிய வரவேற்பை, மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

அதைப்போல, எங்களுடைய ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று கரம்பக்குடி தனித் தாலுகாவாக அமைக்கப்பட்டிருப்பது வரவேற்கக்கூடியது. அதற்கு ஏற்கெனவே அவர் நன்றி தெரிவித்திருக்கிறார். திரும்பவும் சொல்ல வேண்டுமென்று அவர் வலியுறுத்தியிருக்கிறார். ஆகவே, மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



விவசாயிகளைப் பாதுகாப்பதற்கான எம்.எஸ். சுவாமிநாதன் குழு பரிந்துரை செய்திருக்கிறது. இதையும் நம்முடைய அரசு பரிசீலித்து, பல்வேறு திட்டங்களை இதிலே நிறைவேற்றியிருக்கிறது. கிட்டத்தட்ட 5,000 கோடி ரூபாய் வேளாண் துறைக்காகவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், நம்முடைய இந்திய நாட்டினுடைய வேளாண்மைத் துறையைப் பற்றி ஒரு புள்ளிவிவரமாகக் கணக்கெடுத்துப் பார்க்கிறபொழுது, முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே நிதி ஒதுக்கீடு என்ற முறையிலே பார்த்தால் 19.4 சதவீதமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பார்க்கிறபோது, 3.9 சதவீதமாகக் குறைக்கப்பட்டுவிட்டது. இதைப்பற்றி நாம் ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும். மத்திய அரசாங்கம் இதைப்பற்றி ஆழமாகப் பரிசீலித்து, வேளாண் துறைக்குரிய நிதி ஒதுக்கீடு குறைக்கப்படுவதைப் பரிசீலிக்க வேண்டும் என்பதற்காக நான் இதைப் பதிவு செய்கிறேன். இது குற்றச்சாட்டாக அல்ல. ஆனால், அடிப்படைத் தொழில் வேளாண் தொழில் என்று சொல்கிறபோது, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 19.4 சதவீதம்; ஆனால், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 3.9 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது என்று சொன்னால், வேளாண் துறைக்குரிய முக்கியத்துவம் இழந்து கொண்டேயிருக்கிறது. இப்பொழுது பார்த்தால், ஒரு வருடம் அல்லது இரண்டு வருடத்தில் அது 1.3 சதவீதம் அளவிற்குக் குறைக்கப்பட்டு இருப்பதாகத் தகவல்கள் வருகின்றன. இது நிரம்பவும் அபாயகரமான போக்கு. ஆகவே, வேளாண் துறைக்குரிய நிதி ஒதுக்கீடு அதிகப்படுத்தப்பட வேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

குறிப்பாக, இந்த நிலைமைகளைப் பார்க்கிறபொழுது வேளாண் உற்பத்தி செய்கின்ற அளவு என்பதும் குறைந்து வருகிறது. இது ஓர் ஆபத்தான போக்கு. நிலம் குவியலாக இருக்கிறது, நிலம் இருக்கிறது. உற்பத்தியும் அதிகரிக்கிறது. ஆனால், உணவுத் தேவையும் அதிகமாகிக்கொண்டே போகிறது. இதையெல்லாம் கணக்கிலே வைத்துப் பார்க்கிறபொழுது, இந்தக் கணக்கின்படி பார்த்தால், உற்பத்தி செய்யப்படுகிற நிலப் பரப்பின் அளவும் குறைந்து வருகிற அபாயம் ஏற்படுகிறது. இதை அவசியம் மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும். எல்லாவற்றையும் தொலைநோக்குப் பார்வையோடு சிந்திக்கிற நம்முடைய தமிழக அரசு, இதை ஆழமாகப் பரிசீலித்து உற்பத்தி செய்வது குறைக்கப்படுகிற அந்த அபாயத்தைத் தடுப்பதற்கு என்ன வழிகள் என்பதை நம்முடைய வேளாண் துறையும், நம்முடைய அரசும் தீவிரமாகச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை

எடுக்கவேண்டும்; பாதுகாக்கவேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, இப்பொழுது மத்திய அரசாங்கம் 60,000 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறது. நம்முடைய பட்ஜெட்டிலேயே அதை நாம் பாராட்டிச் சொல்லியிருக்கிறோம். இது ஒரு சிறப்புக்குரிய திட்டம்தான். ஆனால், இதிலே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது என்னவென்றால், 60,000 கோடி ரூபாயையும் மத்திய நிதி அமைச்சர் அறிவிப்பதற்குரிய காரணகர்த்தாவாக இருந்தவரே நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள்தான். இது இந்திய நாட்டிற்கே ஒரு முன்னோடித் திட்டம். இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறோம். ஆசியக் கண்டத்திலேயே இல்லாத அளவுக்கு, ஏன் உலக அளவிலேயேகூட ஒரு மாநிலத்தில் 7,000 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி, முழுமையாகத் தள்ளுபடி செய்யப்பட்ட வரலாறு என்பது, நம்முடைய தமிழகத்தில் நடந்த வரலாறு. அந்தச் சிறப்பு, நம்முடைய கலைஞர் அவர்களையேதான் சாரும். அதை அடிப்படையாகக் கொண்டு, அதை முன்னுதாரணமாகக் கொண்டு, அதை அனுபவமாகக் கொண்டு இப்பொழுது மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கிறது; வரவேற்கிறோம். ஆனாலும், இது எந்த வகையில் பயன்படுகிறது என்ற கேள்வி எழுகிறது. நான் உள்ளே செல்ல விரும்பவில்லை. இதிலே என்னுடைய கேள்வி என்பதும், இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிற முக்கியமான விஷயம் என்பதும், 7,000 கோடி தள்ளுபடி தமிழகத்திற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள்; ஆனால், மத்திய அரசு அதை ஈடுகட்டுவதற்காக இன்னும் நிதி தரவில்லை. இதை உடனடியாக . . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை இப்பொழுதுதான் வைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே தள்ளுபடி செய்த கடன் தொகையைத் தங்களுக்கு மீண்டும் தர வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசு, இதுவரை சரித்திரத்தில் இல்லாத அளவிற்கு உலக நாடுகளின் எந்தச் சரித்திரத்திலும் இல்லாத அளவிற்கு இந்தியா முழுவதும் 60,000 கோடி ரூபாய் விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறது. இதிலே நாம் ஏற்கெனவே தள்ளுபடி செய்த தொகை நமக்கு வரவேண்டும்; கிடைக்க வேண்டும்



என்று கோரிக்கை வைப்பது நியாயம். அத்தகைய கோரிக்கையை நாம் வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்; இதுவரை தமிழக அரசு கேட்டு எதுவுமே இந்த மத்திய அரசால் இல்லையென்று சொல்லப்பட்ட வரலாறு, தமிழகத்திலே இப்பொழுதுதான் நடந்துகொண்டிருக்கிறது என்பதும், அதைப்போல இந்தக் கோரிக்கையும் நிறைவேற்றப்படும் என்பதையும், நிறைவேற்றுவதற்கு தமிழகக் காங்கிரஸ் கட்சியும், சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியும் துணை நிற்கும் என்பதையும் இந்த அவையிலே பதிவுசெய்ய விரும்புகிறேன்.

பிற்பகல் 12-50

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் பீட்டர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பொதுவாக நன்றி. நான் சொல்வது என்பது - கோரிக்கையே இப்போதுதான் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார். அண்ணன் பீட்டர் அவர்களும் இணைந்துதான் அந்தக் கோரிக்கையை முன்வைத்து 7 ஆயிரம் கோடி ரூபாய் தள்ளுபடியை நீங்கள் பெற்றுக் கொடுத்து இருக்கிறீர்கள். ஆகவே, அதைக் கொடுப்பதற்குரிய முன்முயற்சி என்றவகையிலே, நம்முடைய மத்திய நிதியமைச்சர் அவர்கள் இங்கே தமிழகத்திற்கு வந்தபோது, பத்திரிகையாளர்கள் கேட்டார்கள்: "7 ஆயிரம் கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறாரே நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இதைச் செய்வதற்குரிய அந்த வாய்ப்பு தமிழகத்தில் இருக்கிறதா; அதற்கான அந்தச் சூழல் இருக்கிறதா; அதை செய்ய முடியுமா ஒரு அரசால்; நிதிநிலை இடம் தருமா என்ற கேள்விகளைக் கேட்டபோது, நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள்: "கண்டிப்பாக சாத்தியமான ஒன்றுதான். அதைச் செய்ய முடியும்" என்று. ஆகவே, அதைக் கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம் இருக்கிறது. (குறுக்கீடு) சரி, (குறுக்கீடு) இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கிறது. (குறுக்கீடு) சரி, நல்லது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன். (குறுக்கீடுகள்) நீங்கள் ஒரு senior leader. (குறுக்கீடு) ஒரு நிமிடம்தான் இருக்கிறது என்று சொல்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், அலுவல் ஆய்வுக் குழுவில் பேசிய அடிப்படையில் பேசுவதற்கு நேரம் ஒதுக்கினால், நாங்கள் பேசுகிறோம்;

இல்லையென்றால் நாங்கள் புறக்கணித்துவிட்டு வெளியே போய்விடுகிறோம். இப்படிச் சொன்னால் அதற்குச் சாத்தியமில்லை. அங்கே ஒன்று பேசுவது, அப்புறம் இங்கே வந்து குறைப்பது என்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்கு அவசியம் இல்லை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவிலே நாம் எடுத்த முடிவின்படி உள்ள நேரம் வேறு. இன்று எதிர்பாராதவிதமாக திடீரென்று, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறித்து ஒன்றேகால் மணி நேரம், நீங்கள் எல்லாம் பேசியிருக்கிறீர்கள். அதிலே திரு. சிவபுண்ணியம் அவர்கள் 10 நிமிடங்கள் பேசினார். அதையெல்லாம் நாம் கணக்கிலே எடுத்துக்கொள்வதில்லை. ஆனால், இன்றைக்குக் கடைசி நாள். எல்லோரும் பேச வேண்டும். மற்ற கட்சி உறுப்பினர்களும் பேச வேண்டும். உறுப்பினர்கள் தயவுசெய்து கோபித்துக்கொள்ளாமல் ஒத்துழைக்க வேண்டும். இரண்டு நிமிடத்தில் உங்களுடைய பேச்சை முடிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஆகவே, இந்த நிதியை தமிழக அரசுக்கு மத்திய அரசு வழங்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

குறிப்பாக, சேது கால்வாய்த் திட்டத்தைப்பற்றி இந்த அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், பாரதப் பிரதமரை நம்முடைய தமிழகத்திற்கு வரவழைத்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் பங்கேற்று, நம்முடைய பாரதப் பிரதமர் button-ஐத் தட்டி, சேது கால்வாய்த் திட்டத்தைத் தொடங்கி வைத்துவிட்டார். ஆனால், திரும்ப அந்த மத்திய மந்திரி சபை கூடிச் சொல்கிறது, அதை ஆய்வு செய்வதற்கு ஆறு ஆண்டுக் காலம் பிடிக்கும் என்கிறது. இது என்ன நிலைமை என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே, மத்திய அரசாங்கம் ஒரு தெளிவான கொள்கை நிலையில் இல்லை என்பதே சேது கால்வாய்த் திட்டம்பற்றிய கருத்தாக இருக்கிறது. இதை உடனடியாக நிறைவேற்றும் செய்வதற்குரிய முயற்சியைத் தமிழக அரசு வலியுறுத்த வேண்டும். மத்திய அரசு உடனடியாக அதை நிறைவேற்றுவதற்கான அனுமதியைப் பெற்றுத் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



தமிழக மீனவர்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக, இலங்கைக் கடற்படையினரால் துன்புறுத்தப்படுவது, துப்பாக்கிச் சூடு, இப்போது சமீபத்திலேகூட, படகுகள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன; அவர்கள் நிர்வாணப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமைகளுக்கு ஆளாகியிருக்கிற மீனவர்களுக்குரிய பாதுகாப்புபற்றி விரைவாகச் சிந்தித்து, முடிவு எடுக்க வேண்டும்.

அதேபோல, மீனவர்கள் பிடிக்கின்ற மீன்களுக்குப் பல்வேறு தடைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, கடல் அட்டை என்ற ஓர் இனத்தைப் பிடிப்பதற்கு மத்திய அரசால் தடை விதிக்கப்பட்டிருக்கிறது, அதைத் தடை நீக்கம் செய்ய வேண்டும். அதனால், 10 இலட்சம் மீனவர்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது திரும்பத் திரும்ப வலியுறுத்தப்படுகிறது. தமிழகத்திலேதான் இந்த நிலை நீடிக்கிறது. அண்டை மாநிலங்கள், அண்டை நாடுகளிலே இது பிடிக்கப்படுகிறது. ஆகவே தடையை நீக்கம் செய்வதற்கான முயற்சி எடுக்க வேண்டும்.

குறிப்பாக, மழை-வெள்ளம் பாதிப்பிற்கு நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத்தக்க ஒன்று. பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டு நிலவரி வசூல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, நிலவரி வசூல், வாய்தாவை இரத்து செய்ய வேண்டுமென்று விவசாயிகள் மத்தியிலே கோரிக்கை இருக்கிறது.

அதேபோல, கோயில், மடம் நிலங்களிலே குத்தகை சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளுடைய, அந்தக் குத்தகையைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது.

குடியிருப்பு மனைப் பட்டா வழங்குவதற்கான முயற்சியைத் தொடர்ந்து எடுக்க வேண்டும். இதிலே ஒரு ஆலோசனையாகச் சொல்வது, வீடு இல்லாதவர்களுக்கு வீடு வழங்க வேண்டும் என்ற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதை நன்கொடையாளர்கள்மூலமாக, தொழில் அதிபர்கள்மூலமாக பெறுவதற்கான முயற்சியை நம்முடைய தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன என்றாலும்கூட, காலத்தின் அருமை கருதி, இந்த நிதிநிலை அறிக்கை என்பது சிறப்பிற்குரியதாக இருக்கிறது. மேலும் தேவைகள் இருக்கின்றன.

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சி எடுக்க வேண்டியிருக்கிறது. குறிப்பாக, தமிழகத்தில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை வலுவாக வருகிறது. இதையும் நம்முடைய அரசு பரிசீலித்து, அதனைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன். Ticket எல்லாம் full ஆகிவிட்டது என்று சொல்கிறார்கள்; Air tickets. நம்முடைய உள்ளூரிலேயே பேசுவோம்! (சிரிப்பு)

***திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் பொது விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

வரவு-செலவுத் திட்டத்தின் நிறை குறைகளைப் பற்றியெல்லாம் இங்கே பேசிய பல உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வரவு-செலவுத் திட்டத்தில் முதலில் விவசாயிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது, விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு உகந்த விலை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக, தென்னை விவசாயிகளுடைய நிலை மிகுந்த அவலத்திற்கு ஆளாகி இருக்கிறது. ஒருவித நோய் தென்னையைத் தாக்கியும், கடந்த சில ஆண்டுகளாக மகசூல் குறைவாக இருப்பது மட்டுமல்லாமல் விலை குறைவாக இருப்பதும், அதற்கான செலவுகள் அதிகரித்து வருவதும், விவசாயிகளுக்குப் பேரிழப்பாக இப்போது இருந்து வருவதை யாரும் மறுக்க முடியாது. எனவே, அப்படிப்பட்ட விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டுமானால், தேங்காய்களை அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென்ற கருத்தை இந்த மன்றத்தில் நான் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் பெரும்பாலான நிலங்கள் மானாவாரி நிலங்களாக இருக்கின்றன. கையில் இருக்கின்ற பணத்தோடு, கடனை வாங்கி விவசாய விளை நிலங்களில் போடுகின்ற விவசாயப் பெருமக்கள், மழை பொய்த்துப் போவதால் மிகுந்த துன்பத்திற்கும்,



துயரத்திற்கும் ஆளாகும் நிலையைப் போக்குவதற்கு அரசாங்கமே அப்படிப்பட்ட மானாவாரி நிலங்களில், ஏழை விவசாயிகளைப் பாதுகாக்கின்ற வகையில் இலவசமாகக் கிணறுகளையும், ஆழ்குழாய்க் கிணறுகளையும் உருவாக்குவதற்கு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 15, 20 ஆண்டுகளாக மின் இணைப்பிற்காக விவசாயிகள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். மின் இணைப்பு என்பது விவசாயத்தில் இப்போது அத்தியாவசியமான ஒன்றாகிவிட்ட நிலையில், குறித்த காலத்திற்குள் விண்ணப்பித்த ஒரு சில ஆண்டுகளுக்குள் அவர்களுக்கு மின் இணைப்பு கிடைப்பதற்கு அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழகத்தில் இருக்கிற அரசுப் பள்ளிகளுடைய நிலைமை பரிதாபத்திற்கு ஆளாகி இருப்பதைப் பார்க்கிறோம். அங்கே வசதி குறைவாக இருக்கிறது. மரத்தடியில் அமர்ந்து படிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இருக்கின்ற வகுப்புகளிலும் desks, benches எல்லாம் இல்லாத ஒரு நிலைமை அங்கே இருந்து வருகிறது. அதுமட்டுமல்லாமல், பெரும்பாலான பள்ளிகளில், விடுதிகளில்— compound walls—சுற்றுச் சுவர்கள் இல்லாத நிலையைப் பார்க்க முடிகிறது. இதனால், சுகாதாரக் கேடு ஏற்படுகிறது, ஒழுக்கக் குறைவுக்கான வாய்ப்புகள் அங்கே உருவாகிவிடுவதால் இதனையெல்லாம் சரி செய்வதற்கு அரசு முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பள்ளிகளின் தரத்தை உயர்த்துவது, நிலையை உயர்த்துவது குறித்து இங்கே வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எங்கள் திருமங்கலம் தொகுதியைப் பொறுத்தமட்டிலும், நான் ஏற்கெனவே பேசியிருக்கிறேன்; பெருங்குடி, வளையங்குளம் என்ற இரண்டு கிராமங்களில் 4 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தக் கோரிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டு, அதற்குரிய கட்டணமும் செலுத்தப்பட்டிருக்கிறது. நடுநிலைப் பள்ளிகளாக இருக்கிற அந்தப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கப்பலூரில் இருக்கிற உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டிலும், மதுரை மாவட்ட மக்களின் எதிர்பார்ப்பாக இருப்பது, மதுரை மாவட்டத்தில் திருமங்கலத்திலும், மேலூரிலும், அதேபோல உசிலம்பட்டி நகரத்திலும் சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை பல ஆண்டுக் காலமாக இருந்து வருகிறது. அந்தப் பகுதி மக்களுக்கு அது மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. அதற்கு மேலாக சொல்ல வேண்டுமென்றால், மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்திற்குள் 5 சார்பு நீதிமன்றங்கள் ஒரே இடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மேலூரிலும், திருமங்கலத்திலும், உசிலம்பட்டியிலும் சார்பு நீதிமன்றங்களை அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-00*

அடுத்து, சிறப்புப் பொருளாதார மண்டலம். சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைப்பது பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமல்ல; வேலைவாய்ப்புகளையும் பெருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அப்படிச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைக்கின்றபோது, ஏழையெளிய மக்கள், சாதாரண, சாமானிய மக்கள் இன்னும் சொல்லப்போனால், விவசாயப் பெருமக்கள் எல்லாம் எந்தவித பாதிப்புக்கும் ஆளாகாத வகையில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைத்திட வேண்டும்.

வரவு-செலவுத் திட்டத்தில்கூட அப்படிக் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைக்கின்றபோது, விவசாய விளைநிலங்கள் பாதிப்புக்கு உள்ளாகாத அளவிற்குக் கவனத்தில் கொண்டுதான் அமைக்கப்படும் என்ற உறுதி இங்கே அளிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், மதுரை மாவட்டத்தில் எங்கள் திருமங்கலம் தொகுதியில் கடந்த ஓராண்டுக் காலத்திற்கும் மேலாக விவசாயிகள் மிகப் பெரிய அளவில் துன்பப்படும் சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது. மதுரை விமான நிலையத்திற்கு அருகில் பெருங்குடி, வளையங்குளம், அதேபோல எளியாபத்தி, பாரபத்தி, நெடுமதுரை போன்ற கிராமங்களிலும், திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட சோளங்குருணி மற்றும் நல்லூர் போன்ற கிராமங்களில் இருக்கின்ற விவசாய விளைநிலங்கள் ஏறக்குறைய ஆயிரம் ஏக்கர் பகுதிகளை, 120 கிணறுகள் மற்றும் 90-க்கும் மேற்பட்ட மின் இணைப்பு பம்புசெட்டுகள் உள்ளடங்கிய அந்தப் பகுதிகளைச் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்காக அரசு



நடவடிக்கை எடுத்து வருகின்றது என்கின்ற அந்தத் துயரமான செய்தியை இந்தச் சபையில் பலமுறை நான் தெரிவித்திருக்கின்றேன். அதைத் தடுப்பதற்கான போராட்டங்களையும் அங்குள்ள மக்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இங்கே சபையில் நான் பேசியது மட்டுமல்ல; அங்கே மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் அதுகுறித்து நான் விண்ணப்பித்திருக்கிறேன். ஆனால் அதுவெல்லாம் அலட்சியப்படுத்தப்பட்டு, தொடர்ந்து நிலம் எடுக்கும் நடவடிக்கை இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதற்கான போராட்டங்களை அங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன். எனவே, இப்படிப்பட்ட விவசாய விளைநிலங்களை எடுப்பதைத் தவிர்த்து, தரிசு நிலங்களாகத் தேர்வு செய்து சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வேளாண் சார்ந்த சிறுதொழில். இதில் அவர்களுக்கு வழங்கியிருக்கின்ற கடன்களை இரத்து செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். வேளாண் சார்ந்த தொழில் நடத்துகின்ற விவசாயிகள் சிலர் நசிந்து போயிருக்கின்றார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவி செய்கின்ற வகையில் கடனைத் தள்ளுபடி செய்யவில்லையென்றாலும்கூட, வட்டியையாவது தள்ளுபடி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி. உறுப்பினர், பேசுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** அதேபோல இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை வீடுதோறும் வழங்கியிருக்கிறீர்கள். தொலைக்காட்சிப் பெட்டியை வழங்குவது ஆனால் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை வழங்குவது மட்டும் அரசினுடைய குறிக்கோளாக, நோக்கமாக இருந்துவிடக் கூடாது. அந்தத் தொலைக்காட்சியைப் பார்ப்பவர்கள், அதிலே காட்டப்படுகின்ற காட்சிகளை, அந்த நிகழ்ச்சிகளைப் பார்ப்பவர்களுடைய கலாச்சாரம் சீரழிந்து போகாமல் இருக்கவேண்டும் என்பதைக் கவனத்தில் கொண்டு, அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்க விரும்புகின்றேன்.

திருமங்கலம் தொகுதியில் போக்குவரத்து நெரிசல் குறைய புதிய பேருந்து நிலையம் அமைக்கவேண்டுமென்ற கோரிக்கை நீண்டநாட்களாக இருந்து வருகின்றது. அதைக் கனிவுடன் அரசாங்கம் பரிசீலித்து புதிய பேருந்து நிலையத்தை அமைப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல முக்கியமான பிரச்சினை. ஏழை எளியவரின் இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக அறுவை சிகிச்சை போன்றவற்றுக்கு பிரதமர் நிவாரண உதவி, முதலமைச்சர் நிவாரண உதவியெல்லாம் பெறப்பட்டு வருகிறது. பிரதமர் நிவாரண உதவி கேட்டவுடன், உடனடியாக அனுப்பப்பட்டுவிடுகின்றது. அதற்கான ஆணை வந்துவிடுகிறது. ஆனால் முதலமைச்சர் நிவாரண உதவி என்பது சமீபகாலமாக மிகவும் தாமதமாகி வருகிறது. அதற்குள் அந்த நோயாளிகளுக்கு பல சங்கடங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. எனவே, இதனைக் கவனத்தில் கொண்டு, விண்ணப்பித்த குறிப்பிட்ட சில நாட்களுக்குள் அந்த ஆணையை வழங்கி, நிவாரண உதவித் தொகை கிடைப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், தனித் தேர்வாணையம் அமைக்கவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அதனுடைய பணியாளர்களுக்கு நீண்ட நாட்களாகச் சம்பளப் பட்டுவாடா செய்யப்படாமல் இருந்து வருகின்றது. மாதக் கணக்கில் மட்டுமல்லாமல், வருடக் கணக்கில்கூட சில இடங்களில் சம்பளம் கிடைக்காமல் அவர்கள் அவதிக்கு ஆளாகி வருகின்றார்கள். எனவே அவர்களையெல்லாம் பாதுகாக்கின்ற வகையில் அவர்களுக்கு சம்பளத்தை உடனடியாக பட்டுவாடா செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொது விநியோகத்தைப் பொறுத்தவரை, பல பேர் இங்கே பேசினார்கள். ஆங்காங்கே சில பகுதிகளில் அரிசி கடத்தப்படுவது பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். இந்தச் சபையில் கடந்த காலங்களில் அரிசி கடத்தப்படுவது என்பது ஒரு சமூக விரோத காரியமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. 1967-இல் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தச் சபையில் முதலமைச்சராக இருந்தபோது சொன்னார்கள். உணவுப் பொருட்களைக் கடத்துபவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் சமூகத்திற்குக் கேடு விளைவிப்பவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, "அவ்வாறு ஒரு லாரியிலே அரிசி கடத்தப்படுகிறது என்று சொன்னால், நெல் மூட்டைகள்



கடத்தப்படுகின்றன என்று சொன்னால், அது அரிசி மட்டும் கடத்தப்படவில்லை, ஆயிரக்கணக்கான உயிர்கள் அதிலே கடத்தப்படுகின்றன; இலட்சக்கணக்கான உயிர்களைப் பட்டினி போடுவதற்கான சதித் திட்டங்கள் அதிலே கொண்டு செல்லப்படுகின்றன" என்கின்ற செய்திகளையெல்லாம் இந்தச் சபையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். எனவே அப்படிப்பட்ட ஏழை விவசாயிகள், ஏழை எளியோர் வாழ்க்கையோடு போராடுகின்ற...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

*பிற்பகல் 1-05*

**திரு. வீர. இளவரசன்:** அந்தச் சமூக விரோதிகளுக்கு, அரிசி கடத்துபவர்களுக்கு எந்தத் தயவுதாட்சண்யமுமின்றி கடுமையான தண்டனை வழங்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். எனவே, வரவு-செலவு திட்டத்தைப் பொறுத்தமட்டிலும் எத்தனை திட்டங்களை நீங்கள் போட்டாலும், எத்தனை ஆயிரம் கோடிகளை நீங்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருந்தாலும்கூட, இந்தத் திட்டத்தின் பலன் என்பது இதைச் செயல்படுத்துகின்ற விதத்தில்தான் இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி நாணயமாக, நேர்மையாக, நடுநிலையோடு இந்தத் திட்டத்தை நீங்கள் செயல்படுத்தினால்தான் உண்மையான வெற்றி உங்களுக்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம் அவர்கள், 10 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வலிவும் பொலிவும் கொண்ட பொற்காலத்தைத் தமிழகத்தில் உருவாக்கி வரும் நம்முடைய கலைஞர் அவர்களுடைய அரசின் வரவு-செலவுத் திட்டம், வெறும் திட்டம் அல்ல; வசதிகளையும், வாய்ப்புகளையும் வாரி வழங்கும் திட்டம் என்று ஒரே வரியில் குறிப்பிடலாம். அண்ணா நூற்றாண்டு விழாவைத் தொடங்குவது முதல் எல்லாத் திட்டங்களும் பாராட்டுக்குரிய, புகழுக்குரிய திட்டங்களாக விளங்கிக் கொண்டிருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மின்சாரம், கூட்டுறவு, போக்குவரத்துத் துறை, நலிந்த பிரிவினர், நரிக் குறவர், அரவாணிகள், அருந்ததியினர் என்று எல்லாத் தரப்பினரும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மகத்தான இடம் பெற்றிருக்கிறார்கள். தைத் திங்கள் முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாட முடிவு செய்து இருப்பது வரவேற்கத்தக்கது.

ஆதி திராவிட விவசாயிகள் தாட்கோவிலிருந்து பெற்ற விவசாயக் கடன்கள் 5 கோடியே 50 இலட்சம் ரூபாயைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். ஆனால், நாங்கள் தொடர்ந்து வற்புறுத்துவது எல்லாம் ஏழாயிரம் கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்த நம்முடைய அரசு, ஆதி திராவிட மக்கள் வாங்கிய 70 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றோம். அந்தவகையிலே, விவசாயிகளைப் பற்றித்தானே பேசுகின்றீர்கள்; உங்கள் விவசாயி இவ்வளவுதான் வாங்கி இருக்கிறார் என்று ஐந்தரை கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து இருக்கின்ற நம்முடைய அரசு, அதைப் பரிசீலனை செய்யவேண்டும்.

27 தமிழ் அறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கப்பட்டதை மனமார வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். குறிப்பாக, அயோத்திதாச பண்டிதர் அவர்களின் நூல்களை அரசுடைமையாக்கி எங்களுடைய கோரிக்கையை ஏற்று அறிவிப்பு செய்த, நம்முடைய கலைஞர் அவர்களுக்கு நாங்கள் நன்றிக் கடன் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நாங்கள் இப்போது ஆதி திராவிட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடி வருகிறோம். ஆனால், நம்முடைய தமிழக முதல்வர் அவர்களோ, நாங்கள் பிறப்பதற்கு முன்பே ஆதி திராவிட மக்களுக்காகக் குரல் கொடுத்த தலைவர் என்பதை வரலாற்று ரீதியாக எங்களால் உணரமுடியும்.

120 புதிய அறிவிப்புகளை இந்த வரவு-செலவுத் திட்டத்திலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆனால் நேரம்தான் இல்லை. எதைப் பேசுவது, எதை விடுவது என்று தெரியவில்லை.

வேலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருப்பத்தூரை ஒரு மாவட்டமாக அமைக்கவேண்டுமென்று இதன் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறோம்.



நரிக் குறவர்களுக்கு நல வாரியம், அரவாணிகள் நல வாரியம், சித்த மருத்துவத்திற்கு வரிவிலக்கு, இப்படிப் பல நன்மைகளைச் செய்திருக்கின்ற நம்முடைய அரசு, 34 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும் இந்த ஆண்டு வழங்கவிருக்கிறது. நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய பொன் விழாவிலே, ஆயுள் தண்டனை அடைந்த கைதிகளுக்கு, 10 வருடங்களாக நாம் குறைத்திருக்கிறோம். இப்போது பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாட இருக்கின்ற இந்த வேளையிலே, ஆயுள் தண்டனை கைதிகளுக்கு, 7 ஆண்டுகளாகக் குறைக்கவேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பாக நாங்கள் பரிந்துரை செய்கிறோம்.

இங்கே பேசிய நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் அரசைப் பாராட்டி, இந்த வரவு-செலவுத் திட்டத்தை வரலாற்றுச் சிறப்புமிக்க உபரி நிதியுள்ள ஒரு வரவு-செலவுத் திட்டம் என்று புகழாரம் செய்தார்கள். நாங்களும் அதைப் பாராட்டுகிறோம்; வாழ்த்துகிறோம்.

வெள்ளச் சேதத்தினால் பாதித்த ஆடு, மாடு, பயிர்களுக்கு நாம் நிவாரணம் அளித்தோம். ஆனால், அங்கு ஆதி திராவிட மக்கள், ஒடுக்கப்பட்ட `மக்கள் குளங்களிலே, குட்டைகளிலே மீன்களை வளர்த்து வருகின்றார்கள். அந்த மீன்களும் வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கும் நாம் நிவாரணம் வழங்கவேண்டும்.

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று நம்முடைய தளபதி அவர்கள், தண்ணீர் இல்லாத அந்த மாவட்டங்களுக்குத் தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆதி திராவிட மக்களுக்கு, இந்திரா காந்தி அவர்களால் திட்ட மதிப்பீட்டிலே ஒதுக்கப்பட்ட நிதியினை நாம் எப்படிப் பராமரிக்கின்றோம்; எப்படிச் செலவு செய்கின்றோம் என்று நான் நம்முடைய முதல்வர் அவர்களைப் பார்த்து கடந்த கூட்டத் தொடரிலே கேட்டேன். அப்போது நம்முடைய மாண்புமிகு முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், இனி வருங்காலங்களிலே ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்குகின்ற அந்தப் பணத்தை வேறு ஒரு துறைக்கு நாங்கள் ஒதுக்கமாட்டோம் என்று உத்தரவாதம் அளித்து, அந்த உத்தரவாதத்தின் அடிப்படையிலே அரசாணையைப் பிறப்பித்தார்கள்.

பிற்பகல் 1-10

அந்த அரசாணை என்ன சொல்கிறது என்றால்,

"According to the guideline of the Union Planning Commission, New Delhi for formulation, implementation and monitoring of Scheduled Castes Sub-Plan and Tribal Sub-Plan, the Department concerned with the welfare and development of the Scheduled Castes/Scheduled Tribes in the State Government should be designated as 'Nodal Department for formulation and implementation of SC SP and TSP'. The Government has decided to implement the relevant portion of the guideline by making the Adi Dravidar and Tribal Welfare Department as 'Nodal Department for formulation and implementation of Scheduled Caste Sub-Plan and Tribal Sub-Plan' from annual plan 2006 and 2007."

நிதித் துறையைப் பார்த்து நான் கேட்பதெல்லாம், வரவு-செலவுத் திட்டத்திலே ஆதி திராவிடர் நலத் துறை 2005-2006 ஆம் ஆண்டு ரூபாய் 567 கோடியைக் கடந்த ஆட்சியிலே ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கி, அவர்களை வஞ்சம் தீர்த்தார்கள். நம்முடைய அரசு வந்த பிறகு, 2006-2007 ஆம் ஆண்டிலே ரூபாய் 1,085 கோடியாக உயர்த்தினோம். இப்போது 2007-2008 ஆம் ஆண்டிலே இந்தத் தொகை ரூபாய் 1,544 கோடியாக உயர்ந்திருக்கிறது. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய நிதித் துறைச் செயலாளர் அவர்கள், 2008-2009 ஆம் ஆண்டில் ரூபாய் 2,312 கோடியை ஆதி திராவிட மக்களுக்கு மத்திய அரசு கொடுக்கின்ற திட்டப் பணத்திலே கொடுத்திருக்கிறார்கள்.

நாங்கள் சொல்வதெல்லாம், நாங்கள் பிறப்பதற்கு முன்பே இந்த மக்களுக்காகப் போராடிய முத்தமிழறிஞர் கலைஞருடைய அரசிலே ஒரு சிறிய கரும்புள்ளி ஏற்பட்டிருக்கிறது. அது என்னவென்றால், 16 ஆயிரம் கோடி ரூபாயை மத்திய அரசிடமிருந்து நாம் திட்ட மதிப்பீட்டிலே பெற்றிருக்கிறோம். 16 ஆயிரம் கோடி ரூபாயைப் பெற்றிருந்த நம்முடைய நிதித் துறை, அதற்காக 3,040 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறதா? 19 விழுக்காடு ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கீடு என்றால், எப்படிக் கணக்கு போட்டு பார்த்தாலும் ரூபாய் 3,040 கோடி வருகிறது. ஆனால் நிதித் துறை மூலமாக வந்திருக்கிற பணம் 2,312 கோடி ரூபாய். எதற்காக இந்தப் பாகுபாடு? ஏன் 728 கோடி ரூபாயை நம்முடைய நிதித் துறை கம்மியாக ஒதுக்கி இருக்கிறது என்பதை இப்போது சொல்ல வேண்டாம்; பதிலுரையிலே மாண்புமிகு



நிதி அமைச்சர் பேராசிரியர் பெருந்தகை அவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

அதேபோல் 2,312 கோடி ரூபாயை Account No. 7,8,9-லே கணக்கு எடுத்துப் பார்த்தால் அதிலிருப்பது வெறும் 1,850 கோடி ரூபாய் ரூபாய். அதிலே 460 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. இதையும் பதிலுரையிலே மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்த வேண்டும். ஏனென்றால் ஏற்கெனவே வஞ்சிக்கப்பட்ட ஒரு சமூகம், இன்று இந்த சமூகம் தலை நிமிர்ந்து நிற்கிறது என்றால் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி வந்த பிறகுதான் ஆதி திராவிட மக்கள் தலை நிமிர்ந்து இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் பிறப்பதற்கு முன்பே குளித்தலையிலே சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது ஆதி திராவிட மக்களுக்காக முதன்முதலாக சட்டப் பேரவையிலே பேசியவர். பிரிட்டிஷ் அரசர்கள் அந்தப் பகுதியிலே போகும்போது—அப்போது காங்கிரசார் ஆட்சியிலே இருந்தார்கள்—திரையைப் போட்டு குடிசைகளை மறைத்தபோது குரல் கொடுத்தவர். அப்படிப்பட்டவர் அரசிலே, நம்முடைய முதல்வர் அரசிலே, இப்படித் துண்டு விழுவது ஏன் என்ற நிலையை இங்கே விளக்கிச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

என்னுடைய தொகுதியிலே பெரும்பாலான பணிகள் வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கின்றன. வெலிங்டன் ஏரிக்கு நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ரூபாய் 20 கோடியை ஒதுக்கி, அங்கே பணிகள் நடைபெறும் சூழல் இருக்கிறது. தொளாறிலிருந்து நம்முடைய வடக்குப் புத்தேரி கிராமம் வழியாக, அங்கே 1,500 ஏக்கருக்குத் தண்ணீர் போகாமல் இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், 1962 முதல் ஒரு கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள், மேல் கால்வாய் வெட்டப்பட வேண்டும் என்று. மேல் கால்வாய் வெட்டப்பட வேண்டும் என்றால், அதற்கு 3 கோடி ரூபாய் பணம் தேவை என்று நம்முடைய பொதுப் பணித் துறை அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆக, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், 20 கோடி ரூபாய் கொடுத்தவர், இன்னும் 3 கோடி ரூபாயைக் கூடுதலாகக் கொடுத்து அந்த 1,500 ஏக்கர் நிலங்களிலேயும் தண்ணீர் பாய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இலங்கைக்கு இராணுவப் பயிற்சியை நம்முடைய இராணுவம் கொடுத்து வருகிறது. ஏற்கெனவே 53 சதவிகிதம் இராணுவத்தினர்க்குப் பயிற்சி அளித்த நம்முடைய இந்திய இராணுவம் இப்போது கூடுதலாகப் பயிற்சி அளிக்கப் போவதாகச் செய்தி வந்துகொண்டிருக்கிறது.

டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் கமிட்டி அறிக்கையின் அடிப்படையிலே இப்போது கடலோரப் பகுதி மேலாண்மைத் திட்டம்—Coastal Zone Management Scheme—என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளைப் பறித்துவிடும் என மீனவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். 40 வகை மீன்களை ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்ற செய்தி கிடைத்திருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம். எனக்குக் கொடுத்தது 10 நிமிடங்கள்; நான் 1-20 மணிக்கு முடிக்க வேண்டும்; 1-14-க்கே மணி அடிக்கிறீர்களே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு எச்சரிக்கைக்காகச் சொல்கிறோம்.

**திரு. த. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல துறைகளுக்கு நாம் நிறைய நிதியை ஒதுக்கி இருக்கிறோம். வயதான காலத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று ரூ.14,000 கோடியை ரூ.16,000 கோடியாக உயர்த்தி வாங்கி வந்து இருக்கிறார்.

பிற்பகல் 1-15

ஒவ்வொரு துறைக்கும், வேளாண்மைத் துறைக்கு ரூ. 400 கோடி, பாசனத் துறைக்கு ரூ. 280 கோடி, மின் சக்திக்கு ரூ. 288 கோடி இப்படிப் பல நூறு கோடிகளை ஒதுக்கி இருக்கின்ற நம்முடைய அரசு, ஆதி திராவிடர் நலத் துறைக்கு வெறும் ரூ. 60 கோடியை ஒதுக்கி இருக்கிறது. இதை நீங்கள் அதிகமாக உயர்த்தித் தர வேண்டும். இது ஒரு மிகப் பெரிய சமூகம். 2,000 ஆண்டுகளாக முன்னுக்கு வராமல் இருக்கின்ற இந்தச் சமூகத்தில் நிதித் துறையின் கடைக்கண் பார்வை பட வேண்டும். ஆக, நான் இங்கே படிக்க இருந்ததை, பேச இருந்ததை எல்லாம் அவைக் குறிப்பிலே ஏற்ற வேண்டும். அனைத்தையும் நான் பேரவைத் தலைவரிடம் கொடுக்கிறேன் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த்.*

***திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே என்னைப் பங்குபெற வைத்த விருத்தாசலம் மக்களுக்கு நான் என்றைக்குமே நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். அண்மையில், கன மழை காரணமாக முந்திரி, நெல், கரும்பு போன்ற பயிர் வகைகள் நிரம்ப நஷ்டமடைந்து இருக்கின்றன. அதற்குப் பாகுபாடு பார்க்காமல், பாரபட்சம் இல்லாமல், தகுந்த நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விருத்தாசலம் நகரம் மிகவும் பழமை வாய்ந்த நகரம். அதைப் பாரம்பரியம் மிக்க நகரமாக, அதாவது Heritage Town ஆக மாற்ற வேண்டும் என்று ஏற்கெனவே நான் முதலமைச்சர் அவர்களிடம் கடிதம் கொடுத்து இருக்கிறேன். அதற்கு அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், விருத்தாசலத்தில் எப்போது பார்த்தாலும் மின்சாரம் அடிக்கடிப் போவதற்குக் காரணம் அந்த மின் கம்பிகள்—wire-கள்—நிரம்ப பழமையானதாக இருக்கின்றன. அவற்றை உடனடியாக மின்சாரத் துறை அமைச்சர் மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், விருத்தாசலம் தொகுதியில் ஒரு hospital இருக்கிறது. ஒரு இலட்சம் மக்களுக்கு மேல் வைத்தியம் பார்க்க வருகிறார்கள். அந்த hospital-ஐ விரிவுபடுத்த நிலத்தைத் தனியாரிடமிருந்து கையகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். அது அரசுக் கோப்பிலேயும் இருக்கிறது. கிட்டத்தட்ட 1.25 ஹெக்டேர் நிலம் தனியாரிடம் இருக்கிறது. இன்றைக்கு அரசாங்கம் கிட்டத்தட்ட 1½ கோடி ரூபாய்க்கு உபகரணங்கள் கொடுத்தும் அவற்றை வைக்க முடியாத சூழ்நிலைதான் அந்த hospital-இல் இருக்கிறது. ஆகவே தனியாரிடமிருந்து அந்த இடத்தை வாங்கிக் கொடுத்தால், அது விருத்தாசலம் மக்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

அதேபோல, மங்களம்பேட்டையிலே ஒரு bus stand அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். ஒரு I.T.I. தொழிற்கல்விக்கூடமும் அமைக்க வேண்டும் என்று

கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் என்னுடைய தொகுதியில் பல பணிகளுக்கு முழுமையாக ஒதுக்கீடு செய்துள்ளேன். இருப்பினும், விருத்தாசலம் நகராட்சியின் ஒத்துழையாமை காரணமாக, அந்தப் பணிகள் நகரில் தேங்கிக் கிடக்கின்றன. அதை நிறைவேற்ற அரசு உரிய நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி, நான் தொகுதிக்குப் போகும்போதெல்லாம் அங்கே இருக்கிற பள்ளிகளுக்குச் செல்கிற மாணவர்களின் பெற்றோர்கள் எல்லாம் சொன்னார்கள்: “அங்கே அதிகமாக accident நடக்கிறது; விபத்து நடப்பதால், அதை எப்படியாது தடுத்து நிறுத்துங்கள்; இல்லையென்றால், விபத்துத் தடுப்புச் சுவராவது நீங்கள் M.L.A. என்ற முறையிலே கொடுங்கள்” என்று சொன்னதற்காக நான் barricade–ஐச் செய்து வைத்துக் கிட்டத்தட்ட 1½ வருடமாகிறது. முறைப்படி D.G.P.-யிடம் நான் கடிதமும் கொடுத்தேன். இதுவரையிலும் அதைப் பயன்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பட்ஜெட் உபரி பட்ஜெட்டாக உள்ளது. அதுவரையிலும் சந்தோஷம்தான். ஆனால் மத்திய அரசிடம் இருந்து கடந்த 2006-2007 ஆம் ஆண்டைவிட, 2007-2008-ல் சுமார் 5,000 கோடி ரூபாய் கூடுதலாக நிதி உதவி பெறப்பட்டது. ஆனால், 2008-2009 ஆம் ஆண்டில் கூடுதலாக ரூ.800 கோடி மட்டுமே கணக்கிடப்பட்டுள்ளது. மத்திய அரசின் உதவி குறைந்ததற்கான காரணத்தை அறிய விரும்புகிறேன்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அரசின் மூலதனச் செலவைப் பொறுத்தே அமைகிறது. மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் மூலதனச் செலவு 3 சதவிகிதத்திற்குக் குறையக்கூடாது என்றும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 1990-களில் 1 சதவிகிதத்திற்குக் குறைவாக இருந்தது என்றும், இப்போதும் 3 சதவிகிதத்தை எட்டவில்லை என்றும் 12-வது நிதிக் குழு கூறி உள்ளது. இந்தியாவின் சராசரி பொருளாதார வளர்ச்சி விகிதத்தைவிட தமிழ்நாடு அரசின் சராசரி வளர்ச்சி விகிதம் இந்தக் காலக்கட்டத்தில் குறைந்து வந்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் மூலதனச் செலவை அதிகரிக்க வேண்டும். ஆனால் தற்போதைய ஒதுக்கீடு, 3 சதவிகிதத்தைக்கூட எட்டவில்லை. இது தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்காதா என்பதை நிதி அமைச்சர் விளக்க வேண்டுகிறேன்.



பிற்பகல் 1-20

மத்திய அரசுப் பணியாளர்களுக்கு 6-வது சம்பளக் கமிஷன், சம்பள உயர்வுக்குப் பரிந்துரை செய்துள்ளது. மத்திய அரசு அதை ஏற்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. அதனையொட்டி மாநில அரசுப் பணியாளர்களுக்கும் ஊதிய உயர்வும் மற்றும் பிற சலுகைகளும் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வோர் ஆண்டும் நிதிநிலை அறிக்கையின்போது நாம் பார்க்க வேண்டியது தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் ஆண்டுதோறும் உயர்ந்து வருகிறதா என்பதுதான். கடந்த சில மாதங்களாக ஏறிவரும் விலைவாசி உயர்வின் காரணமாக வாழ்க்கைத் தரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைத் தரம் உயராவிட்டாலும் பரவாயில்லை, வாழ்க்கைத் தரம் குறைந்து வருகிறது என்பதுதான் அதிர்ச்சி தரத்தக்க விஷயமாகும். விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்டுள்ளது ஏழை மக்கள் மட்டும் அல்ல; நடுத்தர மக்களும்தான். அன்றாடம் பயன்படுத்தும் அரிசி, பருப்பு, எண்ணெய் போன்றவற்றின் விலைகள் உயர்ந்துள்ளதால், குடும்பத்தின் செலவு சுமார் 50 சதவிகிதம் அதிகரித்துள்ளது. 3,000 ரூபாய் வருமானம் உள்ளவர்கள், இன்று 4,500 ரூபாய் செலவு செய்ய வேண்டியுள்ளது. ஏழைகளைப் பொறுத்தவரை இந்தக் கூடுதல் குடும்பச் செலவு காரணமாக என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றனர். அரசுக்குப் பற்றாக்குறை என்றால் மக்கள் மீது வரி போடலாம். அல்லது உலக வங்கி மற்றும் இதர வங்கிகளிடமிருந்து கடன் பெறலாம். அல்லது மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதியுதவி பெறலாம். மத்திய அரசு, தேவையானல் ரிசர்வ் வங்கிமூலம் ரூபாய் நோட்டுக்களை அச்சடிப்பதன்மூலம் பற்றாக்குறையைச் சரி செய்யலாம். ஆனால், பாமர மக்கள் குடும்பச் செலவை சரி கட்ட யாரிடமாவது கடன்தான் கேட்க வேண்டும். அதுவும் கிடைக்காது. வங்கிகளிடம் கடன் வாங்க வேண்டுமானால் அவர்கள் collateral security கேட்கிறார்கள். அதற்கு அவர்கள் எங்கே போவது? இதன் விளைவாக அவர்கள் தங்களுடைய வாழ்க்கைச் செலவைக் குறைப்பதைத் தவிர வேறு வழியில்லை. 3 வேளைச் சாப்பிடுபவர்கள் 2 வேளையாகவும், 2 வேளைச் சாப்பிடுபவர்கள் ஒரு வேளைக்கும் வரவேண்டி இருக்கும். மேலும், சத்துள்ள உணவுப் பண்டங்களைத் தவிர்க்க வேண்டி வரும். இதனால் பிறந்த குழந்தைகளின் இறப்பு விகிதம் குறையப்போவதும் இல்லை; பேறு காலச் சாவுகளும் தாய்மார்களை விட்டும் வைக்காது. இந்த நிதிநிலை அறிக்கையில் மக்களின் வாழ்க்கைச் சுமையைக்

சாதாரண மக்கள் பயன்படுத்தும் பஸ் செலவும் இப்போது அதிகரித்து விட்டது. ஏற்கெனவே, சாதாரண பஸ்கள் நிறைய விடப்பட்டன. ஆனால், இப்போது சாதாரண பஸ்கள் அடிக்கடி வருவது இல்லை. சென்னை மாநகரில் வெறும் *100* சாதாரண பஸ்கள்தான் கூடுதலாக்கப்பட்டுள்ளன. இவை போதாது. இந்த பஸ்கள் எத்தனை தடவை இயக்கப்படுகின்றன என்பதே கேள்வி. பஸ் நிலையத்தில் வெள்ளை பஸ்கள் வராதா என்று பயணிகள் காத்துக் கிடப்பதுதான் மிச்சம். மேலும், போகின்றபோது சாதாரண பஸ்களாக...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர். (குறுக்கீடு)

**திரு. விஜயகாந்த்:** மேலும், போகின்றபொழுது சாதாரண பஸ்களாக போகின்ற பஸ்கள், வருகின்றபொழுது போர்டு மாற்றப்பட்டு விரைவு பஸ்களாகவும், எம். சர்வீஸ்களாவும் ஆக்கப்படுவதால் அதே ரூட்டில், அதே பஸ்களுக்கு, அதே. . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இரண்டு முறை அவர்களுக்குப் பத்திரிகைகளிலே அறிக்கை வாயிலாகப் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும், மீண்டும் மீண்டும் அதையே வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் மொத்தம் *3,084* மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இருக்கின்றன. அவற்றிலே *309* பேருந்துகள் மாற்றுப் பேருந்துகளாக (Spare buses) இருக்கின்றன. சாதாரண கட்டணத்தில் ஓடக்கூடிய பேருந்துகள் ஏற்கெனவே இருந்ததை போல இப்போதும் *856* பேருந்துகள் ஓடுகின்றன. 'M' சர்வீஸ் என்று, இரண்டு இடங்களிலே நின்று போகின்ற அந்தப் பேருந்துகள் *506* பேருந்துகள் ஓடுகின்றன. L.S.S.—Limited Stop Service என்ற வகையிலே *735* பேருந்துகள் ஓடுகின்றன. இதற்குப்பிறகுதான் எக்ஸ்பிரஸ் என்று வந்தது. டீலக்ஸ் என்பது *309*, வால்வோ *10*, எக்ஸ்பிரஸ் பேருந்துகள் *243* மட்டும்தான் அதிகக் கட்டணத்தில் இப்போது புதியதாக விடப்பட்டிருக்கிற பேருந்துகள். புறப்படுகின்ற இடத்திலிருந்து அந்த வெள்ளை போர்டு போட்டால் கடைசியில் சேரும்வரை வெள்ளை போர்டுதான். எந்தப் பேருந்திலும் போர்டுகளை மாற்றி, காசை ஏற்றவில்லை. இதற்கு நானே பொறுப்பேற்றுக்கொள்கிறேன். இதை அடிக்கடி சொல்லியும்கூட, அவர்கள் மீண்டும் மீண்டும் பேருந்துகளில் அதிகக்



கட்டணம் வசூலிக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கடைசியில் சேரும்வரை எந்த ஒரு கட்டணம்கூட (குறுக்கீடு) முன்னாள் அமைச்சர், கொஞ்சம் உட்காருங்கள். அப்புறம் பேசுங்கள். இப்போது அங்கேயிருந்து முன்னாள் அமைச்சர் சொல்கிறார்கள். இந்தக் கட்டணம் என்பது, ஒரு தடவைகூட நாங்கள் போட்ட கட்டணம் அல்ல. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் கட்டணத்தை நிர்ணயித்தது நாங்கள் அல்ல. கட்டணங்களை நிர்ணயித்தது கடந்தகால ஆட்சியிலேதான். கடந்த ஆட்சியிலேதான் கட்டணத்தை நிர்ணயித்தார்கள். ஆனால், அந்தப் பேருந்துகளை அவர்கள் ஓட்டவில்லை. நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். கடந்த கால ஆட்சியிலே கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் புதிய பேருந்துகளை அவர்கள் ஓட்டவில்லை. கடந்த ஆட்சியில் கட்டணத்தை நிர்ணயித்த பிறகு புதிய பேருந்துகள் வாங்கி அதே கட்டணத்தில் நாங்கள் இயக்கிக் கொண்டிருக்கிறோம். இந்த ஆட்சி ஏற்பட்ட நாளிலிருந்து ஐந்தாவது முறையாகத் தலைவர் பொறுப்பேற்ற பிறகு ஒரு பைசாகூட இந்த தி.மு.க. அரசு கட்டணத்தை ஏற்றவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. விஜயகாந்த்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பத்திரிகை வாயிலாகவும், நேரிலும் சொல்லியிருக்கிறார். ஆனாலும், நான் சொல்ல வேண்டியதை சொல்லவேண்டிய கடமைக்காகச் சொல்கிறேன். அதாவது போன ஆட்சியிலே இருந்ததைவிட ஏற்றவில்லையென்று சொல்கிறார். ஆனால் அந்த அரசாணை எண் *707*-ல். . .

**HON. SPEAKER:** One minute.-ல் உரையை முடியுங்கள் (குறுக்கீடு)

*பிற்பகல் 1-25*

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான செய்தியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எத்தனை முறை திரும்பத் திரும்பச் சொன்னாலும் அது நிச்சயமாகத் தவறான செய்திதான். காரணம், கடந்த ஆட்சியில்—இந்த ஆட்சியில் கட்டணம் மாற்றப்படவில்லை, அதை ஒத்துக்கொள்கிறோம். மேசையைத் தட்டும் ஒலி—ஆனால், கடந்த ஆட்சியில் சிறப்பு (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் சொல்ல வருவது புரியவில்லையா? (குறுக்கீடுகள்) கட்டணம் மாற்றப்படவில்லை. ஆனால், குறுக்கு வழியில் இன்றைக்குக் கட்டணத்தைக் கூட்டியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** முன்னாள் மந்திரிக்குத் தெரியும், மந்திரியாக இருந்தவருக்குத் தெரியும், குறுக்கு வழியிலே எல்லாம் பஸ்ஸை ஓட்ட முடியாது. மந்திரிக்குத் தெரியும். (சிரிப்பு) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த்.

**திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மந்திரி அவர்கள் சொன்ன. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிக்கொண்டேயிருக்கிறாரே?

**திரு. விஜயகாந்த்:** மந்திரி அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். இருந்தாலும், நான் சொல்ல வேண்டியதைச் சொல்கிறேன். 'M' சர்வீஸ்களாக ஆக்கப்படுவதால், அதே ரூட்டில், அதே பஸ்களுக்கு, அதே ஸ்டேஜுகளுக்கு இரு மடங்குக் கட்டணங்கள் செலுத்த வேண்டி வருகிறது என்பது என் குற்றச்சாட்டு. வழித் தடங்களில் வரும்போது அந்த பஸ்களுக்குத் தகுந்தபடி கட்டணம் நிர்ணயிக்கப்படுகின்றது என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையில் தெரிவித்துள்ளார். பிரச்சினையே அதுதான். கட்டணங்கள் உயர்த்தப்படவில்லை என்று ஒருபுறம் சொல்லிவிட்டு, மறுபுறம் பஸ்களின் வகைகளை அதிகப்படுத்தி, அதற்கேற்ப கட்டணங்களைக் கூடுதலாக அரசு வசூலிக்கிறது. இதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மறைமுகமாக ஒப்புக்கொள்கிறார்கள். சாதாரண பஸ்களுக்கு. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே மறைமுகக் கட்டண உயர்வோ, ஒளிவுமறைவோ கிடையாது. நான் உங்களிடம் நேராகவே சொல்கிறேன். ஏற்கெனவே கடந்த ஆட்சிக் காலத்தில் கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டு, அந்தப் பேருந்துகளை அவர்கள் விடவில்லை. அந்தப் பேருந்துகளை வாங்கி இப்போது நாங்கள் இயக்கி வருகிறோம் மொத்தம் மூவாயிரத்து. . . (குறுக்கீடுகள்)

**திரு. வி.பி. கலைராஜன்:** தலைவர் அவர்களே. . .

**திரு. ஆர். சின்னசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே. . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** திரு. சின்னச்சாமி, பாருங்கள்; நான் உங்களைவிட வேகமாகச் சத்தம் போடுவேன். உங்களைவிட வேகமாகச் சத்தம் போடுவேன். 'நீங்கள் செய்யவில்லை' என்று சொல்கிறோம். 'நாங்கள் செய்திருக்கிறோம்' என்று நீங்கள் சொன்னால், அதற்கான ஆதாரத்தைக் கொடுங்கள், நாங்கள் ஒத்துக்கொள்கின்றோம். அதை விட்டுவிட்டு நீங்கள்—அவரே சொல்கிறார், நாங்கள் கட்டணத்தை ஏற்றவில்லை என்று—அப்புறம் போய் அங்கே நின்று கத்தினால் எப்படி? முதலில் நான் அவருக்குப் பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போது நீங்கள் குறுக்கே எழுந்தால் எப்படி? (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள்; அவருக்குப் பதில் சொல்லிக்கொண்டு வருகிறேன்; அப்புறம் நீங்கள் பேசுங்கள். நீங்கள் பேசும்போது சொல்லுங்கள்; நான் பதில் சொல்கிறேன். மொத்தம் இருக்கிற 3,000 பேருந்துகளிலே சிறப்புக் கட்டணம் என்று போட்டிருப்பவை வெறும் 600 பேருந்துகள்தான். மீதமுள்ள 2,400 பேருந்துகள் முழுமையாகப் பழைய கட்டணத்தில்தான் ஓடிக்கொண்டிருக்கின்றன.

**திரு. விஜயகாந்த்:** சாதாரண பஸ்களுக்குப் பதிலாக சொகுசு பஸ்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. 'கலர், கலராக பஸ்களை விட்டு கட்டணத்தையும் ஏற்றிவிட்டதாகச் சொல்வது தவறு' என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். ஆனால், 26-3-2008 அன்று சட்டமன்றத்தில் வைக்கப்பட்ட மாநகரப் போக்குவரத்துக் கழகம் குறித்த அரசின் ஆய்வறிக்கையில், சுமார் 20 கோடி ரூபாய் கூடுதலாக வருமானம் பெறப்பட்டுள்ளதாகவும், மஞ்சள் பஸ், நீல பஸ், சொகுசு பஸ் போன்ற பஸ்களை அறிமுகப்படுத்தியதை ஒரு காரணமாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மொத்த பஸ்களில் எத்தனை பஸ்கள் சாதாரண பஸ்கள், எத்தனை பஸ்கள் இதர வகையான பஸ்கள் என்ற—(குறுக்கீடு) இல்லை, சொல்லிவிட்டீர்கள், சொல்லிவிட்டீர்கள்—விவரத்தையும், ஒவ்வொரு பணிமனையிலேயும் எவ்வளவு வசூல் அதிகரித்துள்ளது என்ற விவரத்தையும் அரசு பெற்றாலே இந்த உண்மை புரியும்.

2007 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் தேதி வெளியிடப்பட்ட உள் துறை (போக்குவரத்து) அரசாணை 707-ல் ஸ்டேஜுகள் அதிகரிக்கப்பட்டது மட்டுமல்ல; அந்த ஸ்டேஜுகளுக்குக் கட்டண உயர்வுகளும் கூடுதலாக்கப்பட்டுள்ளன. மேலும் அந்த

அரசாணையின்கீழ் வராமலும், எந்த அரசாணையின்கீழ் வராமலும் M-Service, SSS Service, TSS Service, Non stop service போன்ற பஸ்களும் அறிமுகப்படுத்தப்பட்டு, கட்டண உயர்வுகளுடன் இயங்குகின்றன. கட்டண உயர்வு என்றால் அதை முறைப்படி பொதுமக்களின் கருத்தை அறிந்து அதற்குப் பின்னரே அரசாணை வெளியிட வேண்டும். விருப்பம்போல கலர் கலரான பஸ்களை அறிமுகப்படுத்தி, இஷ்டம்போல போக்குவரத்துக் கழகம் கட்டணம் நிர்ணயம் செய்வது, அரசே சட்டத்தை மீறுவது ஆகாதா? பாமர மக்கள் தங்கள் போக்குவரத்துக்கு நம்பியிருப்பது பஸ்களைத்தான். அதனால்தான் அரசு, பஸ்களை தேசியமயமாக்கியது. ஏழைகள் பயணம் செய்யும் வகையில் சாதாரண பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமே தவிர, சொகுசுப் பேருந்துகள் என்ற பெயரில் அவர்களின் போக்குவரத்துச் செலவை அதிகரிப்பது நல்ல கொள்கை ஆகாது. குறிப்பிட்ட நேரத்தில் செல்லுதல், விரைவாகச் செல்லுதல், வசதியோடு செல்லுதல், (punctuality, speed, comfort) ஆகிய இவை அனைத்தும் அரசின் செலவில் பயணிகளுக்குச் செய்து கொடுக்க வேண்டுமே தவிர, அதற்காக விசேஷக் கட்டணம் வசூலிப்பது முறையாகாது. அரசு தனது போக்கை மாற்றி ஒரே சீரான கட்டணங்களை வசூலிக்குமானால், சாதாரண மக்களின் வயிற்றில் பால் வார்த்ததுபோல் இருக்கும்.

இந்தச் சட்டமன்றம் கூடுவதற்குச் சில நாட்களுக்கு முன்பாகத்தான் பால் விலை அரசினால் உயர்த்தப்பட்டது. அதற்குக் காரணங்களும் சொல்லப்பட்டன. சாதாரண குழந்தைகள் மட்டுமின்றி, குடும்பத்திலுள்ள பெரியவர்களும் தினந்தோறும் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருள் பால் என்பது அனைவரும் அறிந்ததே. "பால் உற்பத்தியாளர்களுக்குக் கூடுதல் விலை கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது..." (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. விஜயகாந்த், உங்களுக்கு 15 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன், பேசியிருக்கிறீர்கள். 15 நிமிடங்கள். ஆகிவிட்டன உரையை முடியுங்கள் சீக்கிரம்.

**திரு. விஜயகாந்த்:** "அதனால்தான் பால் உற்பத்தியாளர்களுக்கு நாங்கள் விலையைக் கூட்டுகிறோம். இரண்டு ரூபாய்; அதனால் ஆவினுக்கு நஷ்ட ஈடு நூறு கோடி ரூபாய் ஆகிறது" என்கிறார்கள்.



சாதாரணமாக ஒரு அரசு பட்ஜெட் 65 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்குப் போடுகிறபோது, அதில் 100 கோடி ரூபாயை மானியமாகக் கொடுப்பது ஒரு பெரிய விஷயம் அல்ல. அதைவிட மானியமாகத் தற்போது 15,000 கோடி ரூபாய் கொடுக்கிறீர்கள். ஒரு நூறு கோடி ரூபாயைக் கொடுத்து, அதை மக்களுக்கு விலையை ஏற்றவிடாமல், அந்த நூறு கோடி ரூபாயை மானியமாக நீங்கள் கொடுத்திருந்தால், நிரம்ப நல்லாயிருக்குமே என்பதுதான் என்னுடைய கருத்து. அதை உடனடியாக அரசு பரிசீலித்து மீண்டும் பால் விலையைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியம் வீடுகளுக்கு முன்பு, மாதா மாதம் current bill கணக்கெடுத்தார்கள். இப்போது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை current bill கணக்கெடுக்கிறார்கள். அப்படி இரண்டு மாதத்திற்கு ஒரு முறை current bill கணக்கெடுக்கும்போது 500 unit-க்கு 900 ரூபாய் என்று (குறுக்கீடு) இல்லையண்ணே! நான் சொல்லிவிடுகிறேனே? வேகமாகப் பேசி. . . (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** எப்போதுமே இரண்டு மாதங்களுக்கு ஒரு முறைதான் கணக்கெடுக்கப்படுகிறது. எப்போதுமே இரண்டு மாதங்களுக்கு ஒரு முறைதான் கணக்கெடுக்கிறார்கள்.

**திரு. விஜயகாந்த்:** அதுதான். முன்னே ஒரு மாதம் இருந்தது. இப்போது இரண்டு மாதம். சரி, இரண்டு மாதம் என்றே வைத்துக்கொள்வோம். அது ஒருவேளை எனக்குத் தெரிந்து ஒரு மாதம். சரி இரண்டு மாதம் என்று வைத்தால்கூட. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மாதக் கணக்கு வந்து நிரம்ப நாட்கள் ஆகின்றன.

**திரு. விஜயகாந்த்:** அன்றைக்கு என்ன problem என்றால், இரண்டு மாதத்திற்கு நாம் கணக்குப் போட்டதற்குக் காரணம், அன்றைக்கு வேலையாட்களில்லாததனால். இன்றைக்குக் கணினிமயம்— கம்ப்யூட்டர் மயமாகிவிட்டது. அதன்படி 500 unit-க்கு 900 ரூபாய் என்கிறபோது, 1000 unit-க்கு 1,800 ரூபாய்தான் வரும். ஆனால் வசூல் செய்யும்போது கிட்டத்தட்ட அவர்களுக்கு 2,340 ரூபாய் அளவிற்கு அவர்களின் சுமை அதிகமாகிறது. அந்தச் சுமையைத்தான் நான்

குறைக்கச் சொல்கிறேன். இப்போது கணினிமயமானதனால், நீங்கள் ஏன் மாதா மாதம் என்று கொண்டுவரக்கூடாது? இல்லையென்றால், இந்த 500 unit–க்கு என்ன fix செய்கிறார்களோ, அதையே அடுத்த 500 unit–க்கும் fix பண்ணுங்கள் என்று நான் சொல்கிறேன். இப்போது மக்கள் அதிகமான தொகையை current bill–க்குக் கட்டுகிறார்கள். Current இன்றைக்கு இன்றியமையாத தேவையாகவுள்ளது. Current எப்போது வரும், எப்போது போகும் என்று தெரியவில்லை. இதனால் பெரிய பெரிய தொழிற்சாலைகள் பாதிக்கப்படுகின்றன. ஆனால் நான் இங்கு வந்து சட்டமன்றத்தில் இருக்கும்போது பார்த்தால், போன ஆட்சியைக் குறைகூறுவது, போன ஆட்சியினர் இந்த ஆட்சியைக் குறைகூறுவது, இவையெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை. மின் தட்டுப்பாடு எப்போது தீரும் என்பதை தயவுசெய்து மின்துறை அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* இதோ ஒரே நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறையப் பக்கங்கள் வைத்திருக்கிறீர்களே?

**திரு. விஜயகாந்த்:** இல்லை, இது நல்ல விஷயம். மக்களுக்கான விஷயங்களைத்தான் நான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. விஜயகாந்த்:** தமிழ்நாட்டில் இன்னும் பல பிள்ளைகள் பள்ளிகளுக்குச் செல்லாமல் ஓட்டல்களில் வேலை செய்கிறார்கள். Workshop-ல் வேலை செய்கிறார்கள். கட்டுமானப் பணிகளில் வேலை செய்கிறார்கள். பெண் பிள்ளைகளைச் சொந்த வீடுகளைக் கவனிக்க வைத்துக்கொள்கிறார்கள்; அல்லது இதர வீடுகளில் வேலை செய்ய அனுப்புகிறார்கள்; கிராமப்புறங்களில் விவசாய வேலைகளிலும், மற்றும் ஆடு மாடு மேய்க்கவும் ஈடுபடுத்தப்படுகிறார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறுவர்கள், பெங்களூரு ஓட்டல்களில் வேலை செய்கிறார்கள் என்றும் செய்திகள் வருகின்றன. 11-வது ஐந்தாண்டுத் திட்ட அணுகுமுறை அறிக்கையில் இந்த நிலையை உணர்ந்துதான் மாநிலத்தின் மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கினர் இன்னும் எழுத்தறிவு அற்றவர்களாகவே உள்ளனர் என்றும், பள்ளி மாணவர்கள், குறிப்பாக சிறுமியர், பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிடும் விகிதம் ஒரு முக்கியமான பிரச்சினையாகும் என்றும் குறிப்பிட்டுள்ளது. அதேபோல டாக்டர் ச. முத்துக்குமரன் அவர்கள் சமச்சீர்க் கல்விக்



குழு அறிக்கையில் பத்தி 3.2.7.2-ல், அனைத்து மாணவர்களும் 8 ஆண்டுகள் சமச்சீர்க் கல்வித் திட்டத்தில் கல்வி கற்பதை உறுதி செய்ய, பள்ளி இடைநிறுத்தத்திற்கான காரணிகள் கண்டறியப்பட்டு, அவற்றினை நேர்படுத்த சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தில் பல புதிய செயல்பாடுகள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிக்கிறது. பள்ளிப் படிப்பு இடைநிற்றல் என்பது ஒரு முக்கியப் பிரச்சினை என்று திட்டக் குழுவும், அதற்கான காரண காரணிகள் கண்டறியப்பட்டு, சிறப்புத் திட்டம் வகுக்கவேண்டும் என்றும், சமச்சீர்க் கல்விக் குழு தெரிவித்த அறிக்கையின் அடிப்படையிலே அந்தப் பிரச்சினையை நான் எழுப்பினேன். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 8 ஆம் வகுப்பு வரை, கடந்த மூன்று ஆண்டுகளில் உள்ளவற்றைப் புள்ளிவிவரங்களிலே தொகுத்து அளித்துள்ளார். அதன்படிப் பார்த்தால், இடைநிற்றல் வெறும் 2.4 சதவிகிதம் என்றும், இடைநிற்றலே இல்லை என்றும் ஆகிறது. இதில் எந்தப் புள்ளிவிவரத்தை நம்புவது என்பதே என் கேள்விக்கணையாகும். திட்டக் குழு உறுப்பினர் பேராசிரியர் சீனிவாசன் அவர்கள் அளித்த புள்ளிவிவரத்தை நான் சொன்னபோது அகில இந்திய புள்ளிவிவரம் என்றுதான் அவர் சொன்னதாக முதலமைச்சர் தெரிவித்தார். அவரிடமிருந்து தமிழ்நாட்டுப் புள்ளிவிவரத்தைக் கேட்டுப் பெற்றிருக்கலாம். திட்டக் குழு எந்த அடிப்படையில் இடைநிற்றல் என்பதை ஒரு முக்கியப் பிரச்சினை என்று கருதியது? டாக்டர் முத்துக்குமரன் குழு அறிக்கையில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிற்றல் . . . *(குறுக்கீடு)* இல்லை, நீங்கள் முடித்திருக்கவேண்டும்! நீங்கள் திரும்பக் கேட்கிறீர்களே? அதற்குத்தான் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விஜயகாந்த், பேசி முடியுங்கள் சீக்கிரம்.

*பிற்பகல் 1-35*

**திரு. விஜயகாந்த்:** டாக்டர் முத்துக்குமரன் குழு அறிக்கையில் பக்கம் 9-10-ல் பத்தி 2.2.1-ல், 2005-2006 ஆம் ஆண்டிற்கான விவரங்கள் தரப்பட்டுள்ளன. அதன்படி, தொடக்க நிலையில் சுமார் 64,00,000

மாணவர்கள் சேர்கின்றனர். 8 ஆம் வகுப்பு வரும்போது 36 இலட்சமாக மாறுகிறது. 10 ஆம் வகுப்பில் 19 இலட்சமாகக் குறைந்து 12 ஆம் வகுப்பில் 11 இலட்சம் என்று ஆகிறது. கடந்த 2 ஆண்டுகளில் மேற்கூறிய விவரங்களைப்பற்றி அரசு அறிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன். பள்ளி இடைநிற்றலுக்குக் காரண, காரணிகளைக் கண்டறியவேண்டும் என்று அப்பொழுது கூறியுள்ளது என்னைப் பொறுத்தவரையில் பள்ளிக்கு வரவேண்டிய பிள்ளைகள் இன்னும் எவ்வளவோ பேர் படிக்காமலே உள்ளனர்; கிராமப்புற ஏழைகள் மற்றும் நகர்ப்புறக் குடிசைவாழ் மக்கள் ஆகியோர் வீட்டுப் பிள்ளைகள் பள்ளிக் கல்வி பெற சிறப்புத் திட்டம் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை என்று தெரிவித்து, விடைபெற்று அமர்கிறேன்.

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை, 2-4-2008 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 2-4-2008 புதன்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.



நாளை, 2-4-2008 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (2-4-2008) புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்., வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

29. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

17. 2006–2007 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தணிக்கை அறிக்கை–ஆண்டுக் கணக்குகள். (தமிழ், ஆங்கிலம்)

V21, 3/08
108.441

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228401.
சென்னை-600 008
நூலகம்

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Principal Secretary to Government and
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.